DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

பஞ் சொக்கலிங்கம் BROKER
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1336 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 12, 2021

# ஒன்றாரியோ அரசு சார்ந்த செய்திகளை தொடர்ச்சியாக தாங்கிவரும் உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து அதன் ஆசிரியரையும் பாராட்டிய மாகாண கல்வி அமைச்சர் Stephen Lecce



”கனடா உதயன் பத்திரிகையின் செய்திச் சேவை மற்றும் அதன் சமூகப் பணி ஆகியவற்றை நானும் எனது சக அமைச்சர்களும் மாகாண அரசின் உறுப்பினர்களும் அறிந்துள்ளோம். எனவே. ஒன்றாரியோ அரசு சார்ந்த பயனுள்ள செய்திகளையும் தகவல்களையும் தொடர்ச்சியாக தாங்கி வரும் உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து அதன் ஆசிரியரையும் பாராட்டுவதில் நான் உவகை கொள்கின்றேன்” இவ்வவாறுதெரிவித்தார் கனடாவில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமாக ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வரும் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் **Hon Stephen Lecce**, அவர்கள்.

*(தொடர்ச்சி உள்ளே 15ம் பக்கத்தில்)*

# ஆசிரியர் போராட்டத்தில் பங்கேற்ற வேளையில் உயிரிழந்த தென்னிலங்கை ஆசிரியை வருணி அசங்காவுக்கு வட மாகாண பாடசாலைகளில் அஞ்சலி



அதிபர் – ஆசிரியர் சம்பள முரண்பாடு தீர்வினை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் இருந்த வேளை திடீரென உயிரிழந்த தென்னிலங்கை ஆசிரியை வருணி அசங்காவுக்கு வட மாகாண பாடசாலைகளில் அஞ்சலி செலுத்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஊடக சந்திப்பிலேயே இந்த முன்மாதிரியான அஞ்சலி ஏற்பாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுத இங்கு குறிப்பிடத்தக்கது

தற்போது இலங்கையில் முக்கிய பிரச்சனையாக வெடித்துள்ள அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடுகளுக்கான தீர்வினை வலியுறுத்தி நடத்தப்பட்டு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த வேளை திடீர் மாரடைப்பு காரணமாக மாத்தறை தெனியாய மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவு பாடசாலை ஆசிரியரான வருணி அசங்கா அகால மரணமடைந்தார்.

இந்நிலையில் அன்னாரின் தியாகத்திற்கு மதிப்பளித்து அஞ்சலி செலுத்தும் முகமாக வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் காலையில் 5 நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தி ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# தாமோர் நகை அடைவு மாளிகை
# THAMOR PAWN BROKER

THAMOR®

- கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
- நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
- குறைந்த வட்டி 2% இருந்து

தாமோர் வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்

உடனடியாக உங்கள் கைகளில்
குறைந்த வட்டியுடன் அடவு பிடித்துக்கொள்ள
தாமோர் அடவு மாளிகையை நாடுங்கள்



107 Dundas St, East (Second Floor)
Mississauga, ON, L5A 1W7

905-272-1222
Online service: www.remitbee.com


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### இலங்கைக்குப் பணம் அனுப்ப வேண்டுமா

RemitBee

- 500 டாலருக்கு மேல் அனுப்பும் பணத்திற்கு எந்தவிதமான கட்டணமும் கிடையாது
- *வேகமான பணப்பரிமாற்றம்
- கனடாவில் வேறு யாராலும் தரமுடியாத எக்ஸ்சேஞ்ச் ரேட்டை வழங்குகிறோம்



remitbee.com

Download on the App Store | GET IT ON Google Play

### HELP WANTED

411 College St, Toronto ON ல் அமைந்துள்ள Toby's Pub and Eatery என்னும் உணவகத்திற்கு Kitchen helper தேவை.

Day time/night time
Full time/part time.
Please call after 12 pm.

**416-879-3768**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Renovation Workers Wanted

Workers needed for the following jobs:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call: **416-706-8160**

### DZ Driver Wanted

DZ driver wanted
GTA and surrounding area.
Call Nathan

**416-520-1324**

or email:

**Sentax72@gmail.com**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### தொழிற்சாலை வேலைக்கு ஆட்கள் தேவை

தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
சிவா: (416) 402-7803
சசி: (416) 299-6742



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# சொந்த நாட்டு மக்களையும் உலக நாடுகளின் மக்களையும் ஏமாற்றும் அமெரிக்கா

'அமெரிக்கா' என்று எமது உதடுகள் உச்சரிக்கும் போதெல்லாம். 'அநியாயம்' என்ற வார்த்தையும் இணைந்து வாயிலிருந்து வந்து எமக்கு முன்பாக விழுவன என்பதை அனுபவ ரீதியாக அனுபவிப்பவர்கள் நாங்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வியட்னாம் தேசத்தில் மூக்கை நுழைத்து 'நொந்து போய்' வந்தவர்கள் இந்த அமெரிக்கர் என்னும் ஆக்கிரமிப்பாளரர்கள். அன்று தொடக்கம் நிக்கிரகுவா என்று ஆரம்பித்து சோவியத் யூனியன் வரை தனது ஆட்டத்தைக் காட்டி உலகில் இருந்த ஓர சில சோஷலிச நாடுகளையே அந்த அற்புதமான சிந்தனையிலிருந்து சிதைத்த சூத்திரதாரியே அமெரிக்கா தான்.

அமெரிக்காவில் எந்தக் 'கொம்பன்' ஆட்சிக்கு வந்தாலும். 'சிஐஏ' என்னும் அந்த நாசகார அமைப்பு தான் அமெரிக்க ஜனாதிபதிக்கு ஆலோசனை என்ற பெயரில் 'கட்டளைகளை' பிறப்பிக்கும் என்பதை அரசியல் தெரிந்தவர்கள் நன்கு புரிந்து வைத்துள்ளார்கள். இந்த வரிசையில் தான். ஆப்கான் என்னும் இஸ்லாமிய எமி-ரேட் அரசு அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கம் அமைவதை பின்னால் இருந்து இயக்கிய வண்ணம் அங்கு அநியாயமான சட்டங்களை. தலிபான்களைக் கொண்டே இஸ்லாத்திற்கும் அந்த மதத்தைக் கடைப்பிடிக்கும் மக்களையும் துன்புறுத்தியும் அழித்தும் வருகின்றன இந்த அமெரிக்கா என்னும் சர்வதேச அரச பயங்கரவாதத்தின் நாயகன்.

ஆப்கானிஸ்த்தானில் பெண் உரிமைகளை பாதுகாப்பது மற்றும் தீவிரவாதத்திற்கு ஆப்கான் மண்ணை பயன்படுத்துவதை அனுமதிக்காதது போன்ற கடப்பாடுகளை நிறைவேற்றும் வரை அந்த நாட்டுக்கு நிதி உதவி வழங்குவதற்கு அமெரிக்கா இன்னும் தயாராக இல்லை என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவன் தெரிவித்துள்ள நிலையில் இதை ஏளனம் செய்கின்றனர் இடதுசாரிச் சிந்தனைகளைக் கொண்ட பலர்.

"ஆப்கானிஸ்த்தானின் தற்போதைய தலைமைக்கு நேரடியாக நிதி அளிக்கும் நிலைமையில் நாம் இல்லை. நாம் விரும்புகின்ற நிலையில் தலிபான்கள் இல்லை. அனைத்திலும் முன்னேற்றம் ஏற்படும் வரை, அனைத்து தரப்பையும் உள்ளடக்கிய அரசாங்கம் தொடக்கம் ஏனைய அம்சங்கள் பற்றி நாம் தொடர்ந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். என்று அமெரிக்கத் தரப்பு தெரிவித்தாலும். ஆமெரிக்கா தான் தலிபான்களை ஊக்குவித்து வருகின்றது என்றும் அவர்கள் தான் நாட்டை சீரழிக்கின்றார்கள் என்றும் ஆப்கானிஸ்த்தானில் வாழ் நியாய விரும்பிகள் தெரிவித்து வருகின்றார்கள்.

சர்வதேச அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக தொடர்ந்து நிதி அளிப்பது பற்றியே நாம் அவதானம் செலுத்தி உள்ளோம்" என்று தொடர்ந்தும் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரிகள் உரத்துச் சொல்லியபடி இருந்தாலும். இதில் 'உண்மை' இல்லை என்பதே உண்மை என்று உலகிற்குக் கேட்கக் கூறுகின்றார்கள். உணர்வு மிக்க ஆப்கானிஸ்த்தான் பிரஜைகள்.

# 2018 இல் அதிகமானவர்களை கொல்ல எண்ணியவரின் வேன் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த பெண்மணி ஒருவரும் சிகிச்சை பலனின்றி மரணத்தை தழுவினார்



2018 இல் ரொறன்ரோவில் அதிகமானவர்களை கொல்ல எண்ணிய நபரின் வேன் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த நிலையில் தொடர்ச்சியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண்மணி ஒருவரும் தற்போது சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ரொறன்ரோ பொலிசார் வெளியிட்ட தகவலில், 65 வயதான **Amaresh Tesfamariam** என்பவர் கடந்த வாரம் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.
பரபரப்பான யங் வீதியில் நடைபாதையில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது அனா மினாசியன் என்பவர் வாடகை வேன் ஒன்றை வேகமாக செலுத்தி மக்களை கொல்லும் நோக்கோடு வாகனத்தால் தாக்குதலை நடத்தினார்.

கனடாவை மொத்தமாக உலுக்கிய இந்த கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தில் 10 பேர் கொல்லப்பட்டதுடன், 16 பேர் காயங்களுடன் தப்பினர். இந்த சம்பவத்தில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ரேணுகா அமரசிங்க என்னும் 45 வயதுடைய பெண்மணி கொல்லப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது..

இந்த நிலையில் 2018 ஏப்ரல் 23ம் திகதி நடந்த இந்த இரத்தத்தை உறைய வைக்கும் சம்பவத்திற்கு பிறகு, மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்ட யுஅயசநளா வுநளகயஅயசயைஅ மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த வேன் தாக்குதல் சம்பவத்தில் மரணமடைந்தவர்கள் எண்ணிக்கை பதினொன்றாக அதிகரித்துள்ளது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட கொலையாளி மீது முதல் நிலை கொலை வழக்கு பதியப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடைசியாக சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ள இந்த பெண்மணியின் மரமும் ஓர கொலை வழக்காகவே கருதப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். அதேவேளை. அதற்கு காரணமான கொலையாளி மீது இன்னொரு கொலை வழக்கு பதியப்பட மாட்டாது என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

# போர் வீரர்கள் நினைவு நாளில் கனடிய பாராளுமன்றத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமாகக் காணப்பட்ட பொதி...

## அஞ்சலி செலுத்த வந்த பிரதமர் பாதுகாப்பு அதிகாரிகளினால் தடுக்கப்பட்டார்



போர் வீரர்கள் நினைவு நாளில் கனடிய பாராளுமன்றத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமாகக் காணப்பட்ட பொதி ஒன்று அஞ்சலி செலுத்த வந்த பிரதமர் பாதுகாப்பு அதிகாரிகளினால் தடுக்கப்பட்டார். இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை ஒட்டாவா மாநகரில் நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கோவிட் 19 தொற்றில் பரவுகை தொடங்கியதிலிருந்து நாட்டின் தலைநகரில் நடந்த முதல் நினைவு நாள் விழா நேற்று வியாழக்கிழமை எளிமையான முறையில் நடத்தப்பட தீர்மானிக்கப்பட்டது, இதன் போது தான் காவல் நடவடிக்கைகளின் மத்தியில் ஒரு சந்தேகத்திற்கிடமான பொதி கண்டுபிடிக்கப்பட்டது, இதனால் அங்கு செல்ல் வேண்டி அரச உயர் மட்ட பிரமுகர்களின் வருகை தாமதமானது.

ஒட்டாவா நகரத்தில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் நடைபெற்ற விழாவிற்கு அருகாமையில் பொதி காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டு பின்னர் கனடாவின் மத்திய காவல்துறையான ஆர்சிஎம்பி அதிகாரிகள் கண்டெடுக்கப்பட்ட பொதியினால் ஆபத்து எதுவும் இல்லை என்று தெரிவித்த காரணததால் அந்தப் பொதி சந்தேகத்திற்கு சில நிமிடங்களுக்குப் பிறகு அது அழிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுத.
இந்த பொதி தொடர்பான சம்பவத்தினால் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது துணைவியாரான சோபி கிரெகோயர் ட்ரூடோ ஆகியோர் திட்டமிட்டதை விட சுமார் 10 நிமிடங்கள் தாமதமாக விழாவிற்கு செல்ல பாதுகாப்பு அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்டனர் -

மேலும் கனடாவின் புதிய ஆளுனர் நாயகமான மேரி சைமன் அவர்கள் தனது பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதிலிருந்து தனது முதல் நினைவு நாளைக் குறிக்கும் வகையில்,கலந்து கொள்ள வந்தபோது. அவரும் 10 நிமிடங்களுக்கு மேல் தாமதித்தே செல்வதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டார்
முன்னாள் போர் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் இந்த நாளில் கனடிய இராணுவத்தில் பணியாற்றிய மற்றும் தொடர்ந்து பணியாற்றுபவர்களை கௌரவிப்பதற்காக அனுசரிக்கப்படும் மௌன அஞ்சலிக்கு பினனர் ஆளுனர் நாயகம் சைமன் மணிகள் ஒலித்த பிறகு அந்த இடத்திற்கு வந்தார் என்றும் அறியப்படுகின்றது.

இதே வேளை இந்த பொதி தொடர்பான விடயத்தை அறிந்து கொள்ளாதவர்கள். சம்பவத்தின் தன்மையை புரிந்து கொள்ளாமலே பிர-தமர் ட்ரூடோ மற்றும் ஆளுனர் நாயகம் மேரி சைமன் இருவரும் தாமதமாக வருகை தந்ததை கண்டித்து சமூக ஊடகங்களில் விமர்சனத்தை வெளியிட்ட விடயம் பிரதமர் அலுவலகத்திற்கும் மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது.
நேற்று வியாழக்கிழமை காலை சம்பவம் கவலைக்குரியது இல்லை என்ற விடயம் பாதுகாப்பு அதிகாரிகளினால் கண்டறியப்பட்டாலும், இந்த ஞாபகார்த்த வைபவம் இடம்பெற்ற நடந்த இடமானது

2014 இல், தலைநகரில் கடமையில் இருந்த நேதன் சிரில்லோ என்னும் இராணுவ வீரர் தேசிய போர் நினைவிடத்தில் காவலர் பணியில் இருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார், அன்று பாராளுமன்ற வளாகமும் தாக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**CAREGIVER WANTED (LIVE-IN)**

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் மற்றும் தங்காலை கிளைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது



பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் மற்றும் தங்காலை கிளை வளாகத்தை நிர்மாணிப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (07) முற்பகல் அடிக்கல் நாட்டினார்.

நாட்டின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியாக பிரதேச அபிவிருத்தி வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு பல வசதிகளுடன் கூடிய சேவையை வழங்கும் நோக்கத்துடன் புதிய வங்கி வளாகத்தை நிர்மாணித்து வருகிறது.

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அவர்களின் அழைப்பின் பேரில் அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் கலந்து கொண்டார்.

புதிய வங்கி வளாகம் தங்காலை பெலியத்த வீதியை நோக்கியதாக நிர்மாணிக்கப்படும்.

குறித்த நிகழ்வில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கௌரவ இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, டீ.வீ.சானக, தேனுக விதானகமகே, ஜானக வக்கும்புர, பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஹிந்த சாலிய, பொது முகாமையாளரும், தலைமை நிறைவேற்று அதிகாரியுமான தமிதா குமாரி ரத்நாயக்க உள்ளிட்ட பிரதேச அபிவிருத்தி வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





- மன்னார் நிருபர்

# இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு மற்றும் கலாசார அபிலாஷைகளை உறுதிப்படுத்த இந்தியாவுக்கு உள்ள பொறுப்பை நாம் இன்னும் மதிக்கின்றோம்

## வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவிப்பு



இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் பொருளாதார மற்றும் கலாசார அபிலாஷைகளை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவுக்கு இருக்கும் தார்மீக ரீதியான கடமையினையும் பொறுப்பினையும் நாம் இன்னும் மதிக்கின்றோம். அத்துடன் ஏற்றுக்கொள்கின்றோம். எனவே நாம் இந்த கோரிக்கையை முன்வைக்க விரும்பியுள்ளோம். "அதிகார பகிர்வே தேசிய இனப்பிரச்சினைக்கான நிலையான தீர்வாகும்".

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இணைந்த வடக்கு கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டி, அதிகார கட்டமைப்பு ஒன்றின் கீழே தீர்வு சாத்தியமாகும். யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற தமிழ் கட்சிகளுக்கு இடையிலான கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைபு ஆவணம் பற்றி தெரிவித்தபோது திரு. விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எனவே சமஷ்டி கட்டமைப்பின் கீழ் இத்தகைய ஒரு நிலையான தீர்வினை ஏற்படுத்துவதற்கு இந்தியா அனைத்து விதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

குறுகிய அரசியல் இலாபம், தூர நோக்கற்ற சிந்தனை மற்றும் கடும் பௌத்த இனவாத சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாட்டில் இன்று ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனை கவனத்தில் கொண்டு தமிழ் பேசும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவும் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் கனமழை பாதிப்பை ஸ்டாலினிடம் தொலைபேசி மூலம் கேட்டறிந்த மோடி நிதி அளிப்பதாக உறுதியளித்தார்

தமிழகத்தில் பெய்துவரும் கனமழை பாதிப்புகள் குறித்து தொலைபேசி மூலம் கேட்டறிந்த பிரதமர் நரேந்திர மோடி பாதிப்புகளைச் சீர்செய்திட போதிய நிதி அளிப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் உறுதி அளித்தார். வடகிழக்குப் பருவமழை தீவிரமாகியுள்ள நிலையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் கடுமையான மழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு டெல்டா மாவட்டங்கள் மற்றும் கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. சென்னை நகரில் அதிகபட்சமாக 23 செ.மீ. அளவில் மழை பெய்துள்ளதால் பல்வேறு பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்திற்கு சென்னை மற்றும் தமிழகமெங்கும் பரவலாக கனமழை பெய்யும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் கனமழை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தொலைபேசி வாயிலாக பிரதமர் மோடி கேட்டறிந்தார். இதுகுறித்து தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: "தமிழ்நாட்டில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் இன்று தொலைபேசி வாயிலாக பிரதமர் மோடி கேட்டறிந்தார். அப்போது, முதல்வர் பிரதமரிடம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கனமழை குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் தெரிவித்தார்.



தமிழக அரசு மேற்கொண்டு வரும் நிவாரணப் பணிகள் பற்றியும் முதல்வர் ஸ்டாலின், பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

தமிழகத்தின் மாநிலப் பேரிடர் நிதியானது கரோனா நிவாரணப் பணிகளுக்கும், இதுவரை ஏற்பட்டுள்ள பல்வேறு பாதிப்புகளுக்கும் செலவு செய்யப்பட்டுள்ளதால், தேசிய பேரிடர் நிதியிலிருந்து போதுமான நிதியை ஒதுக்கீடு செய்துதர வேண்டும் எனவும் பிரதமரிடம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார். தமிழ்நாட்டில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர்செய்திட தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதாகவும், மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை நல்குவதாகவும் பிரதமர் மோடி உறுதியளித்தார்".

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.



# வடக்கு – கிழக்கு ஆயர்களுடன் இலங்கைக்கான சுவிஸ்லாந்தின் தூதுவர் சந்திப்பு!

வடக்கு, கிழக்கு ஆயர்களுடன் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸ்லாந்தின் தூதுவர் டொமினிக் பார்க்லர் சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று புதன்கிழமை மாலை உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்த சுவிஸ்லாந்து தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் வடக்கு கிழக்கு ஆயர்களை சந்தித்தார்.

இச்சந்திப்பில் வடக்கு கிழக்கு பகுதிகளில் தற்போது நிலவிவரும் அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது ஆயர்கள் இங்கு நிலவிவரும் தற்போதைய நெருக்கடி நிலைமைகளை எடுத்துக்கூறி, வடக்கு கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளில் அரசு அசமந்தப்போக்கு டன் செயற்பட்டு வருவதையும், இப்பிரதேசங்களில் இந்திய அரசு முன்னெடுக்க முனையும் பணிகளுக்கு தடைகளை ஏற்படுத்தி அபிவிருத்தி பணிகளை தென்பகுதியில் முன்னெடுக்க முயற்சிப்பதையும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மறைமுகமாகவும் நேரடியாகவும் அரசு முன்னெடுத்து வரும் சிங்களமயமாக்கல் செயற்திட்டங்களை விபரித்ததோடு மக்கள் இலங்கை அரசின் மீது கொண்டுள்ள அதிருப்தியையும் சுட்டிக்காட்டினர்.



# யோர்க் பல்கலைக் கழகம் வழங்கிய கல்விக் கட்டண தவிர்ப்புச் சலுகையை பயன்படுத்தி முதுகலைப் பட்டம் பெற்ற தமிழ் பேசும் 87 வயது அன்னை ஒருவர்

கனடிய செய்திகள்
Canadian News



கனடாவில் இயங்கிவரும் தலை சிறந்த யோர்க் பல்கலைக் கழகம் வழங்கிய கல்விக் கட்டண தவிர்ப்புச் சலுகையை பயன்படுத்தி முதுகலைப் பட்டம் பெற்ற தமிழ் பேசும் 87 வயது அன்னை ஒருவரை இந்தச் செய்தியின் ஊடாக அறிமுகம் செய்வதில் "கனடா உதயன்" மற்றும் "நண்பன்" ஊடக நிறுவனங்கள் பெருமை கொள்கின்றன.

இலங்கையைப்பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் பேசும் அன்னை ஒருவர் கனடாவின் யோர்க் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற மூத்த மாணவி என்ற பெருமையைப் பெற்றுள்ளார். வரதலெட்சுமி சண்முகநாதன் என்ற இவர் 4,000 மாணவர்களில் அரசியல் அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவராக விளங்குகின்றார். அவர் கடந்த செவ்வாய்க்கிழமை பட்டத்தைப் பெற்று அதன் மூலம் உலகெங்கும் உள்ள தமிழ் மக்களின் பாராட்டுக்களையும் பெற்று புகழின் உச்சத்திற்குச் சென்றுள்ளார்.

இந்த வெற்றிப் பெண்மணி. வரதலெட்சுமி சண்முகநாதன் கனடாவில் உள்ள தனது மகள் ஸ்பொன்சர் செய்ததன் மூலம் 2004 ஆண்டு கனடா வந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு, மூத்தவர்களுக்கான யோர்க்கின் கல்விக் கட்டணத் தள்ளுபடி ஊக்குவிப்பு பற்றிக் கேள்விப்பட்ட அவர், உடனடியாக தனது முதுமாணிப் பட்டத்தை பெறும் கற்றல் மற்றும் விண்ணப்பத்தில் தனது ஆர்வத்தைத் வெளிக்காட்டிய வண்ணம் கல்வியைத் தொடர முடிவு செய்தார்.

"அரசியல் அறிவியலில் ஏதாவது செய்ய வேண்டும் என்பது வாழ்நாள் முழுவதும் லட்சியமாக இருந்து வருகிறது. என் வாழ்நாள் முழுவதும் நான் அரசியல் மற்றும் அரசியல் அறிவியலில் ஆர்வமாக இருந்தேன்" என்று வரதலெட்சுமி சண்முகநாதன் கூறினார்.

இந்த வெற்றிப் பெண்மணி. வரதலெட்சுமி சண்முகநாதன் அப்பல்கலைக்கழகத்தின் மூத்த பட்டதாரி மட்டுமல்ல, கனடாவில் முதுகலைப் பட்டம் பெற்ற வயதான பெண்களில் இவரும் ஒருவர் என்று பல்கலைக்கழகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது 50 களின் நடுப்பகுதியில் லண்டன் பல்கலைக்கழகத்தின் பிர்க்பெக் கல்லூரியில் முதல் பட்டத்தைப் பெற்றார். இப்போது பெற்றுள்ளது இரண்டாவது பட்டம்.

யோர்க்கில் இருந்த போதிலும், தான் பிறந்து வளர்ந்த இலங்கையில் தனது படிப்பை மையப்படுத்தத் தேர்ந்தெடுத்தார். அவர் தனது பதின்ம வயதில் மகாத்மா காந்தியின் கொள்கையில் ஈர்க்கப்பட்டார்.

"நான் பிறந்த நாடான இலங்கை பற்றியே நான் கவனம் செலுத்தினேன், ஏனென்றால் இலங்கை கடந்த 50 ஆண்டுகளாக செய்திகளில் முக்கியத்துவம் பெறும் வகையில் அரசியலில் இடம் பிடித்துள்ளது. இலங்கைக்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்தது. அன்றிலிருந்து இலங்கையின் செய்திகள் எப்பொழுதும் அமைதி மற்றும் போர் என்பதாகவே இருக்கும்" என்று அவர் கூறினார்.

இந்த வெற்றிப் பெண்மணி. வரதலெட்சுமி சண்முகநாதன் வட இலங்கையில் பிறந்து, இளங்கலைப் பட்டம் பெற்று இந்தியாவுக்குப் பயணம் செய்தார். அங்கு பட்டம் பெற்ற பிறகு, அவர் இலங்கை திரும்பினார். ஒரு உள்ளூர் பாடசாலையில் இந்திய வரலாறு மற்றும் ஆங்கிலம் கற்பித்தார். பின்னர் கல்வியில் டிப்ளோமா பெற்றார்.

கனடாவுக்கு குடிபெயர்வதற்கு முன்பு, சண்முகநாதன் இங்கிலாந்தில் வசித்து வந்தார். அங்கு அவர் படித்தார். பின்னர் உயர்நிலைப் பாடசாலையில் ஆங்கிலம், பொருளாதாரம் மற்றும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக (ESL) கற்பித்தார்.

இந்த வெற்றிப் பெண்மணி. வரதலெட்சுமி சண்முகநாதன் 85 வயதில், 2019 இலையுதிர்/குளிர்கால அமர்வில் அரசியல் அறிவியலில் முதுகலை திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

"நான் எப்பொழுதும் A அல்லது A மைனஸைப் பெற விரும்பினேன். எல்லா வழிகளிலும் எனக்கு A அல்லது A மைனஸ் கிடைத்தது" என்று அவர் கூறினார்.

இந்த வெற்றிப் பெண்மணி. வரதலெட்சுமி சண்முகநாதன் வளாகத்தில் தனது சக தோழர்களிடையே பழக உற்சாகமாக இருந்த போதிலும், கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக அந்த நேரம் குறைக்கப்பட்டது. மாறாக தன் மகள், மருமகன் மற்றும் நான்கு வயது பேரனுடன் வீட்டில் படிப்பதில் பெரும்பகுதியைக் கழித்தார்.

"பி.எச்.டி செய்ய விரும்பினேன், ஆனால் நான் எம்.ஏ (முதுகலை) செய்ய வந்தேன். ஏனென்றால் நான் அதை முடித்து விட்டு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன். இது பற்றி நான் ஒரு நூல் எழுதப் போகிறேன்" என்றார் அவர். சண்முகநாதனின் நூல் போருக்குப் பிந்திய இலங்கை பற்றிய அவரது ஆய்வாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று கனடாவில் இவரோடு தொடர்புடைய கல்விமான் ஒருவர் தெரிவித்தார்.

# ஒன்றாரியோவில் மூத்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்புக்கள் எமது அரசிற்கு அதிகரித்துள்ளன

## தமிழ் மொழி ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஒன்றாரியோ மாகாண அமைச்சர் றேமண்ட் சோ தெரிவிப்பு

"ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட்-19 இன் தாக்கத்திற்கு பின்னர் பல சவால்களை எமது அரசாங்கம் எதிர்கொள்கின்றது. இந்த நோய்த் தொற்றிலிருந்து ஒன்றாரியோ மக்களை காப்பாற்றும் பொறுப்புக்களுக்கு அப்பால். மாகாணத்தில் உள்ள மூத் தோரின் நலன்களைப் பேணுதல் மற்றும் அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகிய பணிகள் அதிகரித்துள்ளன. இந்த வேளையில் இங்கு மூத்தோரின் (SENIORS) எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்புக்கள் எமது அரசிற்கு அதிகரித்துள்ளது.

எனினும் முதியோர்களுக்கான நீண்ட கால கவனிப்பு வதிவிடங்கள் மற்றும் அவர்களின் ஒய்விற்கு பின்னரான இல்லங்கள் ஆகியவற்றின் மீது அரசாங்கம் காட்டும் அக்கறை மற்றும் கவனிப்பு ஆகியன அதிகரித்த வண்ணம் உள்ளன".



இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாண மூத்தோர் மற்றும் வசதிகளை பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அமைச்சர் றேமண்ட் சோ அவர்கள்.

ரொறன்ரோ பெரும் பாகத்தில் உள்ள தமிழ் மொழி சார்ந்த ஊடகவியலாளர்களுக்ககாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த விசேட சந்திப்பின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்காபுறோவில் இடம் பெற்ற இந்த சந்திப்பை தமிழ் பேசும் மாகாண பாராளுமன்ற உறுப்பினரும், மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான திரு விஜேய் தணிகாசலம் நெறிப்படுத்தினார்.


அவர் முதலில் அமைச்சர் றேமண்ட் சோ அவர்கள். பற்றிய அறிமுகத்தை தெரிவித்த போது "தற்போதைய ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சரவையில் அனுபவமும் வயதும் அதிகம் கொண்டவராக விளங்கும் ஒருவரை தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் அறிமுகம் செய்வதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். அவரது அரசியல் அனுபவம் என்பது எனது வயதை விட அதிகமானதாகும் என்பதை நான் அறிவேன். அவருக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன. மேலும், தனது நீண்ட கால அனுபவத்தால் மக்களுக்கு சேவையாற்றும் வழிகளை நன்கு தெரிந்து வைத்துள்ள அமைச்சர் அவர்கள் தனது பதவிமூலமாக மக்களுக்கு தகுந்தசேவையாற்றி வருகின்றார் என்பதை நாம் நன்கு அறிவோம். எனவே இன்று அவரோடு இன்று நாம் கலந்துரையாடுவதன்மூலம் எமது அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி கலந்துரையாடுவோம்" என்று தெரிவித்தார்.



தொடர்ந்து தனது கருத்துக்களை முன்வைத்த அமைச்சர் றேமண்ட் சோ அவர்கள் தொடர்ந்துபேசுகையில் "எமது மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் முதியோர்களுக்கான நீண்ட கால கவனிப்பு வதிவிடங்கள் மற்றும் அவர்களின் ஒய்விற்கு பின்னரான இல்லங்கள் ஆகியவற்றின் மீது கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் வகையில் பரிசோதகர்களை நியமித்து அங்கு எமது மூத்தோர்கள் எவ்வித இடையூகளும் இன்றி, உடல் நலம் நன்கு பேணப்பெற்று இருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் வைத்தியசாலைகளிலும் நோயாளர்களுக்கான படுக்கை வசதிகளும் அதிகரிக்கப்பெற்று வைத்தியசாலைகளுக்குச் செல்லும் எமது மக்கள் தகுந்த சேவையை பெறுவதை உறுதி செய்வதில் எமது அரசாங்கம் உறுதியாக உள்ளது" என்றார்.

தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் றேமண்ட் சோ அவர்களும் மாகாண பாராளுமன்ற உறுப்பினரும், மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான திரு விஜேய் தணிகாசலம் ஆகியோர் இணைந்து பதிலளித்தார்கள். பல பயனுள்ள கேள்விகள் அங்கு வினாவப்பெற்றன. குறிப்பாக. ஸ்காபுறோவில் அமையப் போகின்ற "தமிழர் சமூக மையம்" தொடர்பாகவும் அங்கு ஏற்படுத்தப்படவுள்ள வசதிகள் மற்றும் மண்டபங்கள் தொடர்பாகவும் உரையாடப்பட்டன.

இறுதியில் அமைச்சர் றேமண்ட் சோ அவர்கள் மாகாண பாராளுமன்ற உறுப்பினரும், மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான திரு விஜேய் தணிகாசலம் தொடர்பாக தனது கருத்துக்களைச் சொல்லியபோது தற்போது ஒரு அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராக உள்ள அவர் மீண்டும் அடுத்த 2022ம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில். வெற்றி பெற்று அமைச்சராகப் பதவியேற்பார் என்றும் வாழ்த்தி விடைபெற்றார்.



- செய்தியும் படங்களும்: சத்தியன்

# சென்னையில் தொடரும் கனமழை: விமானங்கள் வருகை மாலை வரை ரத்து

சென்னையில் நேற்று மாலை முதல் பெய்துவரும் கனமழை மற்றும் காற்று காரணமாக சென்னைக்கு விமானங்கள் வருகை மாலை வரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக சென்னை விமான நிலையம் அறிவித்துள்ளது.தென்மேற்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை, தீவிர காற்றழுத்தழுத்தத் தாழ்வுப்பகுதி, தாழ்வு மண்டலமாக மாறி நகர்ந்து வருகிறது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் சென்னையில் நேற்று மாலை முதல் பரவலாக கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது.




காற்றழுத்த தாழ்வு மண்டலம் கடந்த 6 மணி நேரத்தில் 4 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது. சென்னை வானிலை மையம் சில மணிநேரத்துக்கு முன் வெளியிட்ட அறிவிப்பின்படி சென்னைக்குத் தென்கிழக்கில் 130 கி.மீ. தொலைவிலும், புதுவைக்கு தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவிலும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளது. இது மேலும் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து மாலை கடக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.சென்னையில் நேற்று மாலை முதல் பெய்துவரும் மிக கனமழையால், சென்னையில் பல சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல் ஓடுகிறது. பல்வேறு பகுதிகளில் மரங்கள் சாய்ந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வேளச்சேரி உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளது.சென்னையின் பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை துண்டிக்கப்பட்ட மின்சாரம் இன்னும் வராததால் மக்கள் பெரிய சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். இன்று மாலை வரை கனமழை நீடிக்கும், மணிக்கு 45 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என வானிலை மையம் எச்சரித்துள்ளது.மேலும் சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.சென்னையில் பெய்துவரும் கனமழைக்கு இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னையில் தொடர்ந்து மழை பெய்து வருவதையடுத்து விமான வருகை ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேசமயம், சென்னையிலிருந்து விமானங்கள் புறப்படுவதில் எந்தத் தடையும் இல்லை.

இதுகுறித்து சென்னை விமான நிலையம் ட்விட்டரில் வெளியிட்ட அறிவிப்பில், “ தீவிரமான மழை மற்றும் காற்று காரணமாக, சென்னை விமான நிலையத்துக்கு வரும் விமானங்கள் பிற்பகல் 1.15 மணி முதல் மாலை 6 மணிவரை ரத்து செய்யப்படுகின்றன. அதே நேரம், விமானப் புறப்படுவது வழக்கம் போல் இருக்கும். பயணிகளின் நலன் கருதி, தீவிரக் காற்று காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தீவிரமான மழை, வானிலை காரணமாகப் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்’’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைப் பெரியாற்றில் புதிய அணை? வஞ்சக வலையில் வீழ வேண்டாம்: கேரளாவுடன் பேசக்கூடாது - ராமதாஸ்



முல்லைப் பெரியாற்றில் புதிய அணை வேண்டாம் எனவும் கேரளத்துடன் பேசக்கூடாது என்றும் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.இதுகுறித்துப் பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை: ‘’முல்லைப் பெரியாற்றின் குறுக்கே புதிய அணை கட்டுவது குறித்து தமிழ்நாட்டுடன் முதல்வர் நிலையிலான பேச்சுகளை அடுத்த மாதம் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகக் கேரள அரசு தெரிவித்திருக்கிறது.

முல்லைப்பெரியாற்று அணையில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமைகளைப் பறிக்கும் நோக்கத்துடன் கேரளம் விரித்துள்ள இருதரப்புப் பேச்சு என்ற வஞ்சக வலையில் தமிழகம் ஒருபோதும் வீழ்ந்துவிடக் கூடாது.கேரள சட்டப்பேரவையில், முல்லைப்பெரியாற்றில் புதிய அணை கட்டுவது குறித்த உறுப்பினர் ஒருவரின் வினாவுக்கு, அம்மாநில நீர்வளத்துறை அமைச்சரின் சார்பில் விடையளித்துப் பேசிய மின்சாரத்துறை அமைச்சர் கே.கிருஷ்ணன் குட்டி,‘‘முல்லைப்பெரியாற்றில் புதிய அணை கட்டுவது குறித்து தமிழ்நாட்டு அரசுடன் பல்வேறு நிலைகளில் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், அவை தோல்வியடைந்து விட்டன. அதைத்தொடர்ந்து டிசம்பர் மாதத்தில் தமிழ்நாடு கேரள முதல்வர்களிடையே புதிய அணை கட்டுவது குறித்து பேச்சு நடத்துவதெனக் கேரள அரசு முடிவு செய்துள்ளது’’ எனக் கூறியுள்ளார்.

முல்லைப்பெரியாற்றில் புதிய அணை கட்டுவது குறித்து, கேரள அமைச்சர் கூறியதைப் போல கடந்த காலங்களில், தமிழகம் மற்றும் கேரளம் இடையே பேச்சுகள் நடந்ததா? என்பது தெரியவில்லை. அவ்வாறு பேச்சு நடத்தப்பட்டிருந்தால் அது பெரும் தவறு ஆகும். அதுமட்டுமின்றி, முல்லைப்பெரியாற்றில் புதிய அணை கட்டுவது குறித்துப் பேச கேரள அரசிடமிருந்து அழைப்பு வந்தால் அதைத் தமிழகம் ஏற்கக்கூடாது.முல்லைப்பெரியாற்று அணை விவகாரத்தில் கேரளத்திற்கு எப்போதெல்லாம் பின்னடைவு ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் புதிய அணை குறித்து பேச்சு நடத்த வரும்படி தமிழகத்திற்கு அழைப்பு விடுப்பதைக் கேரள அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது. முல்லைப் பெரியாற்று விவகாரத்திற்கு ஏற்கனவே தீர்வு காணப்பட்டு விட்டது. இத்தகைய சூழலில் முல்லைப் பெரியாற்றுச் சிக்கலுக்கு மீண்டும் உயிரூட்டவே கேரளா இப்போது பேச்சு நடத்த அழைப்பு விடுக்கிறது. இந்த உண்மையைத் தமிழக அரசு உணர வேண்டும்.

முல்லைப்பெரியாறு அணை வலிமையாக உள்ளது; அதன் நீர்மட்டத்தை முதலில் 142 அடியாகவும், பின்னர் 152 அடியாகவும் உயர்த்திக்கொள்ளலாம் என்று 2006ம் ஆண்டில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அதன்பின் 2014ம் ஆண்டில் அளித்த தீர்ப்பில் ‘‘அணை மிகவும் வலிமையாக உள்ளது. அங்கு புதிய அணை கட்டினால் எவ்வளவு வலிமையாக இருக்குமோ, அதைவிடக் கூடுதல் வலிமையுடன் இப்போதைய அணை உள்ளது. எனவே, புதிய அணை தேவையில்லை. மாறாக அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்’’ என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன்பின்னர் இதுவரை 7 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த முடியவில்லை. முல்லைப்பெரியாற்று அணையின் அங்கமாக உள்ள பேபி அணையை வலுப்படுத்தக் கேரளம் தொடர்ந்து முட்டுக்கட்டை போடுவதுதான் இதற்குக் காரணம்.கேரளத்தில் தற்போது பெய்து வரும் மழையைக் காரணம் காட்டி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தனி நபர்கள் மூலம் சில வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால், அதை ஏற்க மறுத்துவிட்ட உச்ச நீதிமன்றம் இப்போதுள்ள நீர்மட்டம் தொடரலாம் என்று கூறி விட்டது.

மற்றொருபுறம் பேபி அணையை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக அந்தப் பகுதியில் உள்ள 15 மரங்களை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கும்படி உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட கண்காணிப்புக்குழு கேரள அரசுக்கு ஆணையிட்டுள்ளது. மரங்களை வெட்ட அளிக்கப்பட்ட அனுமதியை கேரளம் ரத்து செய்து விட்டாலும்கூட, விரைவில் அனுமதி அளித்துதான் ஆக வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்டால் அடுத்த சில மாதங்களில் பேபி அணையை வலுப்படுத்தி, உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்று நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த முடியும். அதைத் தடுக்கவே கேரளம் துடிக்கிறது. முல்லைப்பெரியாறு அணையின் நீர் தேக்கப்பகுதிகளில் ஏராளமான சொகுசு விடுதிகளும், கேரளத்து பிரபலங்களின் மாளிகைகளும் கட்டப்பட்டுள்ளன.

அணையின் நீர்மட்டம் 152 அடியாக உயர்த்தப்பட்டால் அவை நீரில் மூழ்கி விடும். அத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தடுக்கவே அணையின் நீர்மட்டத்தை உயர்த்தும் தமிழக அரசின் முயற்சிகளுக்கு கேரள அரசு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது.முல்லைப்பெரியாறு சிக்கலைப் பேசித் தீர்க்கும்படி 2006ம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டதால், அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதியும், கேரள முதல்வர் அச்சுதானந்தனும் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் முன்னிலையில் அந்த ஆண்டு நவம்பர் 29ம் தேதி டெல்லியில் பேசினார்கள். அதைத்தொடர்ந்து டிசம்பர் 18ம் தேதி இரு மாநில பாசனத்துறை அமைச்சர்களான துரைமுருகனும், பிரேமசந்திரனும் பேசினார்கள். இருகட்டப் பேச்சுகளும் தோல்வி அடைந்தன.

இந்தப் பேச்சுகளைப் பயன்படுத்தி முல்லைப்பெரியாறு வழக்கை விசாரணையை கேரள அரசு 7 ஆண்டுகள் தாமதப்படுத்தியது. அதேபோல், இப்போதும் புதிய அணை குறித்து தமிழகத்தைப் பேச்சுக்கு அழைப்பதன் மூலம் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்த்தப்படுவதைத் தடுக்கவும், புதிய அணை குறித்த விவாதங்களுக்குப் புத்துயிரூட்டவும் கேரளம் துடிக்கிறது. இதற்குத் தமிழக அரசு வாய்ப்பளித்துவிடக் கூடாது.எனவே, முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்டுவது உள்ளிட்ட எந்த சிக்கல் குறித்தும் கேரள முதல்வருடன் தமிழக முதல்வர் பேச்சு நடத்தக் கூடாது. மாறாக, பேபி அணையை வலுப்படுத்தி அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கான பணிகளை அரசு விரைவுபடுத்த வேண்டும்’’.இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் மழை பாதிப்பு: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 5வது நாளாக ஆய்வு



வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது சென்னைக்கு அருகே இன்று மாலை கரையை கடக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ள நிலையில், சென்னையில் நேற்று மாலை 3 மணிக்கு தொடங்கிய மழை இரவு முழுவதும் விடிய, விடிய கொட்டித் தீர்த்தது.

மேலும் தற்போது வரை சென்னையின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சென்னையின் முக்கிய சாலைகளிலும், குடியிருப்பு பகுதிகளிலும் மழைநீர் தேங்கியுள்ளது. சென்னை மட்டுமின்றி புறநகர் பகுதிகளிலும் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. பல்வேறு இடங்களில் தண்ணீர் வடியாததால் பலர் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் மழை, வெள்ள பாதிப்புகள் தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 5வது நாளாக இன்று நேரில் ஆய்வு செய்தார். அப்போது சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள உணவு தயாரிக்கும் இடத்திற்கு நேரில் சென்ற முதல் அமைச்சர் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட உணவை ருசி பார்த்து தரத்தினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது அமைச்சர்கள் சேகர்பாபு, கே.என்.நேரு, எ.வ. வேலு, மாநகராட்சி ஆணையர் ககந்தீப் சிங்பேடி ஆகியோர் உடன் இருந்தனர்.

உலக செய்திகள்
World News

# தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் வைத்தியர்களினால் ஒரு கோடி ரூபாய்க்கு பெறுமதியான சுவாசத்துக்கு உதவும் கருவிகள் அண்மையில் வடக்கு கிழக்கு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் கல்வி பயின்று தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் வைத்தியர்களினால் (JMFOA – Jaffna Medical Faculty Overseas Alumni (Canada)) இலங்கைப் பெறுமதி ஒரு கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட பெறுமதியான சுவாசத்துக்கு உதவும் கருவிகள் வடக்கு கிழக்கு வைத்தியசாலைகளுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

JMFOA- Canada சார்பில் அதன் தலைவர் வைத்தியகலாநிதி Dr.ஆ. மயிலாஷன் அவர்களினால் இக்கருவிகள் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி மற்றும் தலைமை வைத்திய அதிகாரிகள் ஆகியோரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டது.

அதேவேளை JMFOA- Canada அமைப்பானது COVID தொற்று இலங்கையை கடுமையாக தாக்கிய காலப்பகுதியில், வடக்கு கிழக்கு





மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்ட வைத்தியசாலைகள், மாவட்ட, மாகாண வைத்திய தலைமை அதிகாரிகளை, வெளிநாடுகளில் உள்ள மருத்துவ அமைப்புகளுடன் நேரடியாக தொடர்புகளை ஏற்றபடுத்தி ஒரு நியாயமான பரந்துபட்ட உதவிகள் கிடைக்க ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தமை, குறிப்பிடத்தக்கதாகும்.



மேலும் JMFOA- Australia அமைப்பானது, இலங்கை பெறுமதியில் ஒரு கோடிக்கு மேற்பட்ட COVID அவசரகால வைத்திய உபகரணங்களை வடக்கு கிழக்கு வைத்தியசாலைகளுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

JMFOA அமைப்பானது அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, , நியூசிலாந்து போன்ற நாடுகளில் இயங்குவதோடு யாழ் மருத்துவபீடம், வைத்தியசாலைகள் என பல தரப்பட்ட மருத்துவ நிறுவனகளுக்கு தமது உதவிகளை கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக வழங்கி, கல்வி மற்றும் மருத்துவ முன்னேற்றத்துக்கும் அதன் ஒருங்கமைக்கப்பட்ட வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றது.

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் பலவழிகளில் தாய்நாட்டுக்கு உதவி புரிந்துவரும் இந்தப் புலம்பெயர் வைத்தியர்களின் சேவை பாராட்டுதற்குரியது.

# பாகிஸ்தானில் இம்ரான் கான் பதவிக்கு வந்த பின்னர் வெகுவாகக் அதிகரித்துள்ள ஊடகவியலாளர்கள் கைதுகள்

## எல்லைகளைத் தாண்டிய ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவிப்பு

பாகிஸ்தானின் 74 வருட வரலாற்றில் ஏறக்குறைய அரைவாசி காலப் பகுதி இராணுவ அட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதோடு அரசாங்கத்தின் மீதான இராணுவத்தின் செல்வாக்கு இம்ரான் கான் பதவிக்கு வந்த பின்னர் வெகுவாகக் அதிகரித்துள்ளதாக எல்லைகளைத் தாண்டிய ஊடகவியலாளர்கள் என்ற சர்வதேச அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் நடைமுறையில் உள்ள இணைய வெளிக்குற்றங்கள் தொடர்பான சட்டம் பாக். ஊடகவியலாளர்களை அடக்கி ஒடுக்குவதற்கு பயன்படுவதாகவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 23 ஊடகவிலாளர்கள் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிரீடொம் நெட்வேர்க் என்ற பாகிஸ்தான் ஊடக கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த 23 ஊடகவியலாளர்களில் 13 பேருக்கு எதிராக குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் ஒன்பது ஊடகவியலாளர்கள் கைதாகி இருப்பதாகவும் அறுவர் இரண்டு மாத காவலின் பின்னர பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அமைப்பு மேலும் தெரிவித்திருக்கிறது.




ஆயுதப் படையினரின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவித்தமை, நீதித்துறையின் கெரவத்துக்கும் ஊறுவிளைவித்தமை என்பது இந்த ஊடகவியலாளர்களின் மீதான குற்றச்சாட்டுகளில் சிலவாகும். ஒருவர் மீது சதி முயற்சிக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் 24 மணித்தியாலமும் செயல்படும் தொலைக்காடசிகள், பல செய்திப்பத்திரிகைகள், இணையதளங்கள், ஊடகவியலாளர்களினால் இயக்கப்படும் "யூடியூப்" பக்கங்கள் என்பன செயற்பாட்டில் உள்ளன. அந்நாட்டின் ஆட்சியிலும் அரசியலிலும் அந்நாட்டு இராணுவம் தலையீடு செய்வது போன்ற விடயங்கள் தொடர்பில் செய்திகள், கட்டுரைகள் வெளியிட வேண்டாம் என அதிகாரிகளினால் கேட்கப்படுவதாக மனித உரிமை குழுக்களும் ஊடகவியலாளர்களும் தெரிவித்து வருகின்னர்.

இவ்வாறு விடுக்கப்படும் எச்சரிக்கைகளை அலட்சியப்படுத்தும் செய்தி தொலைக்காட்சி ஊடகங்களின் சமிக்ஙைகளில் இடையூறு செய்தல், பத்திரிகைகளின் விநியோகத்தில் ஊறுவிளைவித்தல் மற்றும் இராணுவத்தை விமர்சிக்கும் செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்களை கடத்திச் செல்லல் என்பன இடம்பெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இணைய வெளிக்குற்றங்கள் தொடர்பான சட்டத்தை பாக். ஊடகவியலாளர்களை அடக்கி வைக்கும் ஒரு உத்தியாக அரசாங்கம் பயன்படுத்துவதாக 2019ம் ஆண்டு அல்ஜஸீரா மேற்கொண்ட ஒரு ஆய்வில் குறிப்பிடப்பட்டிருந்தது.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

TAMILS SOCIETY OF PEEL
பீல் தமிழ் முதியோர் சங்கம்
Not profit Registration # 1406004 (Established in 1999)

JOB POSTING – PROJECT COORDINATOR DATE NOVEMBER 1 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors & others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active & healthy lifestyle by organizing weekly activities and health seminars.

The project coordinator will report to the STSP secretary & will work on.
- Ensuring project activities adheres to provided timelines & deliverables
- Ensuring documentation is maintained throughout the length of the project
- Communicating plans, actions, & issues with Board of directors
- Working with the STSP treasurer to record all financial transactions & creating monthly financial reports for projects
- Analyzing project data & producing progress reports
- Teaching basic computer programs such as Word, Excel & Zoom to seniors
- Maintaining & updating the STSP Webpage periodically
- Support in organizing the weekly activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:
- Diploma/Degree in Accounting & Computer programs
- Two years' experience working on computerized accounting such as Quick Books
- Experience in teaching basic computer programs
- Experience on designing & updating websites
- Effective interpersonal, communication & organizational skills
- Working knowledge of community resources & services for seniors in Peel & relevant government programs and policies
- Ability to work with a teams of seniors
- Fluency in Tamil & English languages

Salary and benefits: Negotiable & according to the experience
Duration of engagement:
Minimum of one year on part time basis with possible extension.
Minimum 20 hours per week working hours required.

Deadline for application: November 10, 2021
Please forward your application with your updated resume by email to:
info@peeltamilseniors.ca
Nadarajah Moorthy
Secretary
Cell: (416) 473-5380, nmoorthy10@gmail.com

250 Dundas Street West , Unit 206, Mississauga, Ontario, L5B 1J2
Tel: 905-290-3000
Email: info@ peeltamilseniors.ca, peelseniortamils@hotmail.com
Visit us at www.peeltamilseniors.ca

# சித்திரவதையில் ஈடுபட்ட அதிகாரிகள்: அறிக்கை கேட்கும் நீதிமன்றம்



இலங்கையில் போர்க்காலம் தொடங்கி இன்று வரை தீராமல் அல்லது தீர்க்க விருப்பமில்லாமல் இருக்கும் ஒரு பிரச்சனை விசாரணையின்றி ஆட்களை தடுத்து வைப்பது. இது உடல் ரீதியான சித்திரவதை என்பதைவிட மன ரீதியான சித்திரவதை என்பதே உண்மை. மேலும் இப்படி ஆட்களை வழக்கு பதிவு மற்றும் விசாரணையின்றி தடுத்து வைப்பது அடுத்தவர்களுகான ஒரு பாடம் எனும் எண்ணப் போக்கும் அரசிடம் உள்ளது.


ஜனநாயக விழுமியங்களை கடைப்பிடிப்பதாகவும், நாகரீமான ஒரு சமூகம் நிலவுவதாகவும் கூறும் நாடுகளில் இப்படி நீண்ட ஆண்டுகளாக "சட்டவிரோதமாக" வழக்குப் பதிவு மற்றும் விசாரணையின்றி தடுப்பு வைப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கும்.

ஆனால் இந்த இலக்கணங்களுள் இலங்கை வருமா என்று கேட்டால் அதற்கு விடை கிடையாது. ஏனெனில் அங்கு 40 ஆண்டுகளாக போர் என்ற போர்வையில் ஜனநாயகம் நசுக்கப்பட்டு சட்டத்தின் ஆட்சி குப்பைக் கூடையில் வீசி எறியப்பட்டதே நடைபெற்றுள்ளது என்று மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன.

இந்த விஷயம் தொடர்பில் தொடர்ச்சியாக பன்னாட்டு அழுத்தம் இலங்கை மீது அதிகரித்து வருகிறது. சர்வதேச நிதி நிறுவனங்களின் நெருக்கடி, கடன் கொடுக்க யாரும் முன்வராத நிலையில், ஏற்றுமதி வரிச்சலுகையான ஜி எஸ் பி+ இலங்கைக்கு தொடர்ந்து கிடைக்குமா என்பதிலுள்ள கேள்விக்குறிகள் என்று பல அம்சங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் நாடு உள்ளது.

அவ்வகையில் பன்னாட்டுச் சமூகத்தையும், மனித உரிமை அமைப்புகளையும் சமாதானப்படுத்த வேண்டிய நிலையிலுள்ள இலங்கை வழக்கு விசாரணையின்றி நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் சில முன்னெடுப்புகளைச் செய்ய விழைகிறது. அதன் மூலம் தம்மீதான நம்பிக்கை சிறிதேனும் அதிகரிக்கக் கூடும் என்று அரசு நம்புகிறது.

அவ்வகையில், பயங்கரவாத சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக சாட்சியமளிக்குமாறு, சித்திரவதைக்கு உட்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவை குற்றவாளியாக்குவதற்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர், சித்திரவதை செய்ததாகக் காவலில் உள்ள சேவ் தி பேர்ல்ஸ் அமைப்பின் மொஹமட் சுல்தான் கோட்டை நீதவானிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர், தன்னை சித்திரவதை செய்த மூன்று பேரின் பெயர்களை கோட்டை நீதவான் பிரியந்த பெர்னாண்டோவிடம் தெரிவித்துள்ளார்.

பதினெட்டு மாதங்களுக்கு முன்னர், ஒரு மதரஸாவில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காக மொஹமட் சுல்தான் கைது செய்யப்பட்டார்.

சித்திரவதை காரணமாக தனக்கு இன்னும் முதுகுத்தண்டு குறைபாடு இருப்பதாக அவர் கூறியதையடுத்து, அவரை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்பத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, சட்டத்தரணி ஹிஸ்புல்லாவை குற்றவாளியாக்கும் நோக்கில், சித்திரவதை செய்யப்பட்டதாக, அல் சுஹாரியா அரபுக் கல்லூரியின் இரண்டு ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

மொஹமட் சுல்தானை பிணையில் விடுவிப்பதற்கு, பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் மறுப்பு வெளியிடப்பட்ட நிலையில், நவம்பர் 10ஆம் திகதி வரை மொஹமட் சுல்தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு அன்றைய தினத்தில், வைத்திய மற்றும் பொலிஸ் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.




ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்ற சட்டத்தரணி, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், ஏப்ரல் 2020 இல் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டதோடு, மேலும் அவர் மத்ரஸா பாடாலையில் விரிவுரை நடத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் அஹ்னா·.ப் ஜசீம் ஆகியோர் குறித்து இஸ்லாமிய நாடுகள் கடும் விசனம் தெரிவித்துள்ளன. அவர்கள் மீது தவறுள்ளது என்று அரசு கருதினால் உடனடியாக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் அல்லது அவர்கள் விடுதலைச் செய்யப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் இலங்கை மீது அதிகரித்து வருகின்றன.

அதே போன்று மிக நீண்டகாலமாக வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விஷயத்திலும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகள் அழுத்தங்களை அளித்து வருகின்றன.

அடுத்த மூன்று மாதங்களில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் இலங்கை என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை சர்வதேசம் அவதானித்து வருகிறது.



# கீழடி தமிழர்களின் தொன்மையை கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கு பின்னோக்கி நகர்த்தியுள்ளது!

- கனடா நக்கீரன்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

பண்டைய மக்கள் வாழ்ந்த பலதிறப்பட்ட இடங்களை அறிந்து அகழ்ந்து பார்த்து அவ்விடங்களில் காணப்படும் பொருட்களை ஆராய்ந்து அவற்றைப் பற்றித் தோன்றும் செய்திகளையும் அவற்றைப் பயன்படுத்திய மக்களைப் பற்றிய விவரங்களையும் அறியும் முயற்சியே தொல்பொருள் ஆராய்ச்சி ஆகும். பல்லாரி மாவட்டத்தில் பெருங்கற்கள் அடுக்கிக் கட்டப்பட்ட பல வகைச் சமாதிகள் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அனந்தப்பூர் மாவட்டத்தில் கற்கால மக்கள் பயன்படுத்திய கல் உளிகள், எந்திரங்கள், கத்திகள் முதலியன புதைபொருள் ஆராய்ச்சியில் சிக்கின. செங்கற்பட்டு மாவட்டத்தில் (பல்லாவரம்) சவக்குழிகள், மண்பெட்டிகள், தாழிகள், எலும்புகள் முதலியன கிடைத்தன. திருநெல்வேலியிலுள்ள ஆதிச்ச நல்லூரில் பல ஏக்கர் பரப்புள்ள இடங்களில் ஏராளமான தாழிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. சேலம் மாவட்டம் (பல்லடம் வருவாய் வட்டம்) பல மண்மேடுகளும், கறுப்பு நிற மட்பாண்டங்கள், கோப்பைகள், ஆடு மாடு நிற்பது போன்ற கோலங்கள் ஆகியன கிடைத்தன.

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராச்சிதான் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பெரிய அகழ்வாராச்சியாகும். கீழடி அகழ்வாய்வில் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் குவிரன், ஆத(ன்) உள்ளிட்ட பெயர்களும் முழுமையடையாத எழுத்துகளும் கிடைத்துள்ளன. இதில் ஆதன் என்ற பெயர், அதன் என்று குறிப்பிடப்படுகிறது. முற்கால தமிழ்ப் பிராமியில், நெடிலைக் குறிக்க ஒலிக்குறியீடு இடும் வழக்கம் இல்லை என்பதால், இந்த தமிழ்ப் பிராமி எழுத்துகள் காலத்தால் மிகவும் முந்தையவையாகக் கருதப்படுகின்றன.

இந்தியாவில் கிடைத்த வரிவடிவங்களில் சிந்து சமவெளியில் கிடைத்த வரிவடிவங்களே மிகப் பழமையானவை. சிந்துவெளி பண்பாடு மறைந்து தமிழ் பிராமி எழுத்து தோன்றியதற்கு இடையில் கீறல் வடிவில் ஒரு வரிவடிவம் இருந்ததாக தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். சிந்து சமவெளி எழுத்துகளைப் போலவே இவற்றின் பொருளும் இதுவரை முழுமையாகப் புரியவில்லை. செப்புக்கால பண்பாட்டிலும் தொடர்ந்து பெருங்கற்கால பண்பாட்டிலும் இக்குறியீடுகள் கிடைக்கின்றன.

இங்கு நடத்தப்பட்ட ஆய்வுகளில் சுவர்கள், கட்டடங்களின் இடிபாடுகளும் கிடைத்தன. தரைகள் வழுவழுப்பான களிமண்ணால் மெழுகப்பட்டிருந்தன. கட்டடங்களைப் பொறுத்தவரை அவற்றின் சுவர்கள் கூரை வரை எழுப்பப்பட்டிருக்கவில்லை. மாறாக சுவர்களுக்கு அருகில் கம்புகள் நடப்பட்டு கூரைகள் போடப்பட்டிக்கின்றன.



கீழடியில் 353 செமீ ஆழத்தில் கிடைத்த பொருள் கிமு 580வது ஆண்டையும் 200 செமீ ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 205வது ஆண்டையும் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரு மட்டங்களுக்கு கீழேயும் மேலேயும் பொருட்கள் இருப்பதால், கீழடியின் காலகட்டம் கிமு 6 – 8 ஆம் வரை-யிலானது எனத் தொல்லியல்துறை முடிவுக்கு வந்துள்ளது.

இந்தியத் தொல்லியல் ஆய்வகம் சார்பில் இந்த ஊரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் சங்க காலப் பாடல்களில் (சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்றவற்றில்) குறிப்பிடப்பட்டிருந்த பல பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக, இங்கு 40 கும் மேற்பட்ட குழிகள் தோண்டப்பட்டன.

முத்துமணிகள், பெண்களின் கொண்டை ஊசிகள், தாயக்கட்டைகள், சதுரங்கக் காய்கள், சுடுமண் பொம்மைகள், சில்லுகள், நூல் நூற்கும் தக்ளி போன்றவை இங்கு கிடைத்துள்ளன.

"சங்க இலக்கியமான கலித்தொகையில் சொல்லப்படுவது போன்ற தாயக்கட்டைகள் இங்கே கிடைத்திருக்கின்றன. கீழடி 4 ஆம் கட்ட அகழ்வாய்வில் மட்டும் இதுபோல 600 விளையாட்டுப் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் விளையாடக்கூடியவை. விளையாட்டிற்கு நேரம் ஒதுக்கும் அளவிற்கு வேலைகளை நேரஒதுக்கீடு செய்துகொண்ட சமூகமாக அங்குள்ளவர்கள் இருந்திருக்கக்கூடும் என்பதற்கான ஆதாரமாக இந்த தாயக்கட்டைகள் இருக்கின்றன.

வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, மேற்கூரைகள் ஓடுகள் வேயப்பட்டிருந்திருக்கலாம் என்பதையும், வீடுகளின் அருகே பட்டினப்பாலையில் குறிப்பிடப்படும் சுடுமண் உறைகேணிகளும் இருந்திருக்கலாம் என்பதனையும் இங்குக் கிடைத்துள்ள சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. வீடுகளில் குளியலறைகள் இருந்ததற்கான சான்றும் கிடைத்துள்ளது. தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கருப்பு, சிவப்பு நிறங்களிலான ஏறத்தாழ 1000 கிலோகிராம் திணிவுடைய மண் ஓடுகள் அகழ்வாராய்ச்சியின் பொழுது கிடைத்திருக்கின்றன.

இதுவரை இங்கு 5,820 பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் 1500-க்கும் மேற்பட்டவை மணிகள் ஆகும். மேலும் இந்த இடத்தில் சுட்ட செங்கல்லால் ஆன சுவர்கள், உறைக்கிணறுகள், பானை செய்யும் தொழில் கூடங்கள், வெறும் கையால் அழுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வடி நீர் கால்வாய்கள், கூரை ஓடுகள் போன்ற பல அமைப்புகள் காணப்பட்டன.

மேலும் தங்கத்தால் செய்யப்பட்ட ஆபரணங்கள், யானை தந்தத்தில் செய்யப்பட்ட ஆபரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுடுமண் விளையாட்டுப் பொருட்கள், இரும்பு கருவிகள் தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புக்கள், இரத்தின கற்களால் ஆன ஆபரணங்கள், கற்களால் செய்யப்பட்ட ஆபரணங்கள், சுடு மண் மணிகள், வட்ட சில்லுக்கள், காதணிகள், தக்களிகள், மனித மற்றும் விலங்குகளின் வடிவில் பொம்மைகள், கருப்பு மற்றும் சிவப்பு நிற உடைந்த பானை ஓடுகள் மற்றும் ரோமானியா சின்னம் பொறிக்கப்பட்ட பானைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மொத்த மணிகளில் 90 விழுக்காடு கண்ணாடியில் செய்யப்பட்டவை. மீதமுள்ள மணிகள் பளிங்கு, சூதுபவளம், பச்சைக்கல் மற்றும் சுடுமண்ணில் செய்யப்பட்டவை ஆகும்.

இதுதவிர தந்தத்தில் செய்த சீப்பின் உடைந்த பகுதி, விளையாட்டுக் காய்கள், காதணிகள், செப்பு, எலும்பு முனைகள், இரும்பு உளிகள் போன்ற பொருள்கள் கிடைத்துள்ளன. தமிழ் பிராமி பானையோடு இன்று வரை 14 தமிழ் பிராமி எழுத்துக்களுடன் கூடிய பானையோடுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒளிய (ன்) என்ற முழுப்பெயரும் மற்றவை தனிநபர்களின் பெயர்களில் ஓரிரு எழுத்துக்களே காணப்படுகின்றன. இதில் 12 எழுத்துக்களைக் கொண்ட பானையோட்டொன்று குறிப்பிடத்தக்கது. இதன் மீது ணிஇய் கிதுவரன் வேய்இய் என்று பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் சதுர மற்றும் வட்ட வடிவிலான தேய்ந்த செப்புக் காசுகள், 5 தங்கப் பொருள்கள், ஒரு சில மண்ணுருவங்களும் அகழாய்வில் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் இந்திய தொல்லியல் துறை 160 இடங்களிலும், தமிழக தொல்லியல் துறை 76 இடங்களிலும் அகழாய்வுகளை நடத்தியுள்ளது. தாமிரபரணி ஆற்றங்கரையில் நெல்லை, தூத்துக்குடி பகுதிகளில் தொல்லியல் சார்ந்த இடங்களை கண்டறியும் பணி நடைபெறுகிறது.

தமிழகத்தில் கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் மற்றும் ஈரோடு மாவட்டம் கொடுமணல், தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர், சிவகளை என 7 இடங்களில் அகழாய்வு நடக்கிறது. இவை தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஏழு இடங்களில் தற்போது நடைபெற்று வரும் அகழாய்வு வரும் செப்தெம்பரில் நிறைவு பெறும்.

அகழாய்வுகள் நடைபெறும் 7 இடங்களில் 3,599 தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவற்றில் தேர்ந்தெடுக்கப்படும் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும். கீழடி ஆய்வில், வாழ்விடங்கள், ஈமக்காடுகள், தொழில்கூடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக க, ய என்ற தமிழி(தமிழ்-பிராமி) எழுத்துகள் செவ்வண்ண பூச்சு பெற்ற மணபாண்ட ஓடுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், சூது பவளம், மணிகள் அதிகளவில் கிடைத்துள்ளன. இவை எங்கிருந்து வந்திருக்கும் என்பது குறித்து கண்டறியப்பட்டுள்ளது. சுடுமண்ணால் ஆன முத்திரை, எடை கற்கள், அலுமினியம் கலந்த செங்கல் கட்டுமானங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

அகரத்தில் நுண்கற்காலத்தை சேர்ந்த மெல் அலகு கத்திகள், வழவழப்பான கல் மழுக்கள், சிறிய கோடுகள் மற்றும் புள்ளிகளுடன் கூடிய தங்க நாணயங்கள், சீன மண்பாண்டத்தின் விளிம்பு பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள், மேற்கூரை ஓடுகள், கிண்ணங்கள் உள்ளிட்டவை எடுக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் காசுகள், கல்பந்துகள், சுடுமணல் ஓடுகள் உள்ளிட்டவை கிடைத்துள்ளன.

ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாக எத்தனையோ மன்னர்கள் ஆண்டார்கள் என்கிறோம். ஆனால் அவர்களைக் குறித்த சரியான வரலாறு எழுதி வைக்கப்படவில்லை. இலக்கியங்களில் மன்னர்கள் பற்றிய குறிப்புகள் இருந்தாலும் அவை முழுமையாக இல்லை. அந்த இலக்கியங்கள் கூடப் பாதுகாக்கப்படவில்லை. அதே காலகட்டத்தில் உலகின் பல்வேறு கண்டங்களில் வாழ்ந்த மன்னர்கள் குறித்து தெளிவான வரலாறு எழுதப் பட்டிருக்கிறது, பாதுகாக்கப் பட்டுள்ளது.

மாசிடோனியாவில் இருந்து ஆசியா நோக்கி படையெடுத்து வந்த அலெக்சாண்டர் தன்னுடன் வரலாற்று ஆசிரியர்களை உடன் அழைத்துச் சென்றுள்ளான். அவனது ஒவ்வொரு படையெடுப்புக் குறித்தும், வெற்றிகள் குறித்து மட்டுமின்றி படையெடுத்துச் சென்ற நாடுகள் குறித்த செய்திகளையும் எழுதி வைத்துள்ளனர். அதுவும் 2300 ஆண்டுகளுக்கு முன்பு!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மகா அலெக்சாண்டர், போரஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ, சொக்ரடீஸ் போன்றவர்களின் குறிப்புகள், படைப்புகள் அளவிற்கு தெளிவான படைப்புகள் இருந்திருந்தால், இன்றைக்குப் பழந்தமிழர் வரலாற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவி இருக்கும்.

கீழடி, ஆதிச்சநல்லூர் போன்ற பல அகழ்வாராச்சி மூலம் தமிழர்களது வரலாற்றில் காணப்படும் வெற்றுப் பக்கங்களை சிறிதளவாவது நிரப்பப்படும் எனத் தமிழ் அறிஞர்கள் கருதுகிறார்கள். தமிழர்களுடைய வரலாறு ஆண்டுவாரியாகக் கூட எழுதிவைக்கப்படவில்லை. கிமு 300 -500 ஆண்டளவில் வாழ்ந்த தொல்காப்பியரை விட்டு விடுவோம், கிபி 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் பற்றிய வரலாறே முறையாக எழுதிவைக்கப்படவில்லை. சிலர் அவர் 9 ஆம் நூற்றாண்டினர் என்கிறார்கள்


1895 இல் 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர் **(The Tamils 1800 Years Ago)** என்ற நூலே முதல் வரலாற்று நூலாகும். இது சென்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அங்கே கல்வி கற்றவருமான வி.கனகசபை அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இவரது தந்தையார் மல்லாகம் விசுவநாதபிள்ளை ஆவர்.

இப்போது இந்திய அரசும் தமிழக அரசும் கீழடி, மணலூர், கொந்தகை போன்ற இடங்களில் மேற்கொள்ளும் அகழ்வாராய்ச்சி தமிழர்களது வரலாற்றில் காணப்படும் வெற்றுப் பக்ககங்களை நிரப்ப உதவும். (நிறைவு)

### வீணாவின் கவிக்கணை

இலைகள் விழுந்தபின்னும்
மரங்கள் இறப்பதில்லை,
அது கால மாற்றம் என்று
நன்கு உணர்ந்து வாழும்,
மனித பிறவி நமக்கோ,
எத்தனையோ மாற்றம்,
அதை துணிந்து எதிர்த்து
நின்று, போராடும் துணிச்சல்
கொண்டு, வெற்றிப்பெற்று
வாழப்பழகுவோம்.

# அரசுக்கு எதிராகப் போராடத் தயாராகும் எதிர்க்கட்சிகள்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த ஒக்டோபர் மாதம் 10ஆம் ஒரு சூம் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. பரந்துபட்ட ஒரு மக்கள் இயக்கத்துக்கான குறிக்கோள்கள் குறித்து அதில் ஆராயப்பட்டன. பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம உட்பட முஸ்லிம் தமிழ் வளவாளர்கள் உரையாற்றினார்கள். தமிழ்ப் பகுதிகளில் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களும் அதில் பங்குபற்றினார்கள்.

இது நடந்து கிட்டத்தட்ட மூன்று கிழமைகளின் பின் இம்மாதம் மூன்றாம் திகதி ஒரு சந்திப்பு யாழ்ப்பாணத்தில் யு எஸ் ஹோட்டலில் இடம் பெற்றது. பேராதனை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புத்திஜீவிகளும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் பங்குபற்றினார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையைச் சேர்ந்த தமிழ் மற்றும் சிங்கள புத்திஜீவிகளோடு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டமைப்பை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, புத்திக பத்திரன போன்றோரும் அங்கே வந்திருந்தார்கள். யாழ் பல்கலைக்கழகத்தின் சில புத்திஜீவிகளும் உட்பட சுமார் முப்பது பேர் அச்சந்திப்பில் கூடியிருந்தார்கள். அரசுக்கு எதிராக நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஒரு புத்திஜீவிகளின் அமைப்பை கட்டி எழுப்புவதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது. அவ்வாறான புத்திஜீவி அமைப்பொன்றை கட்டியெழுப்பும் வேலைகள் ஏற்கனவே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கிவிட்டன. அப்பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு துறைக்குப் பொறுப்பான ஒரு புலமையாளரே அவ்வமைப்புக்குப் பொறுப்பாய் இருக்கிறார்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு இந்த மாதத்தோடு இரண்டு ஆண்டுகள் முடிகின்றன. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கிய ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து பரந்துபட்ட ஒரு மக்கள் இயக்கத்தை குறித்தும் நாடு முழுவதுக்குமான புத்திஜீவிகளின் ஒன்றிணைந்த எதிர்ப்பை குறித்தும் சிந்திக்க வேண்டிய ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ராஜபக்'களுக்கு இந்த நாட்டு மக்கள் வழங்கிய மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதன் பொலிவை இழக்க தொடங்கிவிட்டதை அது நமக்கு உணர்த்துகின்றதா?

அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக எதிரிகள் முளைத்துக் கொண்டே இருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த பொழுது தமிழ் மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு மட்டும்தான் இந்த அரசாங்கத்துக்கு இருந்தது. அந்த எதிர்ப்பை தனது மூன்றில் இரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மைக்கு கிடைத்த ஒரு வெகுமதியாக அரசாங்கம் காட்டிக் கொண்டது. அதன் விளைவாகவே தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியில் இணைந்து தமது எதிர்ப்பை காட்டினார்கள். அப்பொழுது சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்த எதிர்ப்பு எழவில்லை.

ஆனால் பெருந்தொற்று நோய் அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிகளை நிர்வாணமாக்கி விட்டது. அதன் விளைவாக ஒருபுறம் வைரஸ் நெருக்கடி இன்னொருபுறம் பொருளாதார நெருக்கடி மூன்றாவது முனையில் வெளியுறவு நெருக்கடி என்பவற்றோடு சேர்ந்து நாட்டுக்கு உள்ளேயும் ஆளும் கட்சிக்கு உள்ளேயும் புதிது புதிதாக எதிர்ப்புகள் கிளம்பின.

அரசாங்கம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை ராணுவ மயப்படுத்தி நோய் தொற்றும் வேகத்தை ஓரளவுக்கு கட்டுப்படுத்தியிருக்கிறது. அதேபோல வெளியுறவு அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி மேற்கு நாடுகள், ஐநா, இந்தியா போன்றவற்றோடு ஒப்பீட்டளவில் உறவுகளை சுமூகமாக்கிக் கொண்டது. ஆனால் நாட்டுக்குள்ளும் ஆளுங்கட்சிக்குள்ளும் எதிர்ப்புக்கள் புதிது புதிதாக கிளம்பிக் கொண்டே இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர் தொழிற்சங்கத்தின் விட்டுக்கொடுப்பற்ற போராட்டம் கடந்த புதன்கிழமை அரசாங்கத்தைப் பணிய வைத்திருப்பதாக தோன்றுகிறது. எனினும், செயற்கை உரத்தை நிறுத்திய காரணத்தால் விவசாயிகள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். கெரவலப்பிட்டிய மின்நிலையத்தின் பங்குகள் அமெரிக்காவுக்கு விற்கப்பட்டதை எதிர்த்து மின்சாரத்துறை தொழிற்சங்கங்கள் எதிர்ப்புக் காட்டப் போவதாக அச்சுறுத்துகின்றன. சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கலாம் என்று தெரிகிறது. இவை ஒருபுறம்.

இன்னொருபுறம் வைரஸ் தொற்று காரணமாகவும் பொருளாதார வீழ்ச்சி காரணமாகவும் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உளுந்து வடை, பால் தேநீர் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் ஏறிக் கொண்டே போகின்றன. மரக்கறிகளும் உட்பட மேலும் பல பொருட்களின் விலைகள் உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட உரப்பாவனை காரணமாக அடுத்தடுத்த போக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படலாம் என்று தெரிகிறது. அதனால் எதிர்காலத்தில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு வரலாம் என்று எச்சரிக்கப்படுகிறது. அதாவது அரசாங்கம் ஆட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பலமுனை நெருக்கடிகளை. சந்திக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு தருணத்தில் எதிர்க் கட்சிகளும் புத்திஜீவிகளும் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக பரந்துபட்ட எதிர்ப்பை காட்டுவதற்கு முற்படுகிறார்கள். வரும் 16ஆம் திகதி எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக பெரிய அளவிலான ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்து வருகின்றன.

ஒரு நாடு எவ்வளவுக்கு எவ்வளவு ராணுவ மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு பரந்துபட்ட அளவிலான சிவில் எதிர்ப்பும் தேவைப்படும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் பரந்துபட்ட ஒரு மக்கள் இயக்கத்துக்கான தேவை இப்பொழுது அதிகம் உண்டு. இலங்கைத்தீவின் நவீன வரலாற்றைத் தொகுத்துப் பார்த்தால் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை தோற்கடிப்பதற்கு மூன்று இன மக்களும் இணையும் பொழுது மட்டுமே வெற்றி கிடைத்திருக்கிறது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தில் இது நிரூபிக்கப்பட்டது. எனவே இப்போதிருக்கும் அரசாங்கத்தை மூன்று ஆண்டுகளின் பின்னராவது தோற்கடிப்பது என்று சொன்னால் அதற்கு மூன்று இனத்தவர்களின் ஒன்றிணைவு அவசியம். இந்த அடிப்படையில் சிந்தித்தால் நாடு முழுவதுக்குமான ஒரு பரந்து பட்ட மக்கள் இயக்கம் தேவை. ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் அப்படி ஒரு மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்பும் பொழுது அதனை எந்த அடிப்படையில் கட்டியெழுப்புவது என்பதுதான்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட சூம் சந்திப்பின்போது அது சுட்டிக்காட்டப்பட்டது. ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கம் எனப்படுவது மூன்று இன மக்களையும் ஒருங்கிணைப்பது. அவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டுமென்றால் அது இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை கட்டியெழுப்புவதற்கு உரிய தெளிவான வாக்குறுதிகளை அதன் இறுதி இலக்குகளாக கொண்டிருக்க வேண்டும். இந்த நாட்டை பல்லினத் தன்மை மிக்கதாக கட்டி எழுப்புவது என்றால் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களை இச்சிறிய தீவின் சக பங்காளிகளாக ஏற்றுக்கொண்டு ஒரு யாப்பை உருவாக்குவதுதான் ஒரே வழி. அதாவது சுரான வார்த்தைகளில் சொன்னால் இப்போதிருக்கும் ஓரினத் தன்மைமிக்க ஒரு மதத்தை மேலுயர்த்துகின்ற ஒற்றையாட்சி கட்டமைப்புக்குப் பதிலாக பல்லினத் தன்மை மிக்க பல சமயப் பண்பு மிக்க இரு மொழிகளை ஏற்றுக் கொள்ளுகின்ற ஒரு கூட்டாட்சிக்குரிய யாப்பை உருவாக்க வேண்டும். எனவே ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை குறித்தோ அல்லது நாடு முழுவதற்குமான புத்திஜீவிகளின் எதிர்ப்பு இயக்கத்தை குறித்தோ சிந்திக்கும் எல்லா தரப்புக்களும் முதலில் தமிழ் மக்களுக்கு தரவேண்டிய வாக்குறுதி என்னவென்றால் ஒரு கூட்டாட்சி யாப்பை உருவாக்க தயார் என்பதுதான்.

ஆனால் கொடுமை என்னவென்றால் அப்படி ஒரு யாப்பை குறித்த வாக்குறுதி எதையும் தருவதற்கு சிங்கள மக்கள் மத்தியில் உள்ள எதிர்க் கட்சிகளும் தயாரில்லை. பெரும்பாலான லிபரல் ஜனநாயகவாதிகளும் தயாரில்லை. அல்லது பெரும்பாலான முற்போக்கு சக்திகளும் தயாரில்லை. இது விடயத்தில் பல்லினத் தன்மை மிக்க ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்பவர்கள் யார் என்று பார்த்தால் அது சிங்கள பெரும்பான்மைக்குள் காணப்படும் மிக மிகச்சிறிய ஒரு சிறுபான்மைதான்.

அச்சிறுபான்மை மிகவும் பலவீனமானது. அது சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதத்தின் கூட்டு உளவியலில் சிறு சலனத்தையோ அல்லது சிறு நொதிப்பையோ ஏற்படுத்தும் சக்தியற்றது. அப்படிப்பட்டதொரு மிகப் பலவீனமான சிறுபான்மையோடு இணைந்து தமிழ்மக்கள் சிங்கள பவுத்த பெருந் தேசியவாதத்தை தோற்கடிக்க முடியாது.

எனவே இப்பொழுது விடயம் மிகத் தெளிவாக தெரிகிறது. பரந்துபட்ட அளவிலான மக்கள் எதிர்ப்பு என்று பார்த்தால் அது முகமூடி அணிந்திராத இனவாதத்துக்கு எதிராக மனித முகமூடி அணிந்த இனவாதத்தோடு கூட்டுச் சேர்வதன் மூலம் மட்டும்தான் ஒப்பீட்டளவில் சாத்தியமாகக் கூடிய ஒன்றாகும். இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் மாற்றத்தை ஏற்படுத்த முடியாத அல்லது மாற்றத்தை ஏற்படுத்த விரும்பாத ஒரு மக்கள் இயக்கத்தைத்தான் பரந்துபட்ட அளவில் கட்டி எழுப்பலாம். அப்படி ஒரு மாற்றத்தைத்தான் மூவின மக்களும் சேர்ந்து 2015இல் ஏற்படுத்தினார்கள். ஆனால் மூன்று ஆண்டுகளே நீடித்த அந்த மாற்றமானது ஓர் அவலச்சுவை நாடகமாக முடிவடைந்தது. கார்ல் மாக்ஸ் கூறுவதுபோல வரலாற்றில் ஒரு சம்பவம் இரண்டு தடவைகள் இடம்பெறுகிறது. முதலில் அது அவலச்சுவை நாடகமாக முடிகிறது. இரண்டாவது முறை அது நகைச்சுவை நாடகமாக முடிகிறது. ஒரு பரந்து பட்ட மக்கள் இயக்கத்தின் கதையும் அவ்வாறு ஓர் அரசியல் கொமெடியாக முடியக் கூடாது.


**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்**
**Canadian Tamils Remembrance Organization**

www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

**அறிவித்தல்.**

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-21. 11.2021.**

மாவீரர், பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் வணக்க நினைவேந்தல், எதிர் வரும் 21.11.2021 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2.00 மணிவரை தொடர்ந்து நடை பெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அனைவருக்கும் அறியத் தருகின்றது.

இந்த மதிப்பளிப்பு நாள், கனடியச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, சுகாதார விதி முறைகள் பேணப் பட்டு,முறையான ஒழுங்கமைப்பு விதிகள் நடைமுறைப் படுத்தப் பட்டு நடை பெறும். மாவீரர்களின் பெற்றோர்கள், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619.
CTRO@tamilremembrance.com
மண்டப முகவரி.
Metropolition Centre.
3840 Finch Ave. East.
M1T 3T4.

இந்தியா செய்திகள்
India News

# சித்திரை முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டாக அறிவித்திருப்பது வரலாற்றுத்திரிபு என்கிறார் "நாம் தமிழர்" சீமான்

சித்திரை முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டாக அறிவித்திருப்பது தமிழர் அடையாள அழிப்பைச் செய்யும் வரலாற்றுத்திரிபு! - சீமான் கண்டனம்



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, சித்திரை முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டாக ஏற்று அறிவித்திருக்கும் திமுக அரசின் செயல் அதிர்ச்சியளிக்கிறது. தமிழறிஞர்களும், தமிழ்ப்பெரியோர்களும் தை முதல் நாள்தான் தமிழ்ப்புத்தாண்டு எனச் சான்றுகளோடு எடுத்துக்காட்டி, நிறுவிய பின்னரும், கடந்தாட்சியின் தவறான முடிவைக் காரணமாகக் காட்டி, சித்திரை முதல் நாளையே புத்தாண்டென மீண்டும் அறிவித்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மூத்த தேசிய இனமான தமிழ்த்தேசிய இனம் கலை, இலக்கியம், பண்பாடு, நாகரீகம், வேளாண்மை, அறிவியல், மெய்யியல் என எல்லாவற்றிலும் மற்ற தேசிய இனங்களுக்கு முன்மாதிரியாகவும், முன்னத்திஏராகவும் திகழ்ந்து வருகிறது. தனித்த வரலாற்றுப்பெருமைகளும், ஒப்புயர்வற்ற சிறப்புகளும் கொண்ட தமிழ்ப்பேரினமானது இடையில் வந்து குடியேறிய ஆரியர்களின் பண்பாட்டுப்படையெடுப்பினாலும், அதிகார ஆதிக்கத்தினாலும் எல்லாத் தொன்ம அடையாளங்களையும் சிதையக்கொடுத்து, ஆரியத்தின் திருடித் தன்வயப்படுத்தும் கொடுஞ்சூழ்ச்சிக்கு இரையானது. அந்தவகையில், தைத்திங்கள் முதல் நாளன்று கொண்டாடப்பட்ட தமிழர்களின் புத்தாண்டு திருநாள், ஆரியத்திரிபுவாதத்தால் சித்திரை முதல் நாளாக மாற்றப்பட்டது. இச்சூழ்ச்சியை வரலாற்றுச்சான்றுகளோடும், இலக்கியத்தரவுகளோடும் எடுத்துரைத்து, தைத்திங்களே தமிழர்களின் புத்தாண்டு நாள் எனத் தமிழ் முன்னோர்களும், அறிஞர் பெருமக்களும் நிறுவி நிலைநாட்டினர்.

மறைமலை அடிகளார், தேவநேயப்பாவாணர், பெருஞ்சித்திரனார், மு.வரதராசனார், இறைக்குருவனார், சின்னப்பத்தமிழர், கி.ஆ.பெ. விசுவநாதம், திரு. வி.க. பாரதிதாசன், சோமசுந்தர பாரதியார் எனப்பெரும் சான்றோர் கூட்டம், அதற்காக உழைத்திட்டு ஆய்வுரை மூலம் தை முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டென அறுதியிட்டுக்கூறி, பேரறிவிப்பு செய்திட்டது.

நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரை இல்லை உனக்குப்புத்தாண்டு
அண்டிப்பிழைக்க வந்த ஆரியக்கூட்டம் கற்பித்ததே
அறிவுக்கொவ்வா அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழனுக்கு
தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு! - என உரத்து முழங்கினார் புரட்சிப்பாவலர் பாரதிதாசன்.

பன்னெடுங்காலமாகத் தமிழ் மூத்தோரும், அறிஞர் பெருமக்களும் தை முதல் நாளையே தமிழ்ப்புத்தாண்டாகக் கொண்டாடி வந்த நிலையில், கடந்த 2008ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் அன்றைக்கு முதல்வராக இருந்த ஐயா கருணாநிதி அவர்கள் அதனை அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பாக வெளியிட்டார். ஆனால், அதன்பின் ஆட்சிக்கு வந்த அம்மையார் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு தமிழறிஞர்களின் கருத்துகளையோ, தமிழ்த்தேசிய இனத்தின் தொன்ம விழுமியங்களையோ துளியும் மனதில் கொள்ளாது, தான்தோன்றித்தனமாக சித்திரை திங்கள் முதல்நாளை தமிழ்ப்புத்தாண்டாக அறிவித்து, ஆரியக்குணத்தையும், அதிகாரச்செருக்கையும் வெளிப்படுத்தியது.

இந்நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான அரசுப்பொதுவிடுமுறை நாட்கள் பட்டியலிலும் சித்திரை முதல்நாள் தமிழ்ப்புத்தாண்டு என திமுக அரசால் அறிவிக்கப்பட்டிருப்பது ஆரியத்தின் நயவஞ்சகச்சூழ்ச்சிக்கும், வரலாற்றுத்திரிபுகளுக்கும் துணைபோகும் பச்சைத்துரோகமாகும். ஆரியத்திடம் திராவிடம் சரணடைந்து, தமிழர் அடையாளங்களை அடமானம் வைக்க முனையும் சந்தர்ப்பவாதமாகும்.

தமிழ்நாடு மொழிவாரியாகப் பிரிந்த நவம்பர் முதல் நாள், "தமிழ்நாடு நாள்" எனக் கொண்டாடப்படுவதை அவசர அவசரமாக சூலை 18க்கு மாற்றிய தமிழகத்தின் முதல்வர் ஐயா ஸ்டாலின் அவர்கள், தமிழ்ப்புத்தாண்டை சித்திரை முதல் நாளிலிருந்து தை முதல் நாளுக்கு மாற்றத்தயங்குவது ஏன்? இதுதான் ஆரியத்தை திராவிடம் எதிர்க்கிற போர்த்திறனா? இதுதான் ஆரியர்களுக்கெதிரான திராவிடர்களின் சமரசமற்ற சண்டையா?

"கலைஞரின் மகன் நான்" என மேடைதோறும் கூறி, புளங்காகிதம் அடைந்து கொள்ளும் ஐயா ஸ்டாலின் அவர்கள், ஐயா கருணாநிதி அறிவித்த தை முதல் நாளினைத் தமிழ்ப்புத்தாண்டாகக் கடைபிடிக்காது, அம்மையார் ஜெயலலிதா அறிவித்த சித்திரை முதல் நாளினைப் புத்தாண்டாகக் கடைப்பிடிப்பது வெட்கக்கேடு இல்லையா? திராவிடமென்றால் என்னவெனக் கேட்பதையே கோமாளித்தனமெனும் மாண்புமிகு முதல்வர் ஐயா ஸ்டாலின் அவர்கள், ஆரியர்கள் கொண்டாடும் சித்திரை முதல் நாளினைத், தமிழர்களின் புத்தாண்டு நாளாகக் கடைபிடிக்கச் சொல்வது கோமாளித்தனத்தின் உச்சமில்லையா?

புரட்சிப்பாவலர் பாரதிதாசனும், பாவலேறு பெருஞ்சித்திரனாரும், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரும், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதமும், தமிழ்ப்பெருங்குடி மக்களும் அறிவித்த திருநாளைப் புறக்கணித்து, சித்திரை முதல் நாளினைத் தமிழர் புத்தாண்டு நாளாக அறிவித்திருப்பது ஆரியத்திடம் மண்டியிடும் அடிவருடித்தனமின்றி வேறில்லை.

ஆகவே, தமிழ்ப்பேரறிஞர்களின் ஆய்ந்துணர்ந்த முடிவையும், அவர்களது வரலாற்றுவழிப்பட்ட அறிவையும் மனதிலேந்தி, தமிழ்த்தேசிய இனத்தின் புத்தாண்டு நாளாக தை முதல் நாளையே அறிவிக்க வேண்டுமென தமிழக அரசை நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு – பகுதி 3

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**




உலகின் மிகவும் அறிவார்ந்த சமூகங்களில் ஒன்றென மானுடவியலாளர்களால் கூறப்படும் தமிழ்ச் சமூகத்தை இன்று ஆக்கிரமித்து அவர்களை முற்றாக மூளைச் சலவைச் செய்து திறந்த வாய் மூடாமல் பார்க்க வைக்கும் தொலைக்காட்சி தொடர்களும், சினிமாவும் (அபூர்வமாக சிலவற்றைத் தவிர) அவர்களை வன்முறை கலாச்சாரம், முறையற்ற செயல்கள், கூடா நட்பு, பொருந்தாத கூட்டணி, ரத்தக்களறி ஆகியவற்றை யதார்த்தம் மற்றும் வாழ்க்கையின் ஒரு அங்கம் என்று ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளியுள்ளது.

அதுமட்டுமின்றி தொலைக்காட்சிகளில் காலை முதல் இரவு வரை அரசியல், ஆன்மீகம், மழை, வெயில், புயல் காற்று, பங்குச் சந்தை, விளையாட்டு, பெண்கள் பிரச்சனை, குழந்தைகள் விஷயம் எதுவென்றாலும் பழங்காலத்தில் ஆலமரத்தடியில் நான்கு பேர் அமர்ந்து - உலகம் முதல் உள்ளூர் விஷயங்கள் வரை - அனைத்தையும் அலசி ஆராய்ந்து தீர்வு கூறும் நான்கு பெரிசுகள் போல இந்த "நான் ஸ்டாப் நான்சென்ஸ்" எனும் விவாதங்களில் நான்கு பேரை அமர வைத்து பஞ்சாயத்து செய்வதை ஏற்றுக் கொண்டுள்ள தமிழர்கள் "இதுவும் கடந்து போகும்" என்ற நிலையில் உள்ளனர்.

அதேபோன்று திரையிலும், தெருக்களிலும் வாள் வெட்டுக்கள், துப்பாக்கிச் சூடுகளுக்குப் பழகிப்போன இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் புலம் பெயர்ந்த தேசத்தில் உள்ளோர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் நடக்கும் குத்து வெட்டுக்கள் புதிதாகவோ அல்லது அதிர்ச்சியளிக்கக் கூடிய ஒன்றாகவோ இருக்க முடியாது.

கொள்கைகளின் அடிப்படையில் இன்றி, "காலத்தின் தேவை" என்று கூறப்பட்டு உருவாக்கப்பட்ட அந்த கூட்டமைப்பின், கடந்தகால செயல்பாடுகள், நிகழ்கால நடவடிக்கைகள் ஆகியவை கடும் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளது அனைவரும் அறிந்ததே. அந்த "கிச்சடிக் கூட்டணி" அதன் தேவையைக் கடந்துவிட்டதா என்றும் எண்ண வைக்கிறது. கூட்டமைப்பின் ஏற்றமும் இறக்கமும் சடுதியாக இருந்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஆதரவில் கூட்டமைப்பு கண்ட எழுச்சியும் ஏற்றமும் போருக்குப் பின்னரான காலத்தில் மெல்ல மெல்ல பலவீனமடைந்தது.



இதில் முக்கியமான ஒரு வி'யமும் கவனிக்கப்பட வேண்டும் அதிலும் குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினர் த தே கூ எப்படி உருவானது என்பதை அறிந்துகொள்ள வேண்டிய தேவையுள்ளது. நான் அறிந்தவரை தமிழர்கள் வாக்கு சிதறக் கூடாது என்பதற்காக தமிழ் உணர்வாளர்களால் உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அது விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது என்று கூறுவதைக் காட்டிலும், உருவான ஒரு கூட்டணியை புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் என்பதே சரியாக இருக்கும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் - 2000ஆம் ஆண்டில்- இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பெற்ற பின்னடைவே கூட்டமைப்பு உருவாக பிரதான காரணியாக இருந்தது.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் அரசியல் கட்சியாக உருமாறிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் கழகம், இரட்டைக் குதிரை சவாரி செய்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகம் மற்றும் தேர்தல் வழிமுறையே என்று இருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (அதில் பிரதான பங்கு வகித்த இலங்கை தமிழரசுக் கட்சி) ஆகிய கட்சிகளிடையே இருந்த முரண்பாடே அடிப்படையில் இணக்கப்பாடு இல்லாததற்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. விடுதலைப் புலிகள் என்ற அச்ச உணர்வால் கட்டப்பட்டிருந்த நான்கு கட்சிகளின் கூட்டணி போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக இலங்கை அரசு அறிவித்த பிறகு இந்த நால்வரைச் சேர்த்து கட்டப்பட்டிருந்த கயிற்றின் பிடி தளர ஆரம்பித்தது. முதலாவதாக சைக்கிள் கட்சி கழன்று கொண்டது. கூட்டமைப்பின் முக்கிய பங்காளியான வீட்டுக் கட்சியும், சைக்கிள் வெளியேறியது நல்லதே என்று கருதியது. ஆரம்பம் முதலே சம்பந்தருக்கும் சுரேஷுக்கும் ஏழாம் பொருத்தமாகவே இருந்தது. கூட்டமைப்பில் முக்கியப் பொறுப்பை எதிர்பார்த்த சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற அலங்காரப் பதவியே அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவருக்கோ அல்லது அவரது கட்சிக்கோ முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதில் சம்பந்தர் உறுதியாக இருந்தார். டெலோ அமைப்புக்கு தலைமையேற்றிருந்த செல்வம் அடைக்கலநாதன் அமைதியின் திருவுருவமாக தலைவர் பேச்சுக்கு மறுபேச்சில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்து இன்றுவரை கூட்டணியில் "கௌரவமாக" தொடருகிறார்.




தமிழ் நாட்டில் திமுக கூட்டணி எப்படிச் செயல்படுமோ அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயல்படுகிறது என்ற விமர்சனங்களும் உள்ளன. அதாவது கொடுப்பதை வாங்கிக் கொண்டு சும்மா இருந்தால் கூட்டணியில் இடம் இல்லையென்றால் தாராளமாக வெளியே செல்லலாம் என்கிற நிலைப்பாடு. இதில் சில சமயம் டெலோவும் புளாட்டும் இணைந்து வீடு கட்சிக்கு எதிராக சில சமயம் கம்பு சுற்றுவதும் உண்டு. பின்னர் அது சும்மா பயிற்சிக்காக என்று கூறுவதும் உண்டு. எனினும் இந்த நீறு பூத்த நெருப்பாக இருக்கும் உட்கட்சி பூசல் விரைவில் வெடித்துச் சிதறும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அப்படி நடைபெற்றால் அது "வெட்டு ஒன்று துண்டு இரண்டு கதை தான்". "வெற்றிகரமாக" இருபது ஆண்டுகளைக் கடந்து சென்ற கூட்டமைப்பு அதே வகையில் 21 ஆம் ஆண்டையும் கடந்து செல்லுமா என்பது மிகப்பெரும் கேள்விக்குறியே. அதுவும் அடுத்த ஆண்டு மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று அரசு கூறிய நிலையில், அது நடந்தால் இந்த உறவு பிரிவை நோக்கி வேகமாகச் செல்லத் தொடங்கும். பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியே இந்த ஒற்றுமைக்குப் பொறுப்பு. அவர்கள் தமது போக்கை மாற்றிக் கொண்டால் கூட்டணி தொடரும் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள்.



"காலத்தின் கட்டாயம்" என்று யாருக்கும் புரியாத ஒன்றைக் கூறியே கூட்டமைப்பு தமது தவறுகளை நியாயப்படுத்தி வருகிறது. அதில் சில வரலாற்றுப் பிழைகளும் உள்ளன. பேய்க்குப் பயந்து பிசாசிடம் தஞ்சம் புகுந்த கதையை கூட்டணி தொடர்ந்து முன்னெடுத்தது.

இதில் இரண்டு ஜனாதிபதி தேர்தல்களில் கூட்டமைப்பு எடுத்த நிலைப்பாடு மிகவும் முக்கியமானது. முதலாவது போர் முடிந்த பிறகு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த ராஜபக்சவை எதிர்க்க வேண்டும் என்கிற நோக்கத்திற்காகவே இராணுவத்தின் முன்னாள் தளபதியான சரத் பொன்சேகாவை ஆதரித்தது. போர் முடிந்தவுடன் எழுந்து இன்னும் ஓயாத போர்க் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விஷயத்தில் முன்னாள் மற்றும் இந்நாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச மீது எந்தளவுக்கு அந்த குற்றச்சாட்டு உள்ளதோ அதே அளவுக்கான குற்றச்சாட்டு இறுதிப் போருக்குத் தலைமையேற்று "விடுதலைப் புலிகளை அழித்தே தீருவேன்" என்று சூளுரைத்து அதை நிறைவேற்றிய சரத் பொன்சேகா மீதும் அந்த குற்றச்சாட்டு உண்டு. அவரைக் கூட்டமைப்பு ஆதரிக்கப் போவதாகப் பேச்சுக்கள் எழுந்த போதே நான் கூட்டமைப்பில் இருந்த பலருடன் தொடர்பு கொண்ட போது யாரும் அந்த நிலைப்பாட்டிற்கான காரணத்தை நியாயப்படுத்தும் வகையில் கூறவில்லை. பொதுவாக அப்போது பேச்சாளராக இருந்து ஊடகங்களிடம் குறிப்பாக பிபிசி தமிழோசையிடம் பேசும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட இப்படி-அப்படி ஒரு பதிலையே கூறினார். "எம்மால் மஹிந்த ராஜபக்சவை ஆதரிக்க முடியாது - அதை ஒரு போதும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்று சம்பந்தர் எனக்களித்த பேட்டியில் கூறினார். ஆனால் மஹிந்தவை ஆதரிக்க முடியாது அதனால் பொன்சேகாவை ஆதரிக்கிறோம் என்கிற நிலைப்பாடு ஏன் என்பதற்கான பதில் வழக்கம் போல "நன்றி.......வணக்கம்" என்பதே. அத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வென்றார், கூட்டமைப்பு அரசியல் ரீதியாகத் தோல்வியடைந்தது.

சரி, அந்த தேர்தலில் "காலத்தின் கட்டாயம்" காரணமாக சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டிய நிலைப்பாட்டை எடுத்த கூட்டமைப்பு அடுத்த தேர்தலில் அதே பிழையை மீண்டும் செய்தது. 2015 நாடாளுமன்றத் தேர்தலிலும் அதே மஹிந்த எதிர்ப்பு நிலைப்பாடு என்று கூறி அவருடன் முதல்நாள் வரை இருந்த மைத்ரிபால சிறிசேனவை ஆதரித்தது. அதுவும் போரின் இறுதி நாட்களில் மஹிந்த ராஜபக்ச ஜோர்டான் நாட்டிற்கு சுற்றுப்பயணம் சென்றிருந்த நிலையில், மைத்திரிபால சிறிசேனாவே இராணுவ அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். அதாவது குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16/17 ஆகிய நாட்களில் சிறிசேனாவே இராணுவ அமைச்சிற்கு தலைமையேற்றிருந்தார். நாட்டில் நல்லாட்சிக்கான ஒரு வாய்ப்பு, நாங்கள் மைத்ரி-ரணில் கூட்டணியை நம்புகிறோம், அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை அளிப்பார்கள், போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகள் இடம்பெறும் என்றெல்லாம் கூறி அந்த கூட்டணியை ஆதரித்ததை நியாயப்படுத்தினார்கள். இத்தேர்தலில் மைத்ரிபால சிறிசேன வென்றார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்ற கூட்டணியில் இருந்தும் தோல்வியடைந்தது.




"சொல்லியுள்ளோம், செய்வார்கள், பேசினோம், பேசுவோம், நம்பிக்கையுள்ளது" போன்ற பல்லவிகளையே தொடர்ந்து கூறினார்கள். ஆனால் மஹிந்த மற்றும் மைத்ரி ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பால் கூட்டமைப்பால் எதுவுமே செய்ய முடியவில்லை என்பதே யதார்த்தம். மைத்திரி-ரணில் மோதல் கூட்டமைப்பிற்குள் இருந்த மோதலுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல. அவர்கள் தமக்குள் இருந்த பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் திணறிய நிலையில், தமிழ் மக்களின் பிரச்சனைகளை கவனிக்க எங்கே நேரமிருந்தது?

ஒரு முறை இருமுறை ஆயிற்று மூன்றாவது முறையாவது கூட்டமைப்பு சரியான முடிவை எடுத்ததா? ..............தொடரும்.................

கனடிய செய்திகள்
Canadian News

# நவம்பர் 14ம் திகதி கனடா – ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள சகோர மிருதங்கக் கலைஞர்களின் அரங்கேற்றம்



கனடாவில் புகழ்பெற்ற மிருதங்க பயிற்சிக் கலைக் கூடமாகத் திகழும் "மிருதங்க சேஸ்த்திரம்" நிறுவனத்தின் ஸ்தாபகரும் குருவுமாகிய வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவர்களும் திரு. திருமதி. வித்தியானந்தன் தம்பதியின் புதல்வர்களுமான தர்சிகன் மற்றும் சண்சிகன் ஆகிய சகோதரக் கலைஞர்களின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 14-11-2021 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 733 பேர்ச்மவுண்ட் வீதி ஸ்காபுறோ என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த அரங்கேற்றத்திற்கு ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

கோவிட்-19 தாக்கம் ஆரம்பித்த பின்னர் கனடாவில் நடைபெறும் முதலாவது மிருதங்க அரங்கேற்றம் இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசின் இனப்படுகொலை தொடர்பாக தமிழர் உரிமைக் குழுவானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடும் முயற்சிகளுக்கு புலம் பெயர் தமிழர்கள் ஆதரவு தர வேண்டும்

## ரோறன்ரோ ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தமிழர் உரிமைக் குழுவின் பேச்சாளர் கற்பனா நாகேந்திரா வேண்டுகோள்




"மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் ஆகியவற்றின் மொத்த மீறல்களுக்காக இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முதன்முதலில் முயற்சி செய்யத் தொடங்கி 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்றிலிருந்து, இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலையானது, தடையின்றித் தொடர்கிறது. 2015 ஆம் ஆண்டு அரசு தானாக முன்வந்து இணை அனுசரணை வழங்கிய ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களில் இருந்து தற்போதைய ஆட்சி ஒருதலைப்பட்சமாக விலகியது மட்டுமன்றி, எந்தவொரு உள்நாட்டு அல்லது சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையிலிருந்தும் ஆயுதப்படைகளை பாதுகாப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பகிரங்கமாகச் சூளுரைத்துள்ளார். இந்தப் பின்னணியில், தமிழர் உரிமைக் குழுவும் மற்றும் ஏனைய தரப்பினரும் உலகளாவிய அதிகார வரம்பு மற்றும் சட்டத்தின் மூலமும், குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இடைக்கால நீதியை இடைவிடாமல் தேடுவதைத் தவிர, வேறு வழி இல்லை".

இவ்வாறு ரோறன்ரோ ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தமிழர் உரிமைக் குழுவின் பேச்சாளர் கற்பனா நாகேந்திரா வேண்டுகோள் விடுத்தார்.

உலகின் பல நாடுகளிலிருந்தும் பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட மேற்படி "மெய்நிகர்" சந்திப்பில் அவர் தொர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் "ஈழத் தமிழர்களுக்கான நீதி வேண்டியும் இலங்கையில் தண்டனையின்மைக்கு எதிராகப் போராடும் ஒரு முக்கியமான சர்வதேச நடவடிக்கையாகவும், ரோம சாசனத்திற் கையொப்பமிட்டுள்ள உறுப்பு நாடுகளின் எல்லைகளுக்குள், ஈழத்தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட மனித குலத்திற்கெதிரான குற்றங்களான துன்புறுத்துதல், நாடு கடத்தல் ஆகியவற்றுக்கு எதிராகவும் ரோம சாசனத்தின் 15 வது பிரிவின் கீழ் பூர்வாங்க ஆய்வொன்றினை மேற்கொள்ளக் கோரும் தகவல் அளிப்பு அறிக்கை ஒன்றினை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற வழக்குரைஞர் அலுவலகத்தில், தமிழர் உரிமைக் குழு சமர்ப்பித்துள்ளது.

இலங்கையில் ஈழத் தமிழ் மக்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள், குறிப்பாக 2009 இல் முடிவடைந்த நீண்ட உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் அட்டூழியக் குற்றங்களுக்கு ஆளானார்கள் என்பதற்கு பெருகிவரும் சான்றுகள் உள்ளன.

இலங்கை அரசின் தற்போதைய நடவடிக்கைகள் உள்நாட்டு நீதித்துறை நிறுவனங்கள் மூலம் இத்தகைய குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடர விரும்பவில்லை என்பதை நிரூபித்துள்ளமையை இனம் கண்டு வெளிநாடுகளுடைய, உள்நாட்டு நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடர்வதற்கு உலகளாவிய அதிகார வரம்பு என்ற கோட்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலமும், ஐசிசி உட்பட சர்வதேச மட்டத்தில் நீதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் இலங்கையின் ஆயுத மோதலைச் சுற்றியுள்ள தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபடுவதற்கு முன்வர வேண்டுமென்று, உறுப்பு நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர், 2021 ஜனவரியில், அழைப்பு விடுத்தார்.




மியான்மார்/பங்களாதேஸ் நாடுகளில் இடம்பெற்ற வழக்குகளின் அடிப்படையிலும் முன்மாதிரியின் அடிப்படையிலும், இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளால் இழைக்கப்பட்ட, நாடு கடத்தல் மற்றும் துன்புறுத்தல் போன்ற மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்வதற்குச் சர்லதேச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்று, கடந்த ஆண்டு சர்வதேச தமிழ் அகதிகள் உதவி வலையமைப்புடன் இணைந்து எழுதப்பட்ட, தகவற் தொடர்பாடல் மேலும் விவாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரித்தானியாவில் பிரசுரமாகும் காலாண்டு சஞ்சிகை"கலசத்தின்" 100 வது இதழ் கனடா சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தில் வெளியிடப்பெற்றது



பிரித்தானியாவில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் "சைவ முன்னேற்றக் கழகத்தினரால்" வெளியிடப்பெறும் காலாண்டு சஞ்சிகையான "கலசத்தின்" 100வது இதழ் இன்று கனடாவின் ஸ்காபுறோ நகரில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலய மண்டபத்தில் சிறப்பாக வெளியிடப்பெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை கனடா வாழ் அன்பர் டாக்டர் கதிர் துரைசிங்கம் அவர்கள் "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களோடு இணைந்து செய்திருந்தார்.

ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீரதரக் குருக்கள் அவர்கள் ஒத்தாசை வழங்கி இந்த அற்புதமான வைபவத்தை கந்தசஸ்டி தொடக்க நாளன்று நடத்த உதவினார்.

"கலசம்" 100 வது இதழின் முதற் பிரதியை உதயன் லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீதரக் குருக்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும், "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன். திருமதி பத்மா லோகேந்திரலிங்கம். திருமதி கவிதா செந்தில் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றனர்.

ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் நிகழ்வைக் அவதானத்துடன் பார்த்து மகிழ்ந்தனர்.

அங்கு உரையாற்றிய டாக்டர் கதிர் துரைசிங்கம் தனது உரையில் பின்வருமாறு தெரிவித்தார், "இந்த கலசம் ஆன்மீக இதழ் இங்கிலாந்தில் வெளியிடப்பெற்றாலும் அடுத்த வருடத்திலிருந்து கனடாவிலும் வெளியிடப்படும் என்பதை இங்கிலாந்து சைவ முன்னேற்ற சங்கம் தெரிவிக்க விரும்புகிறது. அத்துடன் இங்கிலாந்து சைவ முன்னேற்ற சங்கம் சங்கத்தின் பணிகள் பற்றியும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். சமுக சேவை,நால்வர் தமிழ்க் கலை நிலையம் சிவன் ஆலயத்தை திறம்பட நிர்வகித்தல், இலங்கை இந்திய நாடுகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கல், யோக நிலையம், அறிவொளி நிலையம், அந்திமக் கிரியைகள் பொறுப்பேற்று செய்தல் ஆகியவற்றை அவர்கள் தங்கள் தலையாய கடமையாக செய்து வருகின்றார்கள். அத்துடன் பயனுள்ள காலாண்டு இதழான கலசத்தில் உலகெங்கும் உள்ள ஆலயங்கள் பற்றி பயணக் கட்டுரைகள் சிறார்களின் ஆக்கங்கள் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் பண்டிகைகள் பெருநாள்கள் நாயன்மார்கள் பற்றி கண்ணனும தாத்தாவும் என்ற சமயம் சார்ந்த உரையாடல் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன என்று தெரிவித்தார்.





# பரிபோகும் நிலங்களும் கையாலாகாத தமிழ் அரசியல்வாதிகளும்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



திருட்டு மாங்காய்க்குச் சுவை கூடுதல் என்று தமிழ்நாட்டில் ஒரு செலவடை உண்டு. மேலும் அதே போன்று அடித்துப் பிடுங்கி அதை தான் அனுபவிப்பதில் சிலர் அலாதி மகிழ்ச்சி கொள்வர். இதை இரண்டையும் நினைக்கும் போது இலங்கையில் போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்த பின்னரும் தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமல், அவை மேலும் மேலும் அபகரிக்கப்படுவது தமிழ் மக்களை மேலும் மேலும் துன்பத்திற்குள் தள்ளுகிறது.

போர்க் காலத்தில் அதைக் காரணம் காட்டி பாதுகாப்புப் படை-யினரின் முகாம்களை அமைக்க தமிழ் மக்களின் நிலங்கள் வலிந்து கையகப்படுத்தப்பட்டு இன்றுவரை அவை முழுமையாக உரியவர்களிடம் திருப்பியளிக்கப்படுவதில்லை.

அண்மைக் காலங்களில் "புனித பூமி", "பௌத்த பாரம்பரியம்", "மகாவம்சத் தொடர்பு" என்று பல காரணங்களை மேற்கோள் காட்டி நிலங்கள் பறிக்கப்படுவது தொடர்கிறது.

இந்த போக்கை உற்று நோக்கினால், இது வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளை இலக்கு வைத்தே இந்த அபகரிப்பு நடைபெறுகிறது. இது தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ந்து கிடைக்கப்பெற்றாலும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதில்லை என்பது நடைமுறையாகியுள்ளது. இப்போது வடக்கில் "சிங்கள பௌத்த பாரம்பரியத்தை" தேடி அரசாங்கம் காணி-களை அபகரிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவ்வளவு தசாப்தங்களாக இல்லாமல் திடீரென்று இப்போது ஏன் எங்கிருந்து புதிதாகச் சிங்கள பௌத்த பாரம்பரிய இடங்கள் முளைப்பதிலுள்ள நோக்கம் மிகத் தெளிவா-கவே உள்ளது. அதாவது முடிந்தவரை மதத்தின் பெயரில் நிலங்களைக் கையகப்படுத்தி அங்கு விகாரைனைகளை எழுப்பி, சிங்களக் குடியிருப்புகளை ஏற்படுத்தி, குடிப்பரம்பலை மாற்றியமைப்பதே அரசின் எண்ணமாத் தெரிகிறது என்று தமிழர் தரப்பினர் அச்சம் கொண்டுள்ளனர்.




அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக மக்களின் வெறுப்புக்கு உள்ளான ராஜபக்ச அரசாங்கம் சிங்கள பௌத்த பாரம்பரியத்தைத் தேடி வடக்கில் இனவாதத்தைத் தூண்ட முயல்வதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் குழுவினருடன் அண்மையில் யாழ்ப்பாணம் காரைநகர் வேரப்பிட்டி பிரதேசத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

தென்னிலங்கையில் அரசிற்கு எதிரான ஒரு மனப்போக்கு உருவாகி வருவதாகக் கூறப்படும் நிலையில், பௌத்தத்தின் பெயரைப் பயன்படுத்தி தமக்கு எதிராக எழுந்துள்ள சிங்கள எதிர்ப்பை அடக்க அரசு முயல்கிறது என்று மாகாண அரசியல்வாதிகள் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

"கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையும் இரண்டு மூன்று மடங்கு அதிகரித்து மக்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிங்கள மக்களை தவறாக வழிநடத்தி தமிழர் பிரதேசங்களில் சிங்கள பௌத்த தொன்மை வாய்ந்த காணிகள் காணப்படுவதாக தெரிவித்து அதனை அபகரிக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன." என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் குற்றஞ்சாட்டுகிறார்.

வேரப்பிட்டி கிராமத்தில் உள்ள கணேசா வித்தியாலயத்திற்கு அருகி-ல் உள்ள பகுதியில் பல இடிபாடுகள் காணப்படுப்படுவதாகவும், பாட-சாலைக் கட்டிடத்தின் வலதுபுறம் தரையில் சுமார் 15 மீட்டர் விட்டத்தில் 2 மீட்டர் ஆழத்திற்கு தோண்டப்பட்ட இடத்தில் ஆறு அஸ்திவாரங்கள் சிதறிக் கிடப்பதாகவும், கட்டிடத்தின் கிழக்கே மைதானம் முழுவதும் பழைய ஓடுகள் மற்றும் ஒரு பாழடைந்த கட்டிடம் உள்ளிட்ட பல பொருட்கள் காணப்படுவதாகவும் தொல்லியல் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

குறித்த இடத்தின் அகழ்வாராய்ச்சியை துரிதப்படுத்தி அதன் வரலாற்று முக்கியத்துவத்தை கண்டறியும் வகையில் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு தொல்பொருள் அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் விக்கிரமநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். மேலும் தொல்லியல் துறை, அப்பகுதியில் வாழும் மக்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் செயற்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைச்சர் விக்கிரமநாயக்கவின், காணிகளை கைப்பற்றும் செயற்பாடுகளுக்கு, ராஜபக்ச அரசாங்கத்தின் பங்காளியாக உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆதரவளிப்பதாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"தமிழ் மக்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் இடங்களைக் கைப்பற்றுவதில் ஒன்றுதான் தொல்லியல் துறையும். அமைச்சர் மற்ற அனைத்து பிரச்சினைகளையும் புறந்தள்ளிவிட்டு சிங்கள பௌத்த கலைப்பொருட்களைத் தேடி வடக்கிற்கு வருகிறார். இவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் ஆதரவளிப்பது வெட்கக்கேடானது. அரசாங்கத்தின் பலம் வாய்ந்த அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கூட சிங்கள பௌத்த ஆதிக்கத்தைப் பரப்புவதற்கு ஆதரவளிக்கவில்லை. அங்கஜன் இந்த முட்டாள்தனத்தை நிறுத்த வேண்டும்." என அவர் கேட்டுக்கொண்டார்.



முல்லைத்தீவு குருந்தூர்மலை சிவன் ஆலயம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்துக்களால் வழிபடப்பட்டு வரும் நிலையில், புத்தர் சிலையை வைத்து அதனை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின்போது, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிற்கும் தமிழ் மக்கள் எதிர்ப்பும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் வடக்கே ஏதோவொரு காரணத்தை மேற்கோள் காட்டி தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்கதையாகவே உள்ளது. அது மட்டுமின்றி இந்து ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களும் மறைமுகமாக மதகுருமார்களை அச்சுறுத்தி, பூசைகளைத் தடுத்து, அந்தக் காணிகளையும் சிங்களப் பேரினவாதிகள் கையகப்படுத்த இராணுவம் மற்றும் பொலிசார் மூலம் அழுத்தங்களையும் பலப்பிரயோகத்தையும் பயன்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் அரசிற்கு எதிராக வைக்கப்படுகின்றன.

ஏற்கெனவே வலிந்து அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படாமல் அதன் உரிமையாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து வாடும் நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் அதை விடுவித்து அவர்களிடம் கையளிக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்கிற விமர்சனங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதுவரை தமது முயற்சியால் மட்டுமே கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்று எந்த தமிழ்க் கட்சியும் கூறிக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

இன்னும் சில மாதங்களில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தொடர்ந்து காணிகள் அபகரிப்பு தேர்தலில் ஒரு முக்கியப் பிரச்சனையாக வெடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமது நிலங்களின் மீதான உரிமையை ஒருநாளும் விட்டுக்கொடுக்க முடியாது என்று தமிழ் மக்கள் போராடிவரும் நிலையில், இந்தப் பிரச்சனையை சர்வதே சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்பதை அரசு உணர்ந்ததாகத் தெரியவில்லை.



# ஒன்றாரியோ அரசு சார்ந்த பயனுள்ள செய்திகளை தாங்கி வரும் உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து அதன் ஆசிரியரை பாராட்டுவதில் நான் உவகை கொள்கின்றேன்

## கனடா ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் கௌரவ Stephen Lecce, புகழாரம்



“ஒன்றாரியோ அரசு சார்ந்த பயனுள்ள செய்திகளையும் தகவல்களையும் தொடர்ச்சியாக தாங்கி வரும் உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து அதன் ஆசிரியரையும் பாராட்டுவதில் நான் உவகை கொள்கின்றேன். கனடா உதயன் பத்திரிகையின் செய்திச் சேவை மற்றும் அதன் சமூகப் பணி ஆகியவற்றை நானும் எனது சக அமைச்சர்களும் மாகாண அரசின் உறுப்பினர்களும் அறிந்துள்ளோம். எனவே. ஒன்றாரியோ அரசு சார்ந்த பயனுள்ள செய்திகளையும் தகவல்களையும் தொடர்ச்சியாக தாங்கி வரும் உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து அதன் ஆசிரியரையும் பாராட்டுவதில் நான் உவகை கொள்கின்றேன்”.

இவ்வவாறு தெரிவித்தார் கனடாவில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமாக ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வரும் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் Hon. Stephen Lecce, அவர்கள்.

செவ்வாய்க்கிழமையன்று (9ம் திகதி) மாலை தனது மாகாண அரசின் சகாக்களான அமைச்சர் ரேமன்ட் சோ. மாகாண அரசின் உறுப்பினர்களான திருவாளர்கள் அரிஸ் பாபிகியன், லோகன் கணபதி. விஜய் தணிகாசலம் ஆகியோர் சகிதம் வருகை தந்து பாராட்டுரை வழங்கியபோது. மேற்கண்டவாறு தெரிவித்தார். கனடா உதயன் பத்திரிகையின் 25வது ஆண்டுவெள்ளிவிழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கல்வி அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும். அவரால் அன்று கலந்து கொள்ள இயலவில்லை.

எனவே “உதயன்” அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிக்க வேண்டும் என்ற அமைச்சரின் விருப்பத்திற்கு ஏற்பவே இந்த சிறிய நிகழ்வு உதயன் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அழைக்கப்பட்ட “உதயன்“ நண்பர்கள். வர்த்தக அன்பர்கள். சமூகத் தலைவர்கள். மாணவர்கள் சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் உதயன் விளம்பரதாரர்கள் என குறிப்பிட்ட எண்ணிக்கையுடையவர்களே அங்கு கலந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

அமைச்சர் உட்பட அனைவரும் கலந்து கொண்ட அனைவரோடும் மிகவும் நெருக்கமாக உரையாடி மகிழ்ந்தனர்.

ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் Hon. Stephen Lecce, அவர்கள் மற்றும் மாகாண அரசின் சகாக்களான அமைச்சர் ரேமன்ட் சோ. மாகாண அரசின் உறுப்பினர்களான திருவாளர்கள் அரிஸ் பாபிகியன், லோகன் கணபதி. விஜய் தணிகாசலம் ஆகியோர் பூக்கொத்து மற்றும் பொன்னாடைகள் ஆகியன வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டனர். இவைகள் மாணவ மாணவிகளாலும் வர்த்தக மற்றும் சமூகம் சார்ந்த நண்பர்களாலும் வழங்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



- படங்களும் செய்தியும் சத்தியன்-

















November 9th was an important and remarkable day for our UTHAYAN Tamil Newspaper in last 25 years in Publishing and serving the Community.

Ontario's current Minister of Education Minister Hon. Stephen Lecce, along with, Ontario's Minister of Seniors and Accessibility Hon. Raymond Cho, Mr. Aris Babikian MPP for Scarborough- Agincourt, MPP for Markham-Thornhill Mr. Logan Kanapathy and MPP for Scarborough - Rouge Park Mr. Vijay Thanigasalam, made a visit to our UTHAYAN's Marketing Office in Scarborough.

The purpose of the visit was to congratulate the success and it's 25th anniversary Celebrations. Ministers and MPP’s presented greeting scrolls to the Editor in Chief Logendralingam.

# நவம்பர் 13ம் திகதி மொன்றியால் நகரில் நடைபெறும் "உதயன்" வெள்ளி விழா மற்றும் "நண்பன்" விருது விழா

கடந்த ஒக்டோபர் மாதம் 30ம் திகதி ரொரன்ரோ நகரத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற "உதயன்" வெள்ளி விழா மற்றும் "நண்பன்" விருது விழா ஆகியவற்றைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் 13ம் திகதி மொன்றியால் மாநகரில் நடைபெறவுள்ள "உதயன்" வெள்ளி விழா மற்றும் "நண்பன்" விருது விழா ஆகியவை ஒரே மேடையில் இடம்பெறுகின்றன.

அங்கு மொன்றியால் வாழ் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் மற்றும் மொன்றியல் வாழ் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்குதல் ஆகியவை இடம்பெறுகின்றன.


மொன்றியால் விழாவை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வர்த்தக அன்பர்களுக்கும் நண்பர்கள் குழுவிற்கும் எமது நன்றி.


**உதயன் நிறுவனம் மற்றும் நண்பன் நிறுவனம் ஆகியவற்றின் நிர்வாகிகள் - ரொறன்ரோ மற்றும் சென்னை.**




# எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு மறைவிற்குப் பின்னரான பத்ம விபூஷண் விருது

## சாலமன் பாப்பையாவுக்கு பத்ம ஸ்ரீ விருது





மறைந்த பிரபல திரைப்பட பின்னணி பாடகர் எஸ். பி.பாலசுப்பிரமணியத்திற்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது. கரோனா பேரிடரால் இரண்டு ஆண்டுகளாக பத்ம விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெறாமல் இருந்த நிலையில், தில்லியில் நடைபெற்றது. விருது அறிவிக்கப்பட்டவர்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் விருதுகளை வழங்கினார்.

இதில் மறைந்த பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கு மறைவிற்குப் பின்னரான பத்ப விபூஷண் விருது வழங்கப்பட்டது. அவரது குடும்பத்தினர் விருதினைப் பெற்றுக்கொண்டனர்.

தமிழகத்தைச் சேர்ந்த சமூக சேவகர் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், டிவிஎஸ் குழுமத் தலைவர் வேணு சீனிவாசன், புதுச்சேரியைச் சேர்ந்த இலக்கியவாதி மனோஜ் தாஸ் ஆகியோர் பத்மபூஷண் விருது பெற்றுக்கொண்டனர். இதேபோன்று தமிழகம் சார்பில் திரைப்பட பிண்ணனி பாடகி பாம்பே ஜெயஸ்ரீ, பட்டிமன்ற பேச்சாளர் சாலமன் பாப்பையா சமூக சேவகி கிருஷ்ணம்மாள், சமூக சேவகர் எஸ். ராமகிருஷ்ணன் உள்ளிட்டோருக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது. தொழில் முனைவோரான ஸ்ரீதர் வேம்பு, மருத்துவத் துறையில் திருவேங்கடம் வீரராகவன், கார்ட்டூன் ஓவியர் கே.சி.சிவசங்கர், வில்லுப்பாட்டு கலைஞர் சுப்பு ஆறுமுகம், கூடைப்பந்தாட்ட வீராங்கனை பி. அனிதா உள்ளிட்டோருக்கும் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது. மேலும், டெரகோட்டா சிலை வடிக்கும் கலைஞர் முனுசாமி கிருஷ்ணபக்தர், சமூக சேவகர் சுப்புரமணியன், 105 வயது இயற்கை விவசாயி பாப்பம்மாள், கியர் மேன் ஆ.்ப் கோயம்புத்தூர் பி.சுப்பிரமணியன் ஆகியோரும் பத்ம ஸ்ரீ விருதினை பெற்றுக்கொண்டனர்.


சகோதர மிருதங்கக் கலைஞர்களின்
அரங்கேற்ற அழைப்பிதழ்
கனடாவின் புகழ்பெற்ற மிருதங்க பயிற்சிக் கூடமாகத் திகழும்
'மிருதங்க சேஸ்த்திரம்" நிறுவனத்தின் ஸ்தாபகரும் குருவுமாகிய
வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவர்களும்
திரு. திருமதி. வித்தியானந்தன்-மனோறதி தம்பதிகளின் புதல்வர்களுமான
தர்ஷிகன் மற்றும் சஞ்ஷிகன்
ஆகியயோரின் மிருதங்க அரங்கேற்றம்.
இடம்:
கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபம்
(733 Birchmount Road, Scarborough)
காலம்:
14-11-2021 ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.00 மணி
அனைவரும் கலந்து கொண்டு எமது கலைப் புதல்வர்களை
வாழ்த்திச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
இங்ஙனம்,
திரு. திருமதி. வித்தியானந்தன்-மனோறதி தம்பதிகள்


தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக
உலகெங்கும்
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா மற்றும் பாரம்பரிய உணவுகள்...
கனடாவில் Tasty Tamila தயாரிப்புகள் கிடைக்கும் இடங்கள்:-
Shankar & Co (Kennedy & Eglinton)
Gunam Supermarket (Morningside & Sheppard)
தேன் நெல்லி
நாட்டு சக்கரை
கருப்பட்டி
வியாபார தொடர்புகளுக்கு
+1 647 762 9512
+91 7845 00 6977

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

## உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஒரே நேரத்தில் 8 பெண் நீதிபதிகள்; 17 ஆண்டு வரலாற்றில் இதுவே முதல்முறை



உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் 17 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாக ஒரே நேரத்தில் 8 பெண் நீதிபதிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை மதுரையில் 2004-ல் தொடங்கப்பட்டது. மதுரை, திருச்சி உட்பட 14 மாவட்டங்களைச் சேர்ந்த வழக்குகள் உயர் நீதிமன்ற கிளையில் விசாரிக்கப்படுகின்றன. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒவ்வொரு 3 மாதத்திற்கு ஒருமுறை சுழற்சி முறையில் உயர் நீதிமன்ற மதுரைக் கிளை பணிக்கு அனுப்பப்படுவது வழக்கம்.

உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தசரா, தீபாவளி விடுமுறைக்கு பின், நவம்பர் 8&ந் தேதி திறக்கப்பட்டது. அன்று முதல் உயர் நீதிமன்றக் கிளையில் நீதிபதி புஷ்பா சத்தியநாராயணன் தலைமையில் 18 நீதிபதிகள் விசாரித்து வருகின்றனர். இவர்கள் அடுத்த 3 மாதங்களுக்கு உயர் நீதிமன்றக் கிளையில் வழக்குகளை விசாரிப்பர். இவர்களில் கீழ்”கண்ட 8 பேர் பெண் நீதிபதிகள் ஆவர்.

நீதிபதிகள் புஷ்பா சத்தியநாராயணா, ஜெ.நிஷாபானு, அனிதா சுமந்த், வி.பவானி சுப்பாராயன், நீதிபதிகள் ஆர்.தாரணி, பி.டி.ஆஷா, எஸ்.ஆனந்தி, எஸ்.ஸ்ரீமதி.

நீதிபதிகள் புஷ்பா சத்தியநாராயணா தலைமையிலான நீதிபதிகள் குழுவில் பெண் நீதிபதிகளான ஜெ.நிஷாபானு, அனிதா சுமந்த், வி.பவானி சுப்பாராயன், ஆர்.தாரணி, பி.டி.ஆஷா, எஸ்.ஆனந்தி, எஸ்.ஸ்ரீமதி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பணியிலுள்ள நீதிபதிகளில் ஒரே நேரத்தில் 8 பெண் நீதிபதிகள் இடம் பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.

இது குறித்து உயர் நீதிமன்றக் கிளை வழக்கறிஞர் ஆர்.காந்தி கூறியதாவது:

“உயர் நீதிமன்ற கிளையில் பெண் நீதிபதிகள் அதிக அளவில் பணிபுரிவது மகிழ்ச்சியளிக்கிறது. இது நீதித்துறையில் பெண்கள் சாதிப்பது கடினம் என்ற பிற்போக்கு மனநிலையை மாற்றக்கூடிய முக்கிய நிகழ்வாகும். பெண்களால் சட்டத்துறையில் சாதிக்க முடியும் என்பதற்கு இது ஒரு நற்சான்றாக அமைந்துள்ளது.

நீதித்துறையிலும் பெண்கள் சிகரங்களைத் தொட முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதுபோன்ற நிலை எதிர்காலத்தில் சட்டக் கல்வியை நோக்கி பெண்களை ஈர்க்கும். இது நீதித்துறையில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்”.

இவ்வாறு காந்தி கூறினார்.

# தீர்க்கதரிசனமான தலைவரின் பொருளாதார அணுகுமுறை

**- பார்த்தீபன்**

ஏதோ ஒரு பொருளுக்கு தட்டுப்பாடு என்ற செய்தியுடன்தான் இலங்கையில் ஒவ்வொரு நாளும் விடிகிறது. கோழி இறைச்சி, சீனி, பருப்புக்கு கட்டுப்பாட்டு விலை நீக்கப்படுகிறது என்ற செய்தியோடு இப் பத்தியை எழுதும் நாள் புலர்ந்திருக்கிறது. கடைகளில் பொருட்களுக்காக முண்டியடிக்கும் மக்கள், எதை எத்தனை நாட்களுக்காய் சேகரிப்பது? அதற்கும் கையில் பணம் இல்லாத நிலை என்று பதைபதைக்க நிற்கின்ற காட்சிகளை எங்கள் நகரங்களில் கண்டபடி இருக்கிறோம். ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரப் பின்னடைவுக்கு கொரோனா தொற்றுத்தான் காரணமா? இல்லை சரியான நிர்வாகம் இல்லை என்பதுதான் காரணமா என்று சிங்கள மக்களே தங்கள் ஆட்சியைப் பற்றி பேசுகிறார்கள்.

திடீர் திடீரென பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது. கடந்த நாட்களில் ஒரு சமையல் எரிவாயுவை வாங்கி நகரமெல்லாம் திரிந்து களைத்து முப்பது கிலோமீற்றர் பயணம் செய்து கடைசி எரிவாயுக் கலனை வாங்க இயன்றது. வரும் காலம் எப்படி இருக்கப் போகிறது என்ற அச்சம்தான் பொதுசன மக்களை வாட்டுகிறது. ஆயிரத்து நானூறு அளவில் விற்ற எரிவாயு அதன் இரட்டை விலையாக்கப்பட்டுள்ளதுடன் அதற்கும் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது இன்னும் விலையேற்றுவதற்கான உத்தியாகவே தென்படுகிறது. மக்களின் வாழ்க்கைமீது இப்படி பொருளாதார சுமையை ஏற்றுவது மிகக் கொடுமையானது.

ஸ்ரீலங்காவின் புதிய அதிபராக பதவி ஏற்ற கோத்தபாய ராஜபக்ச, வெளிநாட்டு உர இறக்குமதியை நிறுத்தினார். இதற்கு அவர் சொன்ன காரணம், வெளிநாட்டு உரத்தினால் நாட்டின் மண் வளம் பாதிக்கப்படுகிறது என்பதே. ஆனால் கொரோன சூழலில் இப்படி உரத்தை தடுக்கும்போது உற்பதிகளும் ஏற்றுமதிகளும் பாதிக்கும் என்பதை அறியாமல் எடுத்த முடிவு என்றும் இதுவே இலங்கையின் முழுப் பொருளாதாரப் பின்னடைவுக்கும் காரணம் என்றும் ஸ்ரீலங்கா பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால் பாதுகாப்புக்காக ஸ்ரீலங்காவின் நிதி ஒதுக்கீடு எப்படி இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கலியாண வீட்டில் மாப்பிள்ளை, செத்த வீட்டில் பிணம் என்பதைப் போல ஸ்ரீலங்கா இராணுவம் எல்லாவற்றிலும் நுழைக்கப்படுகிறது. வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் பள்ளிக் கூடங்களிலிருந்து மருத்துவத்துறை வரை இராணுவத்தின் காலங்கள் ஆழப் புதைந்து நிற்கின்றன. பாதுகாப்புத்துறைக்காக அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டு இராணுவ ரீதியான ஆட்சி நடாத்தப்படும் நாட்டில் இதுபோன்ற பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதை கண்டு வருகிறோம்.

வடகொரியாவில் ஏவுகணை தாக்குதல் நடத்தும் முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இராணுவ ரீதியாக அந்த நாடு பெரும் பலத்துடன் இருப்பதாக சொல்லப்படுகின்றது. அந்த நாட்டின் அரச தலைவர் கடும் சர்வாதிகாரியாக இராணுவ - யுத்த ஆயுதங்களின் மத்தியில் நின்றுதான் பேசுகிறார். ஆனால் அந்த நாட்டில் ஒரு கிலோ வாழைப் பழம் மூவாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறதாம். இராணுவ ஆட்சியின், சர்வாதிகாரத்தின் விளைவு இப்படித்தான் இருக்கும். இலங்கை ஆசியாவின் வடகொரியா ஆகிறது. கோத்தபாய ஆசியாவின் கிம் ஜாங் உன் ஆகிக் கொண்டிருக்கிறார். இதை நாங்கள் சொல்லவில்லை சிங்களவர்களே இப்போது சொல்லத் துவங்கியுள்ளார்கள்.

நடப்பவை யாவும் நன்மைக்கே என்று நம்புகிற தமிழர்களின் நம்பிக்கை இன்னு மெய்யாகி வருகிறது. ஸ்ரீலங்கா அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச இதே வழியில் பொருளாதார சுமைகளை மக்களுக்கு ஏற்றி ஆட்சி நடாத்தினால் லிபியாவில் கடாபியை கொன்றதைப் போல கோத்தபாய கொன்று வீசப்படுவார் என்று சிங்களப் பேரினவாத தலைவர்கள் உச்சரிக்கத் தொடங்கிவிட்டனர். கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவின் காவடிகளாக செயற்பட்ட உதய கம்மன்பில, விமல் வீரவன்ச முதலிய இனவாதிகள்தான் இப்போது கோத்தபாயவுக்கு எதிரான களத்தில் முன்னிலையில் நிற்கின்றனர்.

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை யுத்தம் புரிந்த ராஜபக்சவினர் மருந்தையும் உணவையும் தடுத்து பசியில் இருந்த மக்கள்மீது கொடும்போர் தொடுத்து இனப்படுகொலை புரிந்தார்கள். அதற்கு தலைமை தாங்கியவர்களில் ஒருவரான கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக இன்று பொருளாதார யுத்தம் நிகழ்கிறது. சிங்கள மக்களின் மத்தியில் போர் வீரன் வேடம் காட்டிய கோத்தபாய ராஜபக்ச இன்றைக்கு சிங்க மக்களால் தூக்கி வீசப்படுகிற ஆளாக மாறி வருகிறார். நந்திக்கடலில் புலிகளை நாய்களைப் போல இழுத்து வந்து சுட்டேன் என்று வீரம் பேசியவரை இன்று சிங்கள மக்களே கோத்தாவை நாயிலும் கடையராக நொந்து பேசி வருவதையும் பாரக்கிறோம்.

போரில் இறந்திருந்தால் வீரனாக கதை முடிந்திருக்கும். ஆனால் அந்தப் போரில் குறுக்கு வழியில் வென்று பின்னர் பெரும் கோழையாக வரலாற்றில் இடம்பிடிப்பதுதான் மிகவும் இழிவானது. அதுவே கோத்தபாய ராஜபக்சவுக்கு நடக்கிறது. நீங்கள் தமிழர்களின் தேசத்தை அங்கீகரித்திருந்தால், இன்றைக்கு தமிழீழம் என்ற நாடு அருகில் இருந்திருந்தால் இந்தப் பொருளாதார நெருக்கடியின் போது பிரபாகரன் உங்களுக்கு கை கொடுத்திருப்பார்.

2009இற்கு முந்தைய காலத்தில் சிங்கள அரசால் மண்ணைக்கும் தடை, மருந்தும் தடை, சோத்துக்கும் தடை, சோப்புக்கும் தடை என்ற காலத்தில் மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் பொருட்களை இறக்குமதி செய்தும் உற்பத்தி செய்யும் தமிழீழ மக்களின் வாழ்க்கையில் குறையில்லாமல், அவர்கள்மீது பொருளாதார நெருக்கடியை சுமத்தாமல் ஒரு ஆட்சியைப் பிரபாகரன் நடாத்தியிருந்தார். கடும் போரிலும் மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் தீர்க்கதரிசனமான கொள்கைகளை உணர்ந்து நடைமுறைப்படுத்தினார். நிதித்துறை, பொருண்மியம், தமிழீழ வைப்பகம், சுதேச தொழிற்சாலைகள், பொதுநிர்வாகம் என பொருளாதார நெருக்கடியை தவிர்க்கும் வித்தில் தலைவர் பிரபாகரன் உருவாக்கிய கட்டமைப்பு தமிழர் தேசத்தை தலை நிமிரச் செய்தது. பிச்சைக்காரர்கள் இல்லாத தேசமாக அன்று தமிழர் தேசம் இருந்தது. அந்தளவுக்கு வேலை வாய்ப்புக்களும் நிறைந்திருந்தன.

இத்தனை போரின் பிறகும் தாயகத்தில் தமிழர்கள் பொருளாதார ரீதியாக மீண்டெழுந்து வருகிறார்கள். அது பெரும் சாதனை. அதைப் போல போரால் புலம்பெயர்ந்து உலகம் எங்கும் சிதைந்த நிலையில் இருக்கும் ஈழத் தமிழர்கள் பொருளாதார ரீதியாக பெரும் பலம் கொண்டு வருகிறார்கள். இன்றைக்கு உலகில் பெரும் முதலீடுகளை செய்கின்ற தொழிலதிபர்களாக ஈழத் தமிழர்கள் இருக்கிறார்கள். இப்படியான நிலையில் ஸ்ரீலங்கா தமிழர் தேசத்தை அங்கீகரித்திருந்தால் இன்றைக்கு சிங்கள தேசத்திற்கு தமிழர்கள் கை கொடுத்திருப்பார்கள்.

“எங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொண்டு தமிழீழம் உருவாக்கப்படுமானால் தங்கள் தேசப்பற்றும், அரசியல் சாணக்கியமும் எங்கள் ஆற்றலுடன் ஒன்றுக்கொன்று துணையாக இளைய இலங்கையில் சிநேகபூர்வமான இரு வல்லரசுகள் தோன்றிவிடும்” என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு கூறியதும் இதற்காகவே. ஈழத் தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமல் இத் தீவின் பலத்தை ஒருபோதும் நிலைநிறுத்த முடியாது. அது பாதுகாப்பு ரீதியாகவும் இருக்கலாம். பொருளாதார ரீதியாகவும் இருக்கலாம்.

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ
# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....



மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைண்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைண்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...

தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும் 'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் இறக்குமதி செய்துள்ளார்கள்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!







காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# 16 வருடங்களுக்கு பின் மீண்டும் நடிக்க வரும் நடிகை வினோதினி



"வண்ண வண்ண பூக்கள்" படம் மூலம் பட்டி தொட்டியெங்கும் இளைஞர்களின் மனதை கிறங்கடித்தவர் நடிகை வினோ-தினி. 12 வருடங்களாக நடிப்பிலிருந்து விலகியிருந்தவர் தற்போது மீண்டும் திரைய-ில் நடிக்கவுள்ளார். இயக்குநர் நடிகர் விசு மூலம் திரையுலகி-ல் குழந்தை நட்சத்திரமாக அறிமுகப்படுத்தப்பட்டவர் நடிகை வினோதினி. சிறு வய-திலேயே "நாயகன்" படம் முதலாக பெரும் நடசத்திரங்கள் மற்றும் இயக்குநர்களின் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர். 16 வய-தில் கஸ்தூரி ராஜாவின் "ஆத்தா உன் கோயிலிலே" படத்தில் நாயகியாக அறிமுகப்படுத்தப்பட்டார். பாலுமகேந்திராவின் வண்ண வண்ண பூக்கள் இந்திய அளவில் பெரும் பிரபலத்தை பெற்று தந்தது. கன்னட, மலையாள மொழிகள் உட்பட, பல மொழிகளில் நாயகியாகவும், குணச்சித்திர வேடங்களிலும், முன்னணி நாயகர்களுடனும் பல படங்களில் நடித்து, தென்னிந்தியாவில் பிரபல நட்சத்திரமாக திகழ்ந்தவர். திருமணத்திற்கு பிறகு நடிப்பிலிருந்து ஒதுங்கியிருந்த அவருக்கு இப்பொழுது நல்ல வாய்ப்புக்கள் தேடி வருவதால் மீண்டும் நடிப்பில் களமிறங்கவுள்ளதாக கூறியுள்ளார். தனது மலரும் நினைவுகள் குறித்தும் மீண்டும் நடிக்க இருப்பதை குறித்தும் நடிகை வினோதினி கூறியதாவது. என் அம்மா ஒரு நாடக நடிகை, அப்போதே நாடகங்கள் நடிக்க செல்லும் போது என்னை அழைத்து செல்வார். அந்தப்பழக்கம் மூலமாக நான் சிறு வயதிலேயே விசு சார் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தேன். அவர் படங்களில் மட்டுமே தொடர்ந்து 7 படங்கள் நடித்தேன். தொடர்ச்சியாக எனக்கு நிறைய வாய்புகள் குவிந்தன. மணிரத்னம் சாரின் நாயகன் படத்தில் சிறு வயது சாராவாக நடித்தேன். மும்பையில் தான் ஷூட்டிங் நடந்தது. அங்கு தங்கியது நடித்தது எல்லாமே மிகச்சிறந்த அனுபவமாக இருந்தது.

மணிரத்னம் சாரை அந்தப்படத்திற்கு பிறகு நான் பார்த்ததே இல்லை. சுஹாசினி மேடத்தை பார்க்கும்போது இதைப்பற்றி பேசிக்கொண்டிருப்பேன். மணிரத்னம் சாரை சந்தித்து உங்கள் நாயகன் படத்தில் நான் நடித்தேன்..! ஞாபகம் இருக்கிறதா எனக்கேட்க வேண்டும் என கேட்க வேண்டும் என நினைப்பேன். என் வாழ்க்கை முழுவதுமே சினிமாவை சுற்றித்தான் இருந்தது. 16 வயதிலேயே நாயகியாகிவிட்டேன். கஸ்தூரிராஜா சார் எங்கள் வீட்டுக்கு அருகில் தான் குடியிருந்தார்கள். அவரது ஆத்தா உன் கோயிலிலே படத்தில் நாயகியாக அறிமுகப்படுத்தினார். அந்தப்படம் 100 நாட்கள் ஓடியது. அதைப்பார்த்து தான் பாலுமகேந்திரா சார் வண்ண வண்ண பூக்கள் படத்தில் நடிக்க வைத்தார். அந்தப்படம் இந்திய அளவில் பிரபலமாகிவிட்டது. கதை எல்லாம் சின்ன கதை-தான். ஆனால் அதை அவர் படமாக்கிய விதம் தான் அற்புதமாக இருந்தது. பாலுமகேந்திரா எனக்கு ஒரு தந்தை போல் இருந்தார். எனக்கு திரைதுறையில் மிகவும் பிடித்தவர்.

தமிழை விட கன்னடத்தில் நிறைய படங்களில் நாயகியாக நடித்தேன். கன்னடத்தில் நிறைய வாய்ப்புகள் வந்ததால் தமிழில் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை, நான் திரும்பி வரும்போது இங்கு நிறைய புது நடிகைகள் வந்துவிட்டனர் அதனால் குணச்சித்திர பாத்திரங்கள் தான் செய்தேன். தமிழ் திரையுலகம் பிடிக்கும் என்பதால் அதிலும் தொடர்ந்து நடித்தேன். அப்போதைய நடசத்திரங்கள் பலருடனும் இணைந்து நடித்துள்ளேன் என இப்போது நினைத்தால் பெருமையாக இருக்கிறது. திருமணத்திற்கு பிறகு ஒரு கட்டத்தில் அம்மா அப்பாவை, அத்தை மாமா மற்றும் குழந்தைகளை பார்த்து கொள்ளும் பொறுப்பும் சேர்ந்து வந்துவிட்டதால், சினிமாவிலிருந்து, ஒதுங்க வேண்டியதாகிவிட்டது. இது பெண்களின் வாழ்க்கையில் இயல்பான ஒன்றுதான். அந்த காலகட்டத்திலும் தொடர்ந்து எனக்கு வாய்ப்புகள் வந்து கொண்டு தான் இருந்தது. ஆனால் என்னால் தான் நடிக்க முடியவில்லை. கரு.பழனியப்பனின் பிரிவோம் சந்திப்போம் படத்தில் ஒரு சின்ன பாத்திரத்தில் நடித்தேன். அவரது சதுரங்கம் படத்திலும் நடித்திருந்தேன். இடையில் எனக்கு நேரமே இல்லை. இப்போது தான் கொஞ்சம் நேரம் கிடைக்க ஆரம்பித்துள்ளது. என் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள், அவர்களே நீ நடிக்கலாமே அம்மா எனக் கூறுகிறார்கள். நல்ல நல்ல வாய்ப்புக்களும் தேடி வருகிறது. அதனால் நடிக்கலாம் என்றிருக்கிறேன். நான் இருந்த போது இருந்த சினிமா, இப்போது இல்லை, நிறைய மாறிவிட்டது. சினிமா டெக்னாலஜியில் பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது. இப்போது சினிமா ஓடிடி மூலம் வீட்டுக்கே வருகிறது. கதைகளுக்கு நிறைய முக்கியத்துவம் தந்து, வெப் சீரிஸ்களும் வருகின்றன. எல்லோருக்குமான கதைகளும் இருக்கிறது. எனக்கு பொருந்தும் வித்தியாசமான பாத்திரங்களில் திரைப்படங்கள், வெப் சீரிஸில் நடிக்க ஆசைப்படுகிறேன். விரைவி-ல் என்னை நீங்கள் மீண்டும், திரையில் பார்க்கலாம் என்றார்.

# ரஜினிகாந்தின் படங்களுக்கு இசையமைத்த நாட்கள் ஆசுவாசமாக இனிமையான அனுபவமாக இருக்கவில்லை என்கிறார் ஏ. ஆர். ரஹ்மான்



ஆஸ்கார் விருது பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் படங்களுக்கு தான் இசையமைத்த நாட்களை நினைவு கூர்ந்துள்ளார். அந்த நாட்களை திரும்பிப் பார்க்கையில், அது ஆசுவாசமாக இனிமையான அனுபவமாக இருந்திடவில்லை என்பதை விவரித்தார். ஒரு தனியா-ர் யூடியூப் சேனலுக்கு சமீபத்தில் அளித்த பேட்டியில், ரஹ்மான் ரஜினிகாந்த் படத்தில் பணிபுரிவது "நரகம்" என்று கூறினார், ஏனெனில் அவருக்கு மிகவும் குறைவான நாட்கள் மட்டுமே வழங்கப்படுமாம், அதற்குள் இசையமைக்க சொல்லி திரைப்பட தயாரிப்பாளர்களின் பெரும் அழுத்தம் காரணமாக அந்த நாட்கள் நரகம் போல இருந்ததாக குறிப்பிட்டார். பல விருதுகளை வென்ற பாடகர் மற்றும் இசையமைப்பாளர் தரமான பாடல்களை உருவாக்குவதில் அழுத்தமும் சிக்கல்களும் உருவாக்குகிறது என்று கூறியுள்ளார். தற்போது நிலைமைகள் மேம்பட்டு, நாளுக்கு நாள் சிறப்பாக மாறிக்கொண்டிருப்பதை நேர்மறையாக எடுத்துக்கொள்ளும் ஏ ஆர் ரஹ்மான், கடந்த நாட்களில் மிகுந்த அழுத்தத்தில் படங்களுக்கு இசையமைத்ததை நினைவு கூர்ந்தார்.

அவர் பேசுகையில் "முன்பு, நாங்கள் ரஜினிகாந்தின் படங்களை மார்ச் மாதத்தில் தொடங்கினால், இந்தப் படம் தீபாவளிக்கு வெளியாகும் என்று சொல்வார்கள். பின்னர், நான் பாடல்களை செய்ய வேண்டும், அதன் பிறகு பின்னணி செய்ய வேண்டும், அந்த சமயத்தில் பவர் கட் வேறு நான் வசித்த இடத்தில் அதிகமாக இருந்தது. நாங்கள் இரண்டு ஜெனரேட்டர்களை வாங்கி நிறுத்தி வைத்திருந்தோம். அந்த காலங்கள் நரகம்," என்றார். இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் கூறுகையில், அவர் ஒரே நேரத்தில் வெவ்வேறு இயக்குனர்களின் பல படங்களில் பணியாற்றினார். ஆனால், மற்ற படங்களை விட ரஜினிகாந்த் படங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியதாயிற்று. சில நேரங்களில், இது இயக்குனர்கள் ரஹ்மான் மீது எரிச்சலையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியது. முத்து, சிவாஜி, எந்திரன் மற்றும் 2.0 உட்பட பல ரஜினிகாந்த் படங்களுக்கு இசையமைப்பாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேர்காணலில் ரஹ்மான் பேசுகையில், பண்டிகை காலங்களில் தங்கள் திரைப்படங்கள் திரையரங்குகளில் திரைக்கு வருகின்றன என்று இயக்குனர்கள் தன்னிடம் கூறுவார்கள். இதன் காரணமாகவே, ஏ ஆர் ரஹ்மான் எல்லா பண்டிகைகளையும் வெறுக்கத் தொடங்கியதாக கூறினார், ஏனெனில் அவர்கள் அவருக்கு டெட்லைன் கொடுப்பது "நரகம்" போல இருக்குமாம், மேலும் அவர் எந்த பண்டிகையையும் அனுபவிக்கும் வாய்ப்பையும் பெறவில்லை. "இப்போது, அதிக ஓய்வு இருக்கிறது," என்று அவர் மேலும் கூறி பெருமூச்சு விட்டார். ஏ.ஆர். ரஹ்மான், பிரபல பாடலாசிரியர்-கவிஞர் குல்சாருடன் தொழில் அதிபர் சுப்ரதா ராயின் வாழ்க்கை வரலாற்றுப் படத்திற்காக மீண்டும் இணைகிறார். முன்னதாக, அவர்கள் தில் சே, குரு மற்றும் ஸ்லம்டாக் மில்லியனர் போன்ற மறக்கமுடியாத படங்களில் இணைந்து வேலை செய்தனர், இது அகாடமி விருதுகள் உட்பட பல பாராட்டுகளைப் பெற்றது. ரஹ்மான் தனது இசைக்காக தேசிய திரைப்பட விருதுகள், அகாடமி விருதுகள் உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


ஸ்ரீ சத்திய சாயி பாபா

அகண்ட நாம பஜனை

வருடந்தோறும் உலகளாவிய ரீதியில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா பிறந்த மாதமான நவம்பர் மாதம் 2வது வார விடுமுறையின் போது நடாத்தப்படும் 24 மணி நேர தொடர் பஜனை இம் முறை நவம்பர் மாதம் 13ம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு நிறைவு பெறும். உலகில் சமாதானம் நிலவவும் பேரிடர்களில் இருந்து ஜீவராசிகளைக் காப்பாற்றவும் நடைபெறும் இப் பிரார்த்தனை ஸ்காபுரோ சாய் சமிதி மண்டபத்தில் 5321 FINCH AVE EAST இல் (FINCH / MIDDLEFIELD) நடைபெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.



5321 FINCH AVE EAST

SCARBOROUGH

416 335 7242

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

(சென்ற வாரத்தொடர்ச்சி)



கலாநிதி துன்னாலையூர் ராம் தேவலோகேஸ்வரக்குரு
(சாரதாபீடம் சோதிடநிலையம்)

## விருட்சியம் (விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)




செவ்வாயின் ஆதிபத்தியம் கொண்ட விருட்சிராசி அன்பர்களே! உங்கள் மன நிலையில் எப்போதுமே சிந்தனை, அதிகமாக இருக்கும். உங்களின் அடுத்த கட்ட நிலைக்கு தயாராகி விடுவதில் குறியாக இருப்பீர்கள். உங்களின் ராசி நிலைக்கு குருபகவான் சஞ்சாரம் அகஸ்த்தானமாகிய 4ஆம் இடம் அமைகின்றார். பொதுவாக மனச்சஞ்சல நிலையும் அலைச்சல் நிலையும் இருககும். தொழில் நிலை சார்ந்த வேலைப்பளு மிகவும் அதிகமாக இருக்கும். பணவரவு சற்று மத்திமமானதாகவே இருக்கும். குடும்ப நிலையில் சிறுசிறு பிரச்சினைகள் அமையும். கடன் நிலையில் இழுபறியான பலன் இருக்கும். உடல் நிலை சார்ந்த சிறுசிறு சுகயீனம் இருக்கும் எடுக்கும் விடயங்களை எண்ணம்போல செயற்படுத்த முடியாத நிலைகள் இருக்கும். தாயார் வழியில் செலவீனங்கள் ஏற்படும். பெண்களுக்கு மனநிலையில் அதிகமான யோசனைகள் ஏற்படும். குடும்ப நிலையில் சற்று குழப்பமான பலன் இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலையிருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகளும் பரீட்சைகளில் நற்பெறு பேறுகளும் அமையும். சற்று சிக்கல் இழுபறி நிலைகளும் இருக்கும். அதற்கு ஏற்ப செயற்பட்டு வெற்றிபெறுக.

## தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)




குருவின் ஆதிபத்தியம் கொண்ட தனு ராசி அன்பர்களே! உங்களின் மனதில் தோன்றும் எண்ணத்தையே முடிவாக்கி செயல்படும் தன்னம்பிக்கை அதிகம் கொண்ட நீங்கள் இதனாலேயே பிரச்சினைகளையும் அதிகம் சந்திப்பீர்கள். உங்களின் ராசி நிலைக்கு குருவின் சஞ்சாரமானது. ஜெயஸ்த்தானமாகிய 3ஆம் இடம் அமைகின்றது. காரியத் தடைகள் சற்று அதிகமாக அமைந்திருக்கும். எடுக்கும் முயற்சிகளில் பொறுமை நிதானம் தேவை. குடும்ப நிலையில் சற்று மந்தமான பலன்கள் இருக்கும். எதையும் பொறுமையாக மிகவும் நிதானமாக கையாள்வதே மிகவும் நல்லது. உங்களின் ராசிக்கு உரிய பாக்கியஸ்த்தானத்தை குரவின் சுபப்பார்வையானது எதிர்பாராத திடீர் நன்மைகளும் அதிஸ்ட பலன்களும் அமையும் நிலையும் இருக்கும். இருப்பினும் உடல் நிலையிலே உபாதைகள் ஏற்படும். மனச்சஞ்சலம் மனக் கவலை அதிகமாக இருக்கும். சகோதரர்களின் மூலமாகவும் கவலையும் சஞ்சல நிலையும் அமையும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மனச் சஞ்சல நிலை அதிகமாக அமையும். தேவையற்ற வீண் பிரச்சினைகள் சூழும். மாணவர்களின் கல்வி நிலையில் கூடிய கவனமும் பொறுமையும் கொள்ளவேண்டும் பொதுவாக இந்தக் குருப்பெயர்ச்சி மூலமாக பெரும் நன்மைகள் அமையும் நிலை மிகவும் முறையே இடையிடையே அனுகூல நன்மைகள் அமையும் பலனும் உண்டு. தர்ம சிந்தனையோடு செயற்பட்டு வெற்றி காண்க!

## மகரம் (உத்தராடம் 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)




சனீஸ்வரனின் ஆதிபத்தியம் கொண்ட மகரராசி அன்பர்களே! எல்லா விடயங்களிலும் மிகவும் கண்டிப்பாக சாணக்கியமாக செயற்படுகின்ற நீங்கள், அடிக்கடி ஏதோ ஒரு வகையில் பிரயாணம் இடமாற்றம் காணுவீர்கள். தொழில் சார்ந்த வேலைப்பளு அலைச்சல் மிகவும் அதிகமாக அமைந்திருக்கும். குடும்ப நிலையில் புது முயற்சிகளில் எதிர்பாராத வகை திடீர் நன்மை அமையும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலை இருக்கும். உறவினர்களின் மூலமாக திடீர் நன்மைகள் அனுகூலங்கள் ஏற்படும். எதிர்பார்ப்புகளில் ஓரளவிற்கு வெற்றிகள் ஏற்படும். திடீர் சுபகாரிய அனுகூலம் ஏற்படும். பொதுவாக நண்பர்கள் உதவினர்கள் அனுகூலம் சுலபமாக சுமகமாக இருக்கும். பெண்களுக்கு மன மகிழ்வும் நன்மையும் அமையும். பலன் இருக்கும் மாணவர்களின் கல்வி நிலையில் நன்மைகளும் பரீட்சைகளில் நற் பெறுபேறும் அமையும் நிலை இருக்கும். தொழில் சார்ந்த பதவி உயர்வு நிலை. வெளிநாட்டு பயணம் என்பன அமையும் நிலை இருக்கும். பொதுவாக இந்தக் குருப்பெயர்ச்சி இடையிடையே சிறு சிறு சிக்கல் இழுபறி நிலை அமைந்தாலும் பெரும்பாலும் நற்பலன் அமையும். அதற்கு ஏற்ப செயற்பட்டு வெற்றி காண்க!

## கும்பம் (அவிட்டம் 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்)





சனீஸ்வரனின் ஆதிபத்தியம் கொண்ட கும்பராசி அன்பர்களே! எல்லா விடயங்களிலும் தெளிவாக சிந்தித்து உங்களின் நலனை காத்துக்கொள்ளும் சாதுர்யம் கொண்டவர்கள் நீங்கள் மற்றவர்களின் விமர்சனத்தை கண்டு கொள்ளாத குருவின் கோசார சஞ்சாரம், ஜென்மஸ்தானமாகிய உங்களின் ராசியில் அமைகின்றது. எனவே எடுக்கும் முயற்சிகளில் சற்று பொறுமை, நிதானம் கொண்டு செயற்பட வேண்டும். தொழில் நிலைகளில் சிக்கல் இழுபறி நிலைகள் இருக்கும். வேலைப்பளு மிகவும் அதிகமாக அமையும். கொடுக்கல், வாங்கலில் சற்று சிக்கல், இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலைகள் இருக்கும். குடும்ப நிலையில் சிறு சிறு பிரச்சினைகள் மந்த நிலைகள் என்பன இடையிடையே அமையும். கடன் பிரச்சினைகளில் சிக்கல் நிலையிருக்கும். உடல் நிலை சார்ந்த உபாதைகள் அமையும். தேவையற்ற அலைச்சல் நிலைகள் அதிகமாக இருக்கும். எனவே அதற்கு ஏற்ப பொறுமையும், நிதானமும், கொண்டு செயற்படுவது மிக நல்லது. பெண்களுக்கு மனச்சஞ்சலமும், தேவையற்ற பிரச்சினை, சிக்கல் நிலைகளும் அமையும். அதற்கு ஏற்ப நிதானமுடன் செயற்படுவது நல்லது மாணவர்களின் கல்வி நிலையில் சஞ்சலமான நிலை மந்த நிலை என்பன அமையும். பலன் இருக்கும். பொதுவாக இந்தக் குருப்பெயர்ச்சியின் மூலமாக சற்று மத்திமமான பலன்களே அமையும். அதற்கு ஏற்ப நிதானமாக செயற்பட்டு வெற்றி காண்க.

## மீனம் (பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)




குருவின் ஆதிபத்தியம் கொண்ட மீனராசி அன்பர்களே! வசீகரமான செயலும் எதையும் சமயோசிதமாக கையாளும் திறனும் கொண்ட நீங்கள் எதிரிகைள இலகுவாக சமாளித்து விடுவீகள். உங்களின் ராசி நிலைக்கு குரவின் சஞ்சாரம் விரளஸ்தானமாகிய 12ஆம் இடம் அமைகின்றார். பொதுவாகவே எடுக்கும் முயற்சிகளில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளிலே பலன்கள் அமையும். தொழில் நிலைகளிலே எதிர்பார்ப்புகளை ஓரளவிற்கு அமைய முடியும். பணவரவு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலை இருக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிலைகள் இருக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிலைகள் அமையும் பலனும். சுபச் செலவுகளும் ஏற்படும். உறவினர்களின் மூலமாக அனுகூலமான நற்பலன்கள் ஏற்படும். தேவையற்ற திடீர் அலைச்சல் நிலைகள் இருக்கும். புதிய முயற்சிகளிலே சிறு சிறு தடைகள் தாமத இழுபறி நிலைகள் இடையிடையே ஏற்படும் நிலை இருக்கும். பெண்களுக்கு சற்று மனக் குழப்பமான நிலை இருக்கும். குடும்ப நிலையில் சிறு சிறு சிக்கல் நிலைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். மாணவர்கள் கல்வி நிலையில் கூடுதலான முயற்சி எடுக்க வேண்டும். பரீட்சைகளில் சற்று மந்தமான நிலைகள் அமைந்திருக்கும். பொதுவாகவே இந்தக் குருப்பெயர்ச்சி மூலமாக அனுகூலமான நன்மைகளுக்கு இடமுண்டு. அதேபோல சற்று மனக் குழப்பமும் அமையும். எனவே பொறுமை நிதானமுடன் செயற்பட்டு வெற்றி காண்க.


SSSGC - Canada



GLOBAL AKHANDA BHAJAN

NOVEMBER 13, 2021, 5:15 PM EST-
NOVEMBER 14, 2021 6:00 PM EST

"Devotional singing (bhajan) must become an unbroken stream of bliss on your tongues and in your hearts; it must confer on you the uninterrupted awareness of soham, of the unity of I and He."
- SRI SATHYA SAI BABA (SSS IX, 41-42)

Sri Sathya Sai Baba Centre of Scarborough
5321 Finch Ave E, Scarborough, ON M1S 5W2

Listen in live at:
www.sssgc-canada.org

Subject to a maximum of 50% capacity. Devotees will be allowed inside on a first come, first served basis.

Please note: If you choose to visit the centre in person, you are required to wear a face mask/covering which covers your nose, mouth and chin at all times both inside and outside the Centre and you are required to maintain a physical distance of at least 2 meters from every other person, unless you are with someone who lives in your same household or you have a caregiver. You will also be required to sign-in at the Centre upon your arrival.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 972



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை

*"துணையுந் தொழுந் தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்*
*பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்*
*கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்*
*அணையும் திரிபுரசுந்தரி யாவது அறிந்தனமே."*

வைகாசி மாதம் வந்துவிட்டால் திருகோணமலையிலுள்ள சக்தி ஆலயங்கள் அனைத்தும் விழாக்கோலங்கொண்டு காணப்படும். இக்காலத்திலே நடைபெறும் வைகாசிப்பொங்கல் மிகவும் பிரபல்யமானது. இங்குள்ள ஏனைய பிரபலமான சக்தி வழிபாட்டு ஆலயங்களாக விளங்கும், சல்லி அம்மன் கோயில், பாலம் போட்டாறு பத்தினி அம்மன் கோயில் உட்பட பல ஆலயங்களிலும் வைகாசிப் பொங்கல் களைகட்டும். இந்தவகையில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலே நடைபெறும் பொங்கல் விழா மிகப் பிரசித்தமானது. இவ்விழா வைகாசிப் பௌர்ணமிக்கு முதல்வரும் திங்கட்கிழமை பெருவிழாவாக நடைபெறும். வைகாசிப் பொங்கல், ஆலயத்தைச் சுற்றியுள்ள பெருவீதியில் நடைபெறும். இவ்விழாவன்று இரவு எங்கும் புகைமண்டலமாகக் காட்சியளித்து, பெருவேள்வி நடைபெறுவது போன்ற பிரமையை ஏற்படுத்தும். ஆலயத்தைச் சூழவுள்ள வீதியில் பக்தர்கள் பொங்கலிடும்போது, ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பொங்கல், மண்டபவாசலில் வெளியில் நடைபெறும். அம்பாளின் பொங்கற் பிரசாதமும், அடியார்களின் பொங்கற் பிரசாதமும் அம்பாளுக்குப் படைக்கப்பட்டு, பூசை நடைபெற்று வைகாசிப் பொங்கல் விழா நிறைவுபெறும்.

இவ்வாலயத்திலே மிக விமரிகையாகப் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவற்றுள் நவராத்திரி, கும்பவிழா, கேதாரகௌரிவிரதம் ஆகியவை மிகவும் பிரபல்யமானவை. இவற்றுள் நவராத்திரி, புரட்டாதி மாதப் பிரதமை தொடக்கம் ஒன்பது இரவுகளும் இயந்திரபூசை நடைபெற்று, ஒன்பதாவது நாள் நவமியன்று மகிஷாசூர சங்காரமாகிய சூரன்போர் நடைபெறும். முதல் மூன்றுநாள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாள் இலட்சுமிக்கும், அடுத்த மூன்று நாள் சரஸ்வதிக்கும் அலங்காரப்பூசைகள் நடைபெற்று திருவீதியுலாவும், நடைபெறும். பத்தாவது நாள் விஜயதசமியன்று கும்பம் சொரிந்து தீர்த்தோற்சவம் நடைபெறும். இவ்வாலயத்தில் துர்க்கை. சரஸ்வதி, லக்ஷ்மி ஆகியோருக்குத் தனித்தனி ஆலயமுண்டு. இக்காலத்தில் ஸ்ரீ சக்கரபூசை நடைபெற்று அன்னை ஸ்ரீ பத்தரகாளி அம்பாளுடன் முத்தேவியரும் நவராத்திரி விழாவின்போது வலம் வருவர். சூரியபகவான் கோள் சஞ்சார முறைப்படி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியை அடைவதாகச் சோதிடம் கூறியுள்ளது. புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி ராசியில் சஞ்சரிக்கின்றான். கன்னிராசி புதனுக்குரிய வீடாகும், புதனைப் புத்திக்காரன் அதாவது அறிவை வளர்ப்பவன் எனப் போற்றுவர். எனவே கல்வி, செல்வம், வீரத்தை வேண்டி வழிபட ஏற்ற மாதமாகப் புரட்டாதி மாதத்தை ஆன்றோர் தெரிவு செய்துள்ளனர்.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலே நடைபெறும் கும்பவிழாவும் மிகவும் பிரசித்தமானது. இவ்விழா இலங்கையில் திருகோணமலையில் மட்டுமே கொண்டாடப்படுகின்றது. திருகோணமலையிலுள்ள ஆலயங்கள் பலவற்றிலும் இக்கும்பவிழா பெருவிழாவாகக் கொண்டாடப்படும். திருகோணமலையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கான காரணத்தை அறிவது அவசியமாகும்.

இக்காலப்பகுதியில் சகடையில் கம்புகளால் தேர்போலக் கட்டியே தேர்த்திருவிழா நடைபெற்று வந்துள்ளது. 1972 ஆம் ஆண்டு கட்டுத்தேருக்குப் பதிலாகச் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. அத்தோடு மூன்று மஞ்சமும் செய்யப்பட்டு ரதோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத் தேராகும். இத்தேர் முப்பத்திரண்டு அடி உயரம் உடையது. தேர்த் திருவிழாவன்று அன்னை தேரில் எழுந்தருளி வரும்பொழுது, ரதத்தின் இடப்பக்க வடத்தைப் பெண்கள் இழுக்கும் வழக்கமும் ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்திலே காணப்படுகின்றது. 1981 ஆம் ஆண்டு இத்தேரைப் பாதுகாப்பதற்கான தேராலயமும் அமைக்கப்பட்டது.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் அருளோடு அழகும் வாய்ந்த ஆலயமாகக் காணப்படுகின்றது. கருவறையில் சதுர்ப்புஜங்களை உடைய அம்பாளின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சூலம், டமருகம், கட்கம், கபாலம் தாங்கிய திருக்கரங்களோடு அம்பாள் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். மகாமண்டபத்தில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், விநாயகர், முருகன், கிடாரத்தினுள்ளிருந்து கிடைக்கப்பெற்ற அம்பாள், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி, சண்டேஸ்வரி, ஆகிய தாமிர விக்கிரகங்களும், பிள்ளையாரும், வடக்குப்பக்கம் தண்டாயுதபாணியின் சிலாவிக்கிரகமும் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலயத்திலே உச்சிக்காலம், சாயரட்சை ஆகிய இருவேளைகளிலும் நித்தியபூசை நடைபெறுகின்றது. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக்கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெறும். ஒன்பதாம்நாள் ரதோற்சவம் நடைபெற்றுப் பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், கோணேசப்பெருமான் எழுந்தருளியுள்ள கோணமாமலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவார்.

*வளரும்...*

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans
- Cheque Cashing rate of 2.5%

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
#4986,4980,#0372,#1520,#4993,#4998,Cr53,Cr245,Cr50,Cr66,Cr54,Cr246,Cr226,Cr157,Cr167,Cr187

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

We offer:
Gift cards and all top up
(domestic and international)



தொடர்புகளுக்கு :

Tel : 416-291-CASH (2274)

Fax : 416-291-2276

E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# இவ்வார ராசிபலன்

## 12-11-2021 வெள்ளி தொடக்கம் 18-11-2021 வியாழன் வரையும்

**மேஷம்:** சாதனை படைக்கும் வாரம். கர்மவினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்து காட்டுவீர்கள். மூத்தோர் மனக்குறை அகலும். குதூகலம் கூடும். குழப்பங்கள் நீங்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைக்கூடும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் பிரச்சினை தீரும். மனஅமைதி தேடி அலைவீர்கள். காதலில் வெற்றி பெறுவீர்கள். ஞாபகத்திறன் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டுப் பயணம் உண்டு. வாகனங்களில் முதலீடு உண்டாகும். கசந்த காலங்கள் விலகி வசந்த காலங்கள் உருவாகும். தொழில் போட்டி மறையும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. எதிர்ப்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். முன் கோபத்தை தவிர்ப்பது நல்லது. சேமிப்பு வளரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வம்புதும்புகள் ஒழியும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். உறவினர் வருகை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 2,9,4,0
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,D

**ரிஷபம்:** புத்திர யோகம் கிடைக்கும் வாரம். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நண்பர்கள் உதவி கிடைக்கும். மனிதநேயம் மிகுதியாகும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். புதிய வாய்ப்புக்கள் கூடும். இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையம். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். வங்கி சேமிப்பு உயரும். மங்கல செய்தியால் மனம் மகிழும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஹரித்துவார், அதிர்ஷ்ட எண்: 7,3,0,2
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z

**மிதுனம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். உற்சாகம் கலை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழிலில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். சிரமங்கள் குறையும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். சுபச் செலவு அதிகமாகும். விடாமுயற்சி அவசியம். ஆடை, அணிகலன்கள் சேர்க்கையுண்டு. கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். பகைவர் பணிந்து நிற்பர். மனைவியால் மரியாதை உயரும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண்நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிடைக்கும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். தோற்றப் பொலிவு கூடும். மனக்கட்டுப்பாடு அவசியம். தெளிவான முடிவுகள் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,3,1,8
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,S

**கடகம்:** துணிவோடு செயல்படும் வாரம். செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. குடும்பச் குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். ஷேர்மார்க்கெட்டில் லாபம் உண்டு. உத்தியோக இடமாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. பட்டம் பதவி தேடி வரும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிட தொழில் கவனம் தேவை. சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றி மறையும். மாற்று இன நட்பு பெருகும். தொல்லைத் தந்தவர் விலகிவிடுவர். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,1,7,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,P

**சிம்மம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். கணவன், மனைவி ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். வெற்றிப் பாதைகள் அடியெடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். செய்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூரத் தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி உறவுகளால் தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். செயல்பாட்டில் கவனம் தேவை. கலகலப்புக் குறைப்பு. உறவினர் வருகையால் செலவு ஏற்படும். புகழ் கௌரவம் சேரும். நோய் அகலும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு சேரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: 3,7,9,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E

**கன்னி:** லஷ்மி கடாட்ஷம் பெருகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. தன வரவுகள் தடைப்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். மனைவியல் மதிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை கூடும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். தொல்லை தந்தவர் விலகிடுவர். வங்கி சேமிப்பு உயரும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செல்வு ஏற்படும். உறவுகளால் தொல்லையுண்டு. பிள்ளைகளால் பெருமையுண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். காதலால் மகிழ்ச்சி உண்டு. சேய்நலம் கூடும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. நிதி நிலைமை சீராகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பூமியால் லாபம் அடைவீர்கள். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். வேற்று இன நட்பு கிட்டும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தான தர்மங்கள் பலன் தரும். இனிப்பான செய்திகள் தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 9,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,U



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


**துலாம்:** பூர்வீக சொத்து கிடைக்கும் வாரம். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். இனிய தகவல் வந்து சேரும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டு. தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். முன்கோபம் தவிர்க்கவும். மன சந்தோஷம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தோற்றப்பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். பூர்வீக சொத்து கிடைக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். திருமண வாய்ப்பு கூடி வரும். அடுத்த நபரால் லாபம் வரும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். ஆபரண சேர்க்கையுண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 2,3,9,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,G

**விருச்சிகம்:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். உற்சாகம் கலை கட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளால் பிரச்சனை வரும். கணவன், மனைவி உறவு பலப்படும். அயல்நாட்டுப் பயணம் ஏற்படும். மருத்துவச் செலவு கூடும். சுயத்தொழில் முயற்சி வெற்றி பெறும். புதிய வீடு, நிலம் வாங்க நேரிடும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வடிவுடை அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z

**தனுசு:** சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டிய வாரம். முகப்பொலிவு கூடும். முயற்சிகள் பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். உறவால் பணவிரயம் ஏற்படும். நல்லோர்கள் நட்பு ஏற்படும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் கூடும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். குடும்பம் மனநிறைவு தரும். கல்விக்கடன் ஏற்படும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. குதூகலம் தழைத்தோங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். குறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். பணிமாற்றம் நன்மை தரும். செயலில் வேகம் குறையும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் சேரும். குடும்ப கௌரவம் ஓங்கும். பெருவாரியான நன்மைகள் நடக்கும். விசேஷ பலன்கள் உண்டு. திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,E

**மகரம்:** பிரிந்த குடும்பம் ஒன்று சேரும் வாரம். மனை வாங்கும் யோகம் உண்டு. மனைவியின் ஆறுதலான பேச்சு பயன் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை மாறும். கடன் உதவி கிட்டும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கல் நன்மை தரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி ஏற்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். நேர்த்தியான காலம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். பூர்வீக சொத்து வரும். புத்தாடை ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புகள் கூடும். மன தெளிவு கிட்டும். மனைவி வழி சொந்தம் வரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றம் தரும். சுபச்செய்தி வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். தெய்வப் பற்று கூடும். புதிய நட்பை தவிர்க்கவும். வாழ்க்கை வசதி பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,2,9,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J

**கும்பம்:** வெளியூர் பயணம் செல்லும் வாரம். தீர்த்த யாத்திரை உண்டு. வீண்வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும். கலையார்வம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத்தடை அகலும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். புத்திரரால் பூரிப்பு உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சங்கடங்கள் அதிகமாகும். அரசியல் ஆதாயம் உண்டு. வேலைப்பளு கூடும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கை கூடி வரும். குடும்ப மேன்மை உண்டு. குதூகலம் பயணம் உண்டு. விவசாய நிலம் சேரும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சகோதிரியால் லாபம் உண்டு. இனிக்கும் சம்பவம் அமையும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு தரும். நிர்வாகத் திறமை அதிகரிக்கும். சுபச்செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வன தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,7,0,2 அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D

**மீனம்:** அந்தஸ்து உயரும் வாரம். சுபச்செய்தி வரும். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். மனநிறைவு உண்டாகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டாகும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புகள் அகலும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவுகள் திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. ஆடம்பர பொருள் சேரும். பணவரவு திருப்தி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,5
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K

*உதயன் வாரப் பத்திரிகையின் வெள்ளி விழா நிகழ்வில் படித்த கவிதை.*



# கடந்துவந்த கால் நூற்றாண்டு

- கவிஞர் க.குமரகுரு

1 ஊரெல்லாம் பதட்டமாக உயிர்பிழைத்தோர் கதிகலங்க
பாரெல்லாம் அகதியாக கால்பதித்த எம்மினத்தை
வாரியணைத் துவரவேற்க யாருமற்ற வேளைதனில்
காரிருள்வி லக்கியெம்மை கரம்கூப்பி வரவேற்றாய்.

2 வெள்ளிக்கி ழமைதோறும் விரிவான செய்திகளை
அள்ளிவரும் அழகுநிறை ஊடகமாய் மிளிருகின்ற
உள்ளத்தைக் கவர்ந்திழுக்கும் உற்றநல்ல நண்பனாக
எள்அளவும் தளர்ந்திடாமல் எப்போதும் உடனிருப்பாய்.

3 மக்களெலாம் விரும்புகின்ற மகத்தான உதயனிதழ்
பக்கங்கள் தருகின்ற பலதரப்பு விடையங்கள்
முத்தமிழை தாங்கிவரும் முழுதான செய்திகளும்
தித்திக்கும் மனநிறைவை கொடுத்துவிடும் வாசகர்க்கு.

4 உண்மையினை எடுத்தியம்பி உணர்வுகளின் தொகுப்பாக
மனிதநேயம் கொண்டதாக மக்களது எண்ணமாக
எண்ணியதன் உணர்வுகளை எப்போதும் தாங்கிவரும்
கண்களிலே நீர்பனிக்கும் கதிரோட்டம் கண்டவுடன்

5 கடந்துவந்த கால்நூற்றாண் டுகாலத்தில் கணக்கின்றி
நடந்திட்ட நிகழ்வுகளோ ஏராளம்! ஏராளம்!!
விடுதலையின் வெற்றியெம்மை நெருங்கிவந்த போதினிலே
சடுதியான சூழ்ச்சியினால் போராட்டம் மௌனித்தும்

6 எத்தனையோ துன்பங்கள் ஈழத்த மிழர்க்கட்கு
அத்தனையும் எதிரொலிக்க அரசியலில் அனாதையாக
தத்தளித்த போதெல்லாம் தயங்காமல் செய்தியாக்கி
இத்தரையில் வாழுகின்ற எம்முறவை இணைத்திட்டாய்

7 காட்டுமிராண் டிமனிதர்கள் கருணையற்ற செய்கைகளை
ஓட்டுமொத்த ஈழத்த மிழ்மக்கள் உணர்வுகளை
தாக்குகின்ற போதெல்லாம் தயங்காமல் உறுதியுடன்
தீட்டுகின்ற கதிரோட்டம் சென்றிடுமே செந்நெருப்பாய்.

8 எம்மவரின் வாழ்வியலை எடுத்தியம்பும் உதயனிதழ்
மண்ணைவிட்டு வந்தோரின் கல்விகலை இலக்கியம்
எண்ணற்ற பல்துறைசார் வளர்ச்சியினை எப்போதும்
விண்ணுயர வாழ்த்துரைத்து மென்மேலும் வளர்த்திடுமே

9 கடந்துவந்த பாதைகால் நூற்றாண்டைப் பின்நோக்கின்
தொடர்ந்துவந்த எண்ணிலாத இடையூறுகள் சவால்களையும்
திடமான உறுதியுடன் சகலதையும் பின்தள்ளி
தடம்பதித்து மிளிருகின்றார் தரணியெங்கும் தாரகையாய்!!!

10 சர்வதேச விருதுவிழா உதயனது தகைமைவிழா
மெய்யாக உழைத்திட்ட மேலான பெருமக்கள்
பல்துறைசார் கலைஞர்கள் எழுத்தாளர் சான்றோர்கள்
எல்லோர்க்கும் விருதளித்து ஏற்றமுறச் செய்திடுவார்.

11 தங்கப்ப தக்கங்கள் தரமான சிறுகதைக்கு
சொந்தபந்தம் பாராது திறமைக்கு முதற்பரிசு
சந்திக்கும் கலைஞர்கள் தமிழகமோ தாய்நாடோ
வந்தோரை அரவணைத்து வரவேற்றுப் பரிசளிப்பார்.

12 மனிதநேயம் நிறைந்திட்ட மகத்தான செய்தியாளர்
நினைவெல்லாம் நிலைத்திட்ட நட்பின்நா யகனென்று
மனம்திறந்து வாழ்த்தினார்க விப்பேரசு வைரமுத்து
எழுத்துவேந்தர் என்றுரைத்தார் கவிதையுற வுஎர்வாடி.

13 சொல்லேர்உ ழவனாக சுதந்திரமாய் சுழன்றிடுவார்
எல்லோரி டமும்இனிதாய் உறவாடும் நண்பரவர்
எல்லைபாரார் எழுதுவோரை எப்போதும் ஊக்குவிப்பார்
பொய்யில்லை இதுவெறுமனே வெற்றுப்பு கழ்ச்சியில்லை

14 கனடியஅ ரசியல்நீ ரோட்டத்தில் கால்பதித்த
அனைவரையும் இனமதநி றவேற்றுமையைப் புறம்தள்ளி
மனதார வரவேற்று வாழ்த்துகின்ற பண்பாளர்
அனைவரதும் வெற்றிக்காய் அயராது துணைபுரிவார்.

15 அங்கிங்கொ ணாதபடி எங்கும்நி றைந்திருப்பார்
சங்கடங்கள் வந்தபோதும் தளராத மனமுடையோன்
எங்களது மக்களது இதயத்தில் நிறைந்திருக்கும்
மங்காத புகழுடனே வாழ்ந்திடுவீர் நூறாண்டு.

16 உதயனிதழ் ஆசிரியர்ஆர் என்லோகேந் திரலிங்கம்
கதிரோட்டம் தாங்கிவந்த கனதியான செய்திகளை
இதுவரைஎ னும்தொகுப்பு ஆவணத்தை தந்தவரே
நதிபோன்று வாழ்ந்திடுவாய் நாயகனே வாழ்த்துகின்றேன்.


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**




ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

மலேசிய மடல்

# தீபாவளி புனைகதைகள் தமிழ் இலக்கியமா?

## மின்னல் வானொலியின் "அமுதே தமிழே" நிகழ்ச்சியில் தமிழ்த் துரோகம்



நக்கீரன்

(சென்ற வார தொடர்ச்சி...)

2021 ஏப்ரல் 14-ஆம் நாளில், கோலாலம்பூர் கலா மண்டபத்தில் சித்திரை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்பதாக தமிழ்மொழி-தமிழ் இன சிந்தனைக்கு மாறுபட்டவர்களாலும் ஆர்.எஸ்.எஸ். பற்றாளர்களாலும் விழா நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய அமைச்சர் டத்தோஸ்ரீ மு.சரவணன்கூட, "தமிழும் சமயமும்" தமிழர்க்கு இரு விழியென சொன்னது சைவம் மெல்ல தமிழரிடம் இருந்து அகன்றுவிட்டது என்பதற்கான முத்தாய்ப்பான சான்றாகும்.



ஆரியம் என்னும் பார்ப்பனியம் சைவம், சமணம், பௌத்தம் போன்ற சமயங்களை அழிப்பதற்குக் காரணம், இந்த மூன்று சமயங்களிலும் சாதி ஏற்றத் தாழ்வில்லை உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் கட்டமைப்பு இல்லை. இறைவன் முன்பு அனைவரும் சமம் என்பதை இந்த முச்சமயங்களும் எடுத்தியம்பின்.

அத்துடன், இந்த சமயங்களில் பார்ப்பனர்கள் தங்களின் உயர்சாதி அந்தஸ்தை நிலைநிருத்திக் கொள்ள வாய்ப்பில்லை. சொர்க்கம்-நகரத்தைக் காட்டியும், முற்பிறவி-அடுத்தப்பிறவி எனச் சொல்லி பிறவிப்பயனை முன்னிறுத்தியும் கர்ம வினையைக் காட்டியும் பூசையையும் பரிகார வேள்வியையும் நடத்தி தாங்கள் பிழைப்பதற்கும் இந்த மூன்று சமயங்களிலும் வழியில்லை.

அதனால், பௌத்த சமயம் அது தோன்றிய மண்ணில் இருந்தே பிராமணர்களால் விரட்டப்பட்டது. சமண சமயத்தை ஏமாளியான பாண்டிய மன்னனின் துணை கொண்டு அழித்ததும் இதே ஆரியர்கள்தான். அடுத்து, இந்து சமயம் என்னும் கெட்டியான போர்வையைக் கொண்டு சைவ சமயத்தையும் மறைத்து விட்டனர். இன்றைய தலைமுறைக்கு சைவம் என்றால் என்னவென்றே தெரியாது. தெரிந்ததெல்லாம் இந்து சமயம் ஒன்றுதான். இந்த இந்து சமயம் எப்போது உருவானது?

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் பிராமணர்களாலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களாலும் இந்து சமயம் கட்டியமைக்கப்பட்டது. அது-வரை, தமிழர்கள் தீபாவளியைக் கொண்டாடியதில்லை விநாயகர் சதுர்த்தி என்றால் என்னவென்றேத் தெரியாது. இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இந்து என்ற சொல்லேக் கிடையாது. ஆரியர்களால் உருவாக்கப்பட்ட நான்மறை என்று சொல்லப்படும் ரிக், யஸுர், சாம, அதர்வனம் என்னும் நான்கு வேதங்களிலும் இந்து என்னும் சொல் இல்லை.

ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) தங்களின் பிழைப்பிற்காகவும் அவர்கள் தாங்கள்-தான் மிக உயர்ந்த சாதியினர் என்னும் பிம்பத்தைக் கட்டி அமைக்கவும் தேவதாசி முறை உருவாகவும் அடித்தளமாக இருந்தவை ஆலயங்கள்தான் அவ்வாறு ஆலயங்கள் உருவாகக் காரணமான அர்த்தசாத்திரத்தை எழுதிய சாணக்கியன்கூட இந்து என்னும் சொல்லை அறியாதவன்.

பொதுவாக இந்து என்னும் சொல், வரலாறு நெடுகிலும் எந்த இலக்கியத்திலும் சொல்லப்படவில்லை பக்தி இலக்கியங்களிலும்கூட இந்து என்னும் சொல் தென்படவில்லை. இந்திய துணைக் கண்டத்தில் ஆங்கிலேயர் வருகைக்கு முன், இந்து என்று ஒருவரும் தம்மை அழைத்துக் கொண்டதில்லை. பல்வேறு அடையாளங்களு-டன் வாழ்ந்த பலதரப்பட்ட மக்களாகத்தான் விளங்கினர். தாங்கள் வாழ்ந்த இடம், பேசிய மொழி, சார்ந்திருந்த சாதி, புரிந்த தொழில், கொண்ட சமய நெறி ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தனி குழுவினராகத்தான் வாழ்ந்தனர் அவ்வண்ணமே அடையாளப்படுத்திக் கொண்டனர்.

காஞ்சி காமகோடி பிடாதிபதி சொல்லியிருக்கும் கருத்தே இதற்கு சரியான சான்று: "அவன் (ஆங்கிலேயர்) மட்டும் இந்து என்று பெயர் வைத்திருக்காவிட்டால், ஒவ்வோர் ஊரிலும் சைவர், வைணவர், சாக்தர், முருகபக்தர், சூரியனைக் கும்பிடுவோர், எல்லை அம்மனை வணங்குவோர் என்றெல்லாம் நம்மைப் பிரித்துக் கொண்டு தனித்தனி மதத்தினராக வாழ்ந்து கொண்டிருப்போம் சைவர்களும் வைணவர்களும் ஒரே சாமியை-யயா கும்பிடுகின்றனர்?. வைணவர்களுக்கு சிவன் சாமியேக் கிடையாது தீவிர சிவ பக்தர் விஷ்ணுவை ஒருகாலும் இறைவனாக ஏற்கமாட்டார். இப்படிப்பட்டவர்களை யெல்லாம் எப்படி ஒரேக் குடையின்கீழ் கொண்டுவர முடியும்? வெள்ளைக்காரன் அவன் வசதிக்காக என்றைக்கு இந்து என்று பெயர் வைத்தானோ அன்றே (பிராமணர்களாகிய) நாமெல்லாம் பிழைத்தோம்" என்று காஞ்சி காமகோடி சுவாமி சொன்னதை நடுநிலை மனம் படைத்தோர் மனசாட்சியுடன் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பிரிட்டிஷ் இந்தியாவின் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு மக்கள் தொகை கணக்கு எடுப்பதில் பல்வேறு சவால்களும் இடர்களும் தொடர்ந்தன. மொகலாய சாம்ராஜிய காலத்தில் உருவான மற்றும் மதம் மாற்றப்பட்ட இஸ்லாமியர்களை கணக்கெடுக்க அவர்களால் எளிதில் முடிந்தது அதைப்போல ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் உருவான மற்றும் மதம் மாற்றப்பட்ட கிறித்துவர்களையும் எண்ணிக்கையில் அடக்க முடிந்தது.



ஆனால் சைவர்கள், வைணவர்கள், சமண (ஜைன) சமயத்தினர், பௌத்தர்கள், சீக்கியர்கள், அம்மன் வழிபாட்டினர், மலைவாழ் மக்கள், சிறுதெய்வ வணக்க முறையினர் உள்ளிட்ட இன்னும் ஏராளமான தரப்பினரை எப்படி ஒருமுகப்படுத்துவது? எவ்வாறு கணக்கெடுப்பது என்னும் வகை தெரியாமல் ஆங்கில நிர்வாகத்தினர் திணறிக் கொண்டிருந்தனர்.

இது குறித்து பிரிட்டிஷ் மகாராணியா-ரும் இரண்டொரு முறை சளித்துக் கொண்டாராம். இந்தியர்களை அடக்கி ஆளத்தெரிகிய உங்களுக்கெல்லாம் அவர்களுக்கான எண்ணிக்கையை வகைப்படுத்த முடியவில்லையா என்று ஒருசில வைஸ்ராய்களிடம் கடிந்து கொண்டதும் உண்டாம். ஆனாலும், இந்தச் சிக்கல் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

இதற்கிடையில், ஆங்கிலேய நிருவாகத்தில் உயர்பதவிகளில் அமர்ந்து தமக்கான இருப்பை வலுப்படுத்திக் கொள்ள பிராமணர்கள் பெரிதும் முற்பட்டனர். அந்த நாட்களில் அவர்கள்தான் படித்தவர்களாக இருந்ததால் அவர்கள் தங்களுடன் ஒருசில உயர்சாதி வகுப்பினரையும் துணைசேர்த்துக் கொண்டு கிறிஸ்தவர்களையும் இஸ்லாமியர்களையும்விட தங்களுக்கே பிரிட்டிஷ் இந்திய அரசாங்க வேலைவாய்ப்புகளில் அதிக முன்னுரிமைதர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

இந்தக் கட்டத்தில்தான் இந்து என்னும் கூட்டு மத சிந்தனை உருவாக-றது. இவ்வாறு 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து மதம் என்னும் கட்டமைப்பு உருவானபோது, யார் யார் இந்துக்கள் என்னும் வரையையரையை ஆங்கிலேய அதிகாரிகளிடம் இவர்களால் வைக்க முடியவில்லை.

அதனால், ஓர் எளிய ஏற்பாடாக, யார் யாரெல்லாம் இசுலாமியர் இல்லையோ, யார் யாரெல்லாம் கிறிஸ்துவர் இல்லையோ, மற்றவர்கள் எல்லாம் இந்துக்கள் என்று கூறினர். இது ஆங்கிலேயர்களுக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. இதன் தொடர்பில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது பிரிட்டிஷ் மகாராணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்துக்களுக்காக பொது சிவில் சட்டம் வரைவதற்காக பார்ப்பனர்கள் தங்கள்வசம் இருந்த மனுதரும சாத்திரத்தை தந்திரமாக ஆங்கிலேயர்களிடம் கொடுத்தனர். அதன் அடிப்படையில்தான் இந்துக்களுக்கான பொது சிவில் சட்டத்தை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முதன் முதலில் இயற்றினர்.

இத்தகைய பொது சிவில் சட்டத்தைதான், பிரிட்டிஷ் இந்தியாவில் தலைமை நீதிமன்றமாக செயல்பட்ட பிரைவி கௌன்சிலும் (Privy Council) அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இந்து சமயக் கட்டமைப்பு இந்திய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்தே உருவானது. இந்தியா, விடுதலை அடையப் போகிறது என்பது உறுதியானவுடன், "எதிர்கால இந்தியா ஓர் இந்து தேசமாகத்தான் அமைய வேண்டும்" என்பதை பாலகங்காதர திலகர் என்னும் மராத்திய சித்பவன பார்ப்பனரைப் போன்றவர்கள் முன்னெடுத்தனர்.

பாகிஸ்தான் பிரிவினைக்கு இந்த முன்னெடுப்பும் ஒரு காரணமாக அமைந்தது என்றால் அதை மறுப்பார் எவரும் இருக்கமுடியாது.

உண்மையில் இந்து என்னும் சொல், வரலாறு நெடுகிலும் எந்த இலக்கியத்திலும் சொல்லப்படவில்லை. அந்தச் சொல்லை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் அராபியர்கள்தான். அரபு நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வந்தவர்கள் தங்களின் பயணத்தை நேர்த்தியாக திட்டமிட்டு மேற்கொண்டனர்.



இ ந் தி யா வை நெருங்கியதும், பொழுது சாய்வதற்குள் சிந்து நதியை-யக் கடந்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். இரவில் ஆற்றைக் கடப்பது ஆபத்தாக முடியும் என்பதாலும் சில வேளைகளில் படகு கிடைக்காமல் விடியும்வரை இக்கரையிலேயே குளிரில் காத்திருக்க நேரிடும் என்னும் காரணத்தாலும் மாலை-லப் பொழுதுக்குள் சிந்து நதியைக் கடந்து விடும்படி தங்களின் பயணத்தைத் அமைத்துக் கொண்டனர்.

அந்த நேரத்திலெல்லாம், ஆ.்.ப்கானிஸ்தானைக் கடந்தபின், சிந்து நதியின் அக்கரைப் பகுதியை "அல் ஹிந்த்" என்றுதான் அவர்கள் அழைத்தனர். இந்தச் சொல், குறிப்பிட்ட எந்த மக்களையோ அல்லது பிரிவி-னரையோ குறிப்பதாக இல்லை அல்லது ஏதோவொரு மதக் குழுவினரை குறிப்பிடுவதாகவும் பயன்படுத்தப்படவில்லை மாறாக, சிந்து நதிக் கரையை ஒட்டியிருந்த நிலப் பகுதியை அடையாளப்படுத்தத்தான் இந்தச் சொல்லைப் பயன்படுத்தினர்.

ஆனாலும், ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தையதும் நாகரிக மேன்மைமிக்கதுமான கிரேக்க நாகரிக மண்டலத்தில் கிடைக்கும் கல்வெட்டுகளில் "ஹிந்துஷ்" என்னும் சொல் காணப்படுகிறது. இதைத் தவிர, உலகின் வேறு எந்தப் பகுதியிலோ அல்லது இலக்கியப் படைப்புகளிலோ இந்து என்னும் சொல் இல்லை. இந்த ஹிந்துஷ் என்னும் சொல், சிந்து நதியை ஒட்டியிருந்த இடத்தைதான் குறிப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.

எப்படியோ இந்து மதம் உருவானபின், இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தங்களின் மேலாண்மை இருப்பதைப் போல, சுதந்திர இந்தியாவிலும் தங்களை உயர்ந்த இடத்திலேயே நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்று முயன்ற பார்ப்பனர்கள், அதற்கு இந்து சமயத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர்.

இந்து திவிரவாதத்தையும் கையில் எடுத்தனர். அப்பொழுது உருவாக்கப்பட்டு பேரளவில் முன்னெடுக்கப்பட்டதுதான் விநாயகர் சதுர்த்தி தீபாவளி போன்ற பண்டிகைகள். சைவ நெறியைக் கொண்டிருந்த தமிழர்கள் அதுவரை தீபாவளியைக் கொண்டாடியதில்லை அறிந்ததும் இல்லை.

மலேசியாவில் கொண்டாடப்படும் ஹரி ராயா என்னும் பண்டிகை இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் ரம்ஜான் பண்டிகை என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது. இதில், இந்துக்களும் இணைந்து ஒற்றுமையுடன் கொண்டாடி வந்ததை யெல்லாம் மாற்றி அமைத்ததுடன், இந்துக்கள் இனி தீபாவளியைத்தான் கொண்டாட வேண்டும் என்று மடைமாற்றியதில் திலகருக்கு தனி இடம் உண்டு.

(தொடர்ச்சி _27_ பக்கம்)

(_26__ பக்கம் தொடர்ச்சி)

# தீபாவளி புனைகதைகள் தமிழ் இலக்கியமா?

## மின்னல் வானொலியின் “அமுதே தமிழே” நிகழ்ச்சியில் தமிழ்த் துரோகம்

திடுதிப்பென அறிமுகம் கண்ட தீபாவளிக்கு பல கதைகள் உள்ளன. அவை யாவும் அண்மைக் காலத்தில், 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புனையப்பட்ட புராணக் கதைகள். தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகளிலும் தமிழைப் பேசியோரிடமும் சொல்லப்பட்ட-பரப்பப்பட்ட கதை இராவணன் அல்லது அரக்கன் தொடர்புடைய கதை.

திராவிட-ஆரிய பண்பாட்டுப் போர் பன்னெடுங்காலமாகவே உள்ளும் புறமுமாக நடந்து வருகிறது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இது நடைபெற்று வருகிறது. ஆரியர்கள் தங்களை மேலோராகவும் தமிழர்களை அரக்கர்களாகவும் உருவகப் படுத்தி அதன் அடிப்படையில் திருமால் என்னும் வைணவ சமயக் கடவுள் தமிழன் என்னும் அரக்கனைக் கொள்வதும் அவன் இறந்த நாளில் இந்து சமய முறைப்படி திவசம் அனுசரிப்பதும்தான் தீபாவளி பண்டிகையின் அடிப்படை.

எண்ணெய்க் குளியல், புத்தாடை, பலகாரம், புத்தொளி, புது வாழ்க்கை என்பதெல்லாம் இடைச் செறுகல். அரக்கனை வீழ்த்துவதற்காக திருமால் தந்திரமாக பன்றி அவதாரம் எடுப்பது, கடலை பாயாக சுருட்டுவது என்னும் புனைகதைகளை யெல்லாம் இன்றைய நாட்களில் ஒளித்துவிட்டு-மறைத்துவிட்டு தீமையை நன்மை வென்ற நாள் எனவும், இருளை ஒளி வென்ற தினம் என்பதாகவும் தலுக்காக பேசி வருகின்றனர்.

“தீபம்” என்றால் ஒளிவிளக்குį “ஆவளி” என்றால் வரிசை. வரிசையாக விளக்கேற்றி வழிபடும்போது இருள் நீங்கி மனிதர்கள் ஒளிபெறும் பண்டிகையே தீபாவளி என சுறுக்கமாக சொல்லிச் செல்கின்றனர்.

உண்மையை உரக்க சொல்ல வேண்டுமென்றால், தமிழர் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டுவரை இந்து என்னும் சொல்லைப் போலவே தீபாவளி பண்டிகை குறித்தும் எந்தக் குறிப்பும் எங்கேயும் இல்லை. தமிழில் முதலில் உருவான அகராதி, வீரமாமுனிவர் என்பார் இயற்றிய சதுரகராதி ஆகும். 1732-இல் வெளியிடப்பட்ட அந்த நூலில் தீபாவளி குறித்த எந்த தகவலும் இல்லை.

பிராமணரான உ.வே.சாமிநாத அய்யரின் வாழ்க்கை வரலாற்றில்கூட தீபாவளி பண்டிகை குறித்து எந்தத் தகவலும் இல்லை. இன்னும் சொல்ல வேண்டுமெனில், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட தமிழர்கள் தீபாவளியயைக் கொண்டாடியதில்லை.

பொதுவாக, தமிழர் வாழ்வியல் மரபுப்படி, விழாக்கள் அனைத்துமே அறுவடைக்குப் பிந்தைய காலகட்டத்தில் (ஜனவரி மாதத்திற்குப் பின்) கொண்டாடப்படுவது தான் வழக்கம்.

தவிர, வெளி தேசங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்து தங்கியிருந்து பயணக் குறிப்புகளையும் மக்களின் சமூக பழக்கவழக்கங்களையும் எழுதிய வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளில்கூட தீபாவளிப் பண்டிகைக் குறித்து எந்தப் பதிவும் கிடையாது என்று தொல்லறிஞர் பொ. வேல்சாமியார் பதிவுசெய்துள்ளது இங்கே நினைவுகூரத்தக்கது.

ஆனால், கார்த்திகை மாதத்தில் தீபம் அல்லது சுடலையை ஏற்றி சடங்குகளைச் செய்யும் நிகழ்வுகள் இருந்திருக்கின்றன என்றும் அவற்றுக்கும் தற்போது கொண்டாடப்படும் தீபாவளிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

பண்பாட்டு ஆய்வாளரான தொ. பரமசிவனும் பழந்தமிழ்நாட்டில் தீபாவளி என்ற பண்டிக்கை இல்லை என்கிறார். “சமூக வரலாற்றுப் பார்வையில் திருவிழாக்கள்” என்ற கட்டுரையில் இது குறித்து கருத்து பதிவிட்டுள்ள அவர், “தமிழ்நாட்டுத் திருவிழாக்களின் பொதுவான கால எல்லை தை மாதம் முதல் ஆடி மாதம் வரையே ஆகும். தமிழகம் வெப்ப மண்டலத்தில் உள்ள நிலப்பகுதியாகும். எனவே வேளாண் தொழில்சார்ந்த பணிகள் இல்லாத காலப்பகுதிதான் (ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை) தமிழர்களின் திருவிழாக் காலமாக அமைந்துள்ளது.

இதேத் தீபாவளி திருநாள், இராம காதையின்படி, 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்தபின் இராமபிரான் தன் இல்லாள் சீதை மற்றும் தம்பி பரதனுடன் அயோத்தி நகரைநோக்கி ஊர்வலமாக வந்த சமயத்தில் பொது மக்கள் வழிநெடுகிலும் தீபம் ஏற்றி அவர்களை வாழ்த்தி வரவேற்றனர் என்றும் அந்த வழக்கமே பின்னாளில் வட இந்தியாவில் தீபாவளியாக மாறியதாகவும் கதையுண்டு.

உண்மையில், இந்தத் தீபாவளி பண்டிகையை சமண மதத்தில் இருந்து பார்ப்பனர்கள் இறக்குமதி செய்ததாகவும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. எது எவ்வாறாயினும் மலேசியத் திருநாட்டைப் பொருத்தவரை, பல்லின மக்கள வாழும் சூழலில் தீபாவளி பண்டிகை என்பது, இந்தியர்களின்-இந்துக்களின் பெரும் அடையாளமாக பரிணமித்துள்ளது என்பது உண்மைதான்.

தீபாவளி பண்டிகையை ஊரோடு ஒட்ட ஒழுகல் என்னும் சமூக நல்லிணக்கக் கருத்தின் அடிப்படையில் அவரவரின் விருப்பிற்கேற்ப கொண்டாடி குதூகலிப்பதில் பிழை இல்லை. அதற்காக, தீபாவளிக்காக இடைக்காலத்தில் சொல்லப்பட்ட புரான இதிகாச புனைகதைகளை தமிழ் இலக்கியம் என்று வலியுறுத்திச் சொல்வது மாபெரும் தமிழ்த் துரோகம்.

இதை அப்பட்டமாக புரிந்துள்ள மீனா குமாரியும் அதற்கு வழியமைத்துக் கொடுத்த மின்னல் வானொலி நிருவாகி கிருஷ்ணமூர்த்தியும் தமிழ்ச் சமூகத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நாளை எதிர்கொண்டாக வேண்டும்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

(அத்தியாயம் 34)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணத்தின் திருப்பம்

வாணர் குலத்து வந்தியத்தேவன் வலிமையும், இளமையும் உள்ள வாலிபன். வந்த பல இடர்களையும், இடையூறுகளையும் கடந்து தன் நலலெண்ணத்தின் விதிப்பயனாக தன் பயணம் தடைப்படாது இலங்கை சென்றடைந்தான். ஏழு உலகங்களையும் ஆளும் ஆற்றலும், அறிவும் கொண்ட இளவரசர் அருள்மொழிவர்மரைக் கண்டு களிப்படைந்ததுடன், அவரிடம் பல நல்ல பாடங்களையும் கற்றுக் கொண்டான். தன் இதய தேவதை இளவரசி இளைய பிராட்டி தன்னிடம் ஒப்புவித்த வேண்டுகோளை நிறைவு செய்து பெருமிதம் கொண்டு நின்றான். சோழ சாம்ராஜ்ஜியத்தை காக்கும் கடமையும், உரிமையும் உனக்கு உண்டு என்று சொல்லும் தன் உள்ளுணர்வை தலை மேல் தாங்கி பொன்னியின் செல்வர் அருள்மொழிவர்மருக்கு காப்பானாக, நண்பனாக, சொந்தக்காரனாக அவரைச் சுற்றி வந்தான். தன் தந்தையின் கட்டளைக்கு கீழ் படிந்து இளவரசர் தஞ்சைக்குப் புறப்பட்டபோது வந்தியத்தேவனும் அவரைத் தொடர்ந்தான். ஆனால் விதியின் பயன் மதம் கொண்ட யானையால் வழி மாறிவிட்டான். இதனால் மனக் கலக்கம் கொண்ட வந்தியத்தேவன், ஆனையிறவில் சேனாதிபதியும், ஆழ்வார்க்கடியானும் பேசிக் கொண்டதைக் கேட்டான். அந்த மரக் கலம் யாருடையது, எங்கிருந்து வந்தது, எங்கே போகிறது, படகு எதற்காக கப்பலை நோக்கிச் செல்கிறது, அதில் இருப்பவர்கள் யார்? என்ற கேள்விகளுக்குப் பதிலாக, 'அது ஒரு சோழ நாட்டுக் கப்பல்தான். பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலாகவே இருக்கலாம். இளவரசர் அதில் ஒருவேளை போகிறாரோ என்னமோ? ஐயோ தூங்கிப் போய் விட்டோமா? என்ன பிசகு செய்தோம்!' என சேனாதிபதியும், ஆழ்வார்க்கடியானும் உரையாடுவதைக் கேட்ட வந்தியத்தேவன், ஓடிச்சென்று படகில் ஏறினான். கப்பலில் கால் வைத்தான் அங்கு இளவரசரைத் தேடி-னான். வந்தியத்தேவன் கப்பலில் பயணிக்கிறான். அதே வேளை இளவர-சர் தஞ்சைக்குப் போகவென பழுவேட்டரையர் அனுப்பிய கப்பலைத் தேடி வந்தார். என் தந்தையைப் பார்த்து அவர் உள அமைதிக்காக செய்தியைச் சொல்ல வேண்டும். என் தமக்கையைப் பார்க்க வேண்டும். என் நண்பன் வந்தியத்தேவனைக் காக்க வேண்டும். என்னில் வைத்த அன்பினால் எம் பகைவரான அராபியரிடம் அகப்பட்டுக் கொண்டானே! தன் எண்ண ஓட்டங்களிற்கு பதில் கண்டார் இளவரசர். இந்த சிறிய படகில் ஏறி அலைகடலில் ஆழ்கடலில் செல்வேன். என் நண்பனைக் கண்டு கொள்வேன். என்றபடி படகோட்டியின் பக்கம் திரும்பிச் சென்றார் படகோட்டியுடன் பூங்குழலியும், ஊமைராணியும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். இங்கு என்ன கலவரம் என்றபடி பூங்குழலியை அழைத்தார்.

அப்பொழுது பூங்குழலி, 'இவன் என் அண்ணன் அவன் தான் பணத்தாசையால் அந்த கொலைகாரரிற்கு படகு ஓட்டி வந்தான்' என்றாள். படகோட்டி இளவரசர் கால்களில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். அதற்கு இளவரசர், 'படகை எடு என்னை ஏற்றிக் கொண்டு செல் இதுதான் உனக்குத் தண்டனை' என்றார். உடனே படகுக்காரன் படகை தண்ணீரில் இழுத்து விட இளவரசர் கடலை கூர்ந்து பார்த்து, 'அதோ ஓர் கப்பல் தெரிகிறது பிடித்துவிடலாம். விரைந்து வா' என்றார். அப்போது சேனாதிபதி, 'இளவரசே அது திருகோணமலையில் இருந்து வருகிறது. பாத்திபேந்திரன் தான் கப்பலில் வருகிறான். அதுவும் நாம் இருக்கும் திசை நோக்கி வருகிறது' என்றார். 'அப்படியானால் நல்லது தாங்கள் யாரும் என்னுடன் வரவேண்டியதில்லை! பூங்குழலி நீ செய்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன் நீ உன் படகில் ஏறி உன் வழி பேகாகலாம்.' என்றபடி ஊமைராணியிடம் சென்று அவர் பாதங்களை வணங்கி, ஆசி பெற்றுப் புறப்பட்டார் இளவரசர். படகு கப்பலை நோக்கி விரைந்தது. அதைக் கண்ட பாத்திபேந்திரன் மிக மகிழ்ச்சி கொண்டான். இளவரசரை நான் காஞ்சிக்கு அழைத்துச் செல்லலாம் என்று எண்ணினான். அப்போது இளவரசர் படகில் இருந்து கப்பலில் ஏறியதும் நடந்தவை யாவற்றையும் பாத்திபேந்திரனுக்குச் சொன்னார். அத்துடன் 'அராபியர் வசம் இருக்கும் கப்பலில் வந்தியத்தேவன் இருக்கிறான் அவனைக் காப்பாற்ற வேண்டும்' என்று கோரிக்கையும் வைத்தார். அதற்கு பாத்திபேந்திரன், 'இந்த முரட்டு வாலிபன் வந்தியத்தேவன் ஏன் இப்படி பதட்டமான காரியம் செய்தான் இருந்தாலும் அயல் நாட்டாரிடம் அவனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. கப்பலை எப்படியாவது பிடித்துவிட வேண்டும்' என்றான். இந்த விடயத்தைப் பற்றி தன் கலபதிக்கு விளக்கினான். அதற்கு கலபதி, 'வாயுபகவான் துணையிருந்தால் அந்தக் கப்பலைப் பிடித்து விடலாம்' என்றான். சில மணி நேரத்தின் பின் காற்று முற்றிலும் நின்றது. கப்பல் அசைவதும் நின்றது. அப்போது கலபதி, 'சுழி காற்று எங்கேயோ உருவாகிறது. அது எம்மைத் தாக்கப் போகிறது கடல் கொந்தளிக்கப் போகிறது. எமக்கு அபாயம் கடவுள் தான் துணை' என்றான். அந்தக் கடலில் அராபியக் கப்பலில் ஏறிய வந்தியத்தேவன் நிலை என்ன? என்று பார்ப்போம். ஏணியைப் பிடித்து கப்பலில் ஏறிய வந்தியத்தேவன், அப்பொழுதுதான் அது சோழ நாட்டுக் கப்பல் இல்லை, மாறாக குதிரை விற்க வந்த அரபு நாட்டுக் கப்பல் என்பதையும், அதில் உள்ளவர்கள் ராட்சதனைப் போல் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டான். நான் அவரசப்பட்டு விட்டேன் தப்பி ஓட வேண்டும் என்று நினைத்து கடலில் குதிக்க முயன்றான். ஆனால் அவனை அரபு ராட்சதர் அடித்துக் கட்டி, கீழ் தளத்தில் உள்ள அறையில் பூட்டினார்கள். வந்தியத்தேவன் மயங்கி வீழ்ந்து கிடந்தான். சற்று நேரத்தில் விழித்தெழுந்த வந்தியத்தேவன், நான் இங்கு இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் அடியோடு நம்பிக்கையை ஏன் இழக்க வேண்டும். இறைவன் துணை-யும், அறிவும் ஆலோசனைத் திறமும் இருப்பதே மேல் முரட்டு அராபியருடன் மந்திர வாதி ரவிதாசன் எப்படிச் சேர்ந்தான்? இது யாருடைய கப்பல் எங்கே போகிறது? என் அவரச புத்தியால் இப்படி அவதிப் படுகிறேனே! என்று மனம் கலங்கி கிடந்தான். அந்த நேரம் மந்திரவாதி ரவிதாசனும், அவன் நண்பனும் அங்கு வந்தனர். அவனை ஏளனமாகப் பார்த்து, 'தம்பி கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல் வந்திருக்கிறாய். நாம் ஆயிரம் காலத்து அரச குல ரத்தம் பலி கொடுக்க வந்தோம். ஆனால் முடியவில்லை. இப்போது நீயாக முன்வந்துள்ளாய் இருந்தும் உன்னிடம் ஒரு ஒப்பந்தம் செய்ய வந்துள்ளோம். இந்த அராபிய பிசாசுகளை சமுத்திர ராஜனுக்குப் பலி கொடுக்க வேண்டும். அவர்கள் கலிங்க நாட்டிற்கு இந்தக் கப்பலை எடுத்துச் செல்கிறார்கள். நாம் கோடிக் கரையில் அல்லது நாக பட்டினத்தில் இறங்க வேண்டும். அவர்கள் மறுக்கிறார்கள். இவர்களைக் கொல்ல வேண்டும் நீ கை கோர்த்து நிற்க வேண்டும்' என்றனர். அதற்கு வந்தியத்தேவன், 'எனக்கு ஆபத்து வந்தாலும் பறவாயில்லை அநீதி செய்ய தயாராக இல்லை' என்று மறுத்து விட்டான். 'சரி நாங்களே அவர்களைப் பார்த்துக் கொள்கிறோம்' என்று கூறி விட்டு மேற் தளத்திற்குச் சென்றனர். மந்திரவாதி ரவிதாசனும், அவன் நண்பன் தேவராளனும் அங்கு தூங்கிக் கொண்டிருந்த இரு அரபுக்காரரை கொன்று கடலில் வீசினர். மற்றையவர்கள் எழுந்து சண்டை செய்தனர் அந்தப் பெரிய சண்டையை போர்த் திறமை இல்லாத மந்திரவாதியாலும், அவன் நண்பனாலும் சமாளிக்க முடியவில்லை. அதே நேரம் வந்தியத்தேவன் கீழ்த் தளத்தில் இருந்து மேலே வாளுடன் வந்தான் சண்டையிட்டு யாவரையும் கொன்றுவிட எண்ணினான். அப்படியே அரபுக்காரர்களை கொன்றும் விட்டான்.




பின்பு வந்தியத்தேவனைத் தங்கள் கட்சியில் சேருமாறு அழைத்தனர் மந்திரவாதியும் அவன் நண்பனும். அதற்காக தாங்கள் யார் என்றும், என்ன செய்கிறோம் என்றும் வெளிப்படுத்தினர். 'நாங்கள் வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகள் அவரைக் காத்திட சபதம் செய்தவர்கள். இளம் புலி ஆதித்தகரிகாலன் வீர பாண்டியன் தலையை வெட்டி புழுதியில் உருள விட்டு தஞ்சைக்கு கொண்டு சென்று, எங்கள் வீர பாண்டியன் தலையை பல்லக்கில் வைத்து ஊர்வலம் விட்டான். யானைப் பலம் கொண்ட எங்கள் மன்னனை இந்தக் கதிக்கு ஆளாக்கிய சோழ குலத்தைப் பூண்டோடு அழிப்போம். எங்கள் மகாராணி பழுவூர் இளையராணி யாருக்கு முடிசூட்டுகிறாரோ அவரை மன்னனாக ஏற்றுக் கொள்ளுவோம்' என்று சிவந்த விழிகளுடன் கோரமான குரல் கொண்டு கூறி-னான் மந்திரவாதி ரவிதாசன். அவன் நண்பனும் உடல் நடுக்கத்துடன் ஆவேசம் கொண்டிருந்தான். அதற்கு வநதியத்தேவன், 'அப்படியானால் பழுவூர் கிழவனையா நீங்கள் அரசனாக ஏற்றுக் கொள்வீர்கள்?' என்றான். அதற்கு ரவிதாசன், போரில் காயப்பட்டு கிடந்த வீரபாண்டியனை தான் காப்பாற்றுவதாக அவள் வாக்களித்தாள். அதை அவள் நிறைவேற்றத் தவறிவிட்டாள். அவள் துரோகம் செய்துவிட்டாள் அவளை உயிருடன் கொளுத்தப் பார்த்தோம் ஆனால் அவள் சோழர்களை, ஆதித்தகரிகாலரை பழிக்குப் பழி வாங்குவதாக சபதம் செய்தாள். பெரியபழுவேட்டரையர் என்ற கிழவனோடு இருந்து அவர் செல்வாக்கையும், பணத்தையும் நாம் உபயோகிக்க உதவுகிறாள். நீயும் எமக்கு உதவுகிறாயா? என்று கேட்டதுடன், 'சில வேளை உனக்கு அதி-காரம் வரலாம்! நீயே சோழ சிம்மாசனத்தில் ஏறும் வாய்ப்பும் வரலாம்' என்றனர். வந்தியத்தேதவனோ பதில் ஒன்றும் சொல்லவில்லை. இளவரசர் அருள்மொழிவர்மரின் நல்ல கொள்கைகள் மேல் அவனுக்கு பிடிப்பு இருந்தது. 'நீங்கள் எப்படி இந்த அரபு நாட்டவரிடம் மாட்டிக் கொண்டீர்கள்?' என்று கேட்டான். அதற்கு மந்திரவாதி இவ்வாறு பதில் சொன்னான், 'இந்த அரபுக்காரர் குதிரை வியாபாரிகள் இவர்களிடம் இருந்து நாம் திருகோண-மலையில் குதிரைகள் வாங்கினோம். இளவரசரைக் கொல்ல சுற்றிச் சுற்றி வந்தோம். எங்களால் முடியவில்லை. ஊமைராணி என்ற பெண் பேய் தன் மந்திரத்தால் அவரைக் காப்பாற்றினாள். சோழ குலத்து இளநாகம் சோ-னாதிபதியுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டோம். அவர் சோழ நாட்டிற்கு திரும்புகிறார் என்று அறிந்தோம். சரி சோழ நாட்டில் பார்த்துக் கொள்வோம் என்று புறப்பட்டோம் அரபியர் வந்த கப்பல் முல்லைத் தீவிற்கு அருகில் கரை தட்டி உடைந்து விட்டதால் இந்தக் கப்பலை அவர்கள் கைப்பற்றி இருந்தார்கள். எம்மை வழிகாட்டிகளாக அழைத்தார்கள் இப்படித்தான் எங்கள் நட்பு உருவானது' என்றனர். வந்தியத்தேவன் இளவரசரின் இணையில்லா நட்பையும், இளைய பிராட்டியின் இனிய காதலையும் நினைத்தான் இவற்றைவிட சோழ குலத்திற்கு உயிரைக் கொடுக்க வேறு காரணம் வேண்டுமா? என்று எண்ணி அவர்களுக்கு மறுப்புத் தெரிவித்தான் அப்பொழுது அவர்கள் மிகுந்த கோபத்துடன், 'எங்கள் இரகசியம் தெரிந்த உன்னை சமுத்தி ராஜனிற்கு இரையாக்குவோம்' என்றனர்.

அதே பொழுது கடலில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றம் யா-வரையும் நடுங்க வைத்தது. வந்தியத்தேவன் இவர்களை அழித்தொழிப்பது என்று தீர்மானித்திருந்தான். ஆனால் இயற்கையின் சீற்றத்தால் அவனும் நடுங்கிவிடடான். மந்திரவாதியும், தேவராளனும் சமுத்திர ராஜனின் சீற்றம் கண்டு, அதற்கு தப்ப எண்ணிவிட்டனர். உடனே சிறிய படகில் ஏறிவிட்டார்கள் வந்தியத்தேவன் ஏமாற்றம் கொண்டான். பென்னம் பெரிய கப்பலில் தனியாக, இயற்கையின் சீற்றத்தின் மத்தியில் திக்குத் திசை தெரியாது மாட்டிக் கொண்டான். கடற்சுழி வேகத்துடன் வந்து கப்பலில் மோதியது. கப்பல் சுழன்றடித்தது. இங்கு மாலுமியும் இல்லை கடலில் உள்ள கப்பல் பற்றி எந்த விபரமும் தெரியாது. வந்தியத்தேவன் இருந்த அந்தக் கப்பலை மின்னல் ஒன்று தாக்கியதால் பாய்மரத்தில் தீ பற்றியது. வந்தியத்தேவன் தனக்கு மரணம் நிச்சயமாகிவிட்டதை உணர்ந்தான். அந்த இறுதித் தருணத்தில் இளவரசியை நினைத்துக் கொண்டான். இளவரசரை நினைத்துக் கொண்டான். தன் கனவுகள் கடலில் கரைகின்றன! வாழ் நாளின் இறுதித் தருணம் இது. எரியும் கப்பலில் எரிந்து விடாது குளிரான நீரில் கலந்து விடுவோம் என்று எண்ணினான். இருந்தும் அவனுக்கு சிறு நம்பிக்கை! தான் இந்தக் கப்பலில் ஏறியதை சேனாதிபதியும், ஆழ்வார்க்கடியானும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள் அல்லவா? அவர்கள் இதை நிச்சயம் இளவரசரிடம் சொல்லியிருப்பார்கள் இளவரசர் என்னைக் காப்பாற்ற வருவார் என்று அவன் உள்ளுணர்வு சொல்லியது. நம்பிக்கையோடு கப்பலில் நின்றிருந்தான். பாத்திபேந்திரனின் மரக்கலத் தலைவன் இளவரசரை நோக்கி, 'கரிய இருள் சூழ்ந்திருக்கிறது எதையும் பார்க்க முடியவில்லை. இது பெரும் அபாயம் கப்பலோடு கப்பல் மோதினால் இரண்டும் உடைந்து நொருங்கி விடும். சுழல் காற்றை விட இது ஆபத்தாக இருக்கிறது' என்றான். இளவரசரும் 'நானும் அறிவேன்' என்றார். மின்னல் வரும் போதெல்லாம் கப்பலின் ஓரத்தில் நின்று தன் கூரிய கண்களினால் பார்வையை நாலா புறமும் செலுத்தினார். வந்தியத்தேவனை நினைத்து உள்ளம் தத்தளித்தார். ஒரு மின்னல் மின்னியது அப்போது இளவரசர் பாய் மரக் கப்பல் ஒன்று தீப் பற்றியிருப்பதைக் கண்டார். நிச்சயம் இது வந்தியத்தேவன் இருக்கும் கப்பலாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். உடனே கப்பலில் கட்டியிருந்த படகை அவிழ்த்தார். 'என்னுடன் யார் இரண்டு மாலுமிகள் வருகிறீர்கள்?' என்று கேட்டதோடு, 'ஜாக்கிரதை என்னைத் தடுக்கிறவர்களை நான் மன்னிக்க மாட்டேன்' என்று ராஜ கம்பீரத்துடன், அதிகாரத் தோரணையில் கூறினார். பாத்திபேந்திரன் திகைப்புடன் நின்றான். படகு கடலில் சென்றது அது ஆ-வேசக் கூத்து ஆடியது. அத்தனை கொடுமையான சுழிக் காற்று! இளவர-சர் படகில் இருந்த கயிற்றை எடுத்து ஒரு நுனியை தன்னுடனும், மற்றைய நுனியை படகிலும் கட்டி, கடலில் குதித்தார். பெரிய அலை அவரை மோதியது அதை வந்தியத்தேவன் கண்டான். இளவரசருக்கு ஆபத்து என்று நினைத்து அவனும் கடலில் குதித்தான். அதற்குள் அந்தப் பெரிய அலை இளவரசரை வந்தியத்தேவன் இருந்த இடத்தில் எறிந்தது. அவர் உடனே 'வந்தியத்தேவா என்னைப் பிடித்துக்கொள்' என்றார். இருவரும் அலைகளில் மோதி உருண்டார்கள். இருட்டில் கப்பல் இருக்கும் இடம் தெரியவில்லை. சிறு படகு அதில் மோதி உடைந்துவிட்டது. உடைந்த படகின் பாய் மரத்தைப் பற்றிக் கொண்டு கரையைத் தேடினார்கள். தொண்டமான் நதியின் முகத்துவாரத்தில் நின்று இளவரசரை வழி அனுப்பிய சேனாதிபதி, பாத்திபேந்திரன் அவரைப் பத்திரமாக தஞ்சைக்கு அழைத்துச் செல்வான் என்ற மகிழ்ச்சியில் தானும் தஞ்சை புறப்பட எண்ணினார்.

(தொடரும்...)

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---

ஜீவன் முக்தி (பகுதி ) 130

# ஜீவன் முக்தியை வாழ்வதற்கான நேரடியான தீர்வு

ஒவ்வொரு எண்ணம் வரும் பொழுதும், இன்னொரு எண்ணம் உடனடியாக வருகிறது.
சில முக்கியமான சத்தியங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.
ஒவ்வொரு எண்ணத்திற்கு அடுத்து இன்னொரு எண்ணம் வருகிறது. புதிதாக வருகின்ற எண்ணம், பழைய எண்ணத்தை ஒதுக்கி விடுகின்றது. உடனே, புதிய எண்ணம் வந்து, இந்த எண்ணத்தை ஒதுக்கி விடுகின்றது. எண்ணங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. சென்றுகொண்டே இருக்கிறது.

ஆழமாக, நாம் புரிந்துகொள் வேண்டிய விஷயம்.

புது எண்ணம் வந்து, பழைய எண்ணத்தை நகர்த்துகிறது என்றால் என்ன அர்த்தம்?
புது எண்ணம், பழைய எண்ணத்தை விட வலிமையானது.
இப்பொழுது இன்னொரு எண்ணம் வந்து இந்த எண்ணத்தையும், நகர்த்துகின்றது என்றால் அந்த எண்ணம் இதை விட வலிமையானது. அதுதானே உண்மை?

அதிர்ஷ்டவசமாக, நீங்கள், ஒரு நேரத்தில், ஒரு எண்ணம்தான் வைத்திருக்க முடியும். புது எண்ணம் வந்து, பழைய எண்ணத்தை விலக்கிவிடுகிறது என்றால், புது எண்ணம் சக்தி வாய்ந்தது.
எண்ண ஓட்டங்களைப் பற்றி இரண்டு மூன்று இரகசியங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்.

### முதல் சத்தியம்:
ஒரு விநாடியில் ஒரு எண்ணம் மட்டும்தான் வரமுடியும்.

### இரண்டாவது சத்தியம்:
வருகின்ற புது எண்ணம், பழைய எண்ணத்தை நகர்த்திவிடுகின்றது.

### மூன்றாவது சத்தியம்:
ஒரு எண்ணம், எழுந்து பழைய எண்ணத்தை நகர்த்தினீர்களென்றால், அந்த புது எண்ணம், பழைய எண்ணத்தைவிட பலிமை வாய்ந்தது.

இப்போது யாராவது, என்னை நகர்த்திவிட்டு இந்த இடத்தில் உட்காருகிறார்கள் என்றால் என்னைவிட வலிமை வாய்ந்தவர்கள் என்று அர்த்தம்.

ஒரு எண்ணம் வந்து துக்கப்படுத்தினால், உடனே ஒரு கப் காபி குடித்துவிடுங்கள். காப்பி குடிக்க வேண்டும என்கிற எண்ணம் வந்ததும் முந்தைய எண்ணத்தைத் துறந்து விடுகிறோம் இல்லையா?

**எந்தவொரு புது எண்ணமுமே, பழைய எண்ணத்தை ஒதுக்கிவிடுகின்றது.**
நாம் உடனே அடுத்த கேள்வி கேட்போம், அப்போது போயிருந்தது ஆனால் காபி குடித்த பிறகு திரும்பவும் வருகிறதே, என்ன செய்வது?

ஒன்றும் பெரிதாக செய்ய வேண்டாம்.
இன்னொரு கப் காபி குடியுங்கள்.
அவ்வளவுதான்.

ஒருமுறை மரண பயத்தை ஒதுக்கத் தெரிந்துகொண்டு விட்டால், மீண்டும் மீண்டும் ஒதுக்குவது பெரிய வேலை அல்ல. இரண்டாவது முறை ஒரு கப் தண்ணீர் குடியுங்கள் அவ்வளவுதான்.
தினம்தோறும் நித்திய தியானம் செய்யுங்கள்.
ஒரேஒருமுறை முடிந்தால் சி.டி யை உபயோகப்படுத்துங்கள். அதுதான் நல்லது. இந்த தியானம் சூட்சுமமான படிகளைக் கொண்டதால் ஞாபகம் வைத்து செய்வது தேவையில்லாத சிரமம்.

நாள் முழுவதும் கவலை இல்லாமல், துக்கம் இல்லாமல், அன்கிளட்சிட் ஆகவே இருங்கள். இது நடைமுறையில் நீங்கள் அனுபவித்து பார்த்தீர்கள் என்றால்தான் உங்களுக்கு இதனுடைய மகிமை புரியும்.
நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள், என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். உங்களுடைய உடல்நலம், மனநலம், பொருளாதார வளம், குடும்ப உறவுகள் நான்குமே உயர்ந்து விடும். ஏனென்றால், உங்களுடைய சக்தி முழுவதும் துக்கத்திலேயே விரயமாவது தடுக்கப்பட்டாலே உங்கள் சக்தி மேலெழும்பத் துவங்கிவிடும்.

'வேறு ஒரு எண்ணத்தை ஏற்படுத்துவதன் மூலமாக, நம் பயம் அச்சத்திலிருந்து விடுபடுவது எல்லாம் சரி, அதற்கு இரண்டு தரம் தண்ணீர் குடிக்கலாம். அதன்பிறகு என்ன செய்யலாம்?' என்று கேட்டார்கள்.
unclutch ஆக இருங்கள்.
unclutch என்கின்ற ஒரு எண்ணம்.
எப்பேற்பட்ட எண்ணத்தையும் மாற்றக்கூடிய வலிமை வாய்ந்தது.
அடுத்தது, நமக்கெல்லாம் வருகின்ற பெரிய கேள்வி 'நான் unclutched ஆகவே இருந்தேன் என்றால் என் குடும்பத்தை யார் பார்த்துக் கொள்வது, யார் சம்பாதிப்பது' என்று.

நன்றாக ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள. மனம் இல்லாமல் நீங்கள் வாழ முடியும். ஏனென்றால் உங்களுடைய மனம் தொண்ணூறு சகவீதம், துக்கத்தை உருவாக்குகின்ற களமாகத்தான் இருக்கிறது. நீங்கள் வாழ்வதற்கு, நீங்கள் நினைக்கின்ற மாதிரி, உங்கள் மனம் தேவையில்லை.
அதாவது மனம் இல்லாமல் வாழ முடியாது என்று உங்களின் மனம் உங்களை பயமுறுத்தி வைத்திருக்கிறது.

ஒரு சின்ன உதாரணம்.
உங்களுடைய மேலாளர் நீங்கள் இல்லாமல் வேலை நடக்காது என்று உங்களை சமாதானம் செய்துவிட்டால் அவரை எப்படி நீங்கள் மிரட்டுவீர்களோ, நீங்கள் இல்லாமல் வேலை நடக்காது என்று உங்களைச் சமாதானம் செய்துவிட்டால், அவரை எப்படி நீங்கள் மிரட்டுவீர்களோ... நீங்கள் இல்லாமல் வேலை நடக்காது உன்று அவர் நம்பிவிட்டாரென்றால் அவர் என்ன ஆவார்? அவர் அவ்வளவுதான். அவரை எப்படி எப்படி எல்லாம் முடியுமோ அப்படி எல்லாம் மிரட்டுவீர்கள்.

அதேமாதிரித்தான் உங்களுடைய மனமும்.
இன்னொருவர் வந்து, அவரை நகர்த்திவிட்டு உட்கார்ந்தால், அவரைவிட மூன்றாமவர் வலிமை வாய்ந்தவர். அதுதான் சத்தியம். இந்த இரண்டு மூன்று சத்தியங்களை ஆழமாகப் புரிந்துகொண்டீர்கள் என்றால் பல விஷயங்கள், பல துக்கங்கள், பல பயங்கள் கரைந்து விடும்.

என்னிடம் ஒருவர் வந்திருந்தார். 'எனக்கு எப்பவும் மரண பயமாகவே இருக்கிறது, எப்படி அதிலிருந்து மீண்டும் வருவது' என்று கேட்டார்.
அவருக்கு பதிலளித்தோம் 'ஒரு கப் காபி குடியுங்கள். அவ்வளவுதான்' என்று.
அவர் உடனே அரண்டு போய் ஒரு கப் காபி குடித்தால், மரண பயத்திலிருந்து வெளிவர முடியுமா? என்றார்.
நான் கேட்டேன், 'மரண பயம் உங்களுக்கு எப்போதெல்லாம் வருகிறது?'
'இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறது. பயமாக இருக்கிறது' என்றார்.



அவரிடம் 'இப்போதோ, அப்போதோ மரண பயம் எள்றால் ஒரு எண்ணம்தானே? என்றேன். அதற்கு அவர் ஆமாம்' என்றார். காபி குடிப்பது என்ற எண்ணம் உங்களுக்கு வந்த உடனேயே மரணபயம் என்கின்ற எண்ணம் ஒதுங்கிளே ஆகவேண்டும். வேறு வழியே இல்லை. சரியா? என்று கேட்டேன்.
'ஆமாம் உண்மைதான்'
'அப்போது காபி குடிக்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுடைய மரணபயத்தை நகர்த்திவிட முடியுமானால், உங்களுடைய மரணபயத்திற்கு என்ன பலம் இருக்கிறது' என்று சொன்னேன்.
ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள்.
சாதாரணமாக ஒரு கப் காபி குடிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் உங்களுக்கு வருகிறது என்றால் மரண பயம் ஒரு வினாடி ஒதுங்குகிறது.

நீங்கள் கேட்கலாம், 'இல்லை, திரும்ப வந்துவிடுகிறதே?' என்று...
உங்களின் மனம் இல்லாமல் உங்களின் வாழ்க்கை நடக்காது என்று உங்களை அந்த மனமே சமாதானப் படுத்திவிட்டது.
அதளால் எள்ள செய்கிறது? உங்களை எப்படி எப்படி எல்லாம் முடியுமோ, அவ்வாறெல்லாம் மிரட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் உங்களின் தினசரி வாழ்க்கையை நடத்துவதற்கு உங்களின் வாழ்க்கையை முழுமையாக நடத்துவதற்கு உங்களுக்கு உங்களுடைய மனம் தேவை இல்லை.
மனம் கடந்த நிலையில் இருந்தே மனிதன் தன்னுடைய வாழ்க்கையை நடத்த முடியும். இது ஒரு மிக வித்தியாசமான சத்தியம். நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கும்.

ஒரு பதினொரு நாள் மட்டும் முயற்சி செய்து பாருங்கள். இன்றிலிருந்து பதினொரு நாட்கள் எதற்காகவும் கவலைப்படாமல், எதற்காகவும் சிந்திக்காமல் வாழ்க்கையை அப்படியே நடத்திப் பாருங்கள்.
பதினொரு நாட்களில் உலகம் அழந்துபோகுமா? இல்லையே, செத்துப்போய் விடப்போகிறோமா? கட்டாயமாக மாட்டோம்.
பதினொருநாள் தியானம் செய்து செத்துப்போகிறோம் என்றால் உயிரோடு இருந்து மட்டும் என்ன செய்யப்போகிறோம்? சீக்கிரம் போவதே நல்லது. இந்தப் பதினொரு நாட்கள்மட்டும் முயற்சி செய்து பாருங்கள்.

இந்த நான்குமே உயிர்ந்த நிலைக்கு வந்துவிடுகிறது. இதிலே வேறு ஒரு மாயமும் இல்லை. மந்திரமும் இல்லை. உங்களின் உணர்வு, நீங்கள் உயர்கிறீர்கள்.
ஆளால் நம் மனதைப் பிடித்துக்கொண்டே வாழ்ந்து வாழ்ந்து பழகிப் போனதால், மனதை விடுவதற்கு துக்கமும், பயமும் விடாது. ஆனால் நிஜம் அப்படியல்ல. நீங்கள் விட்ட நிமிடமே துக்கமும், பயமும் உங்களை விட்டுவிடும், நீங்கள் விடாதவரை, அவை உங்களை உடும்பு பிடியாய் பிடித்திருப்பது போலத் தோன்றும்.
தொடர்ந்து அன்கிளட்ச் செய்துகொண்டேயிருந்தால் உடும்பாயிருக்கும் மனமே மறைந்து அமைதியாகும். மனம் அமைதியானால் மனதால் ஏற்படக்கூடிய பாதிப்புச் சரியாகும்.
அன்கிளட்ச் செய்வதால் பொங்குகின்ற ஆனந்தம், ஆனந்த சக்தியை ஈர்க்கும். ஆனந்த சக்தி நேராகப் பிரபஞ்ச சக்தியுடன் இணைந்துவிடும். ஆரோக்கியம் நிரந்தரமாகும்.

(தொடரும்...)

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**



# அன்பின் தொனி - 629

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**5. தேவனுடைய பரிசுத்தம்** - The Holiness of God

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாய் இருக்கின்றன. தேவன் ஒருவரே தனித்துவமாகவும், நித்தியமாகவும், மாறாதவராகவும் இருக்கிற பரிசுத்தர். பரிசுத்த வேதாகமம் அவரை ஒரே பரிசுத்தர் என்பதை எப்பொழுதும் தெளிவுபடுத்துகிறது, ஏனெனில் அவருக்குள் சகலதும் திறம்பட நிறைவு பெற்றதாய் காணப்படுகிற நற்குணர். பாவ நிழல்கூட படாத தூயவர். பரிசுத்தம் அவருடைய அதி உன்னதமான தெய்வீக இயல்பு. அவருடைய பரிசுத்தத்தை மேலும் இப்படியாக பரிசுத்த வேதாகமம் விபரிக்கின்றது: தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே.தேவன் பரிசுத்தத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார்.

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை, இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. **- 1 யோவான் 1: 5**

கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்க வரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? **- யாத்திராகமம் 15: 11**

உமது சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவைகள், கர்த்தாவே, பரிசுத்தமானது நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது. **- சங்கீதம் 93: 5**

**6. தேவனுடைய வல்லமை** - The Power of God

தேவ வல்லமை என்பது தேவ பலத்தால் அவர் எதையும் செய்யக்கூடிய தன்மையை உடையவர் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவன் தாம் விரும்பியதை, தமது அளவிடமுடியாத ஞானத்தைக்கொண்டு, பரிசுத்த சிந்தனைக்கு நடப் பிக்க, செயற்பட நினைக்கிறவற்றை செய்து முடிக்கக்கூடிய தான ஒரு வல்லமை. பரிசுத்தம் அவருடைய அலங்காரமாய் இருக்கிற தன்மையைப்போல், அவருடைய வல்லமை சகல இயற்கையின் பரிபூரண அமைப்பிற்கும் உயிர் கொடுத்து செயற்பட வைக்கிறது. இந்த வல்லமையானது பூமியைச் சுளர வைக்கிறது, சூரியனைச் சுற்றிவர வைக்கிறது, அதைப் பிரகாசிக்க வைக்கிறது, வெப்பத்தைக் கொடுக்க வைக்கிறது, அப்படியாக சகல தெய்வீக இயற்கையின் படைப்புகளையும் இந்த வல்லமை ஆட்கொண்டு செயற்பட வைக்கிறது. தேவ வல்லமை செயற்படாதவிடத்து, நித்தியமானதும் நிரந்தரமானவற்றின் ஆளுகையும் விருதாவாகிவிடும். மேலும் இந்த தெய்வீக வல்லமை இல்லையேல் தேவனுடைய இரக்கம் பெலனற்றதாயும், அவருடைய எச்சரிப்பெல்லாம் வெறும் பூச்சாண்டி விளையாட்டைப்போலும், பொம்மையாட்டமாகவும்தான் காணப்படும். தேவ வல்லமை என்பது தேவனைப்போலவே எல்லையற்ற, நித்தியமான, அளவிடமுடியாத, வரையறுக்கப் படாத, எத்தப் படைப்புகளாலும் கட்டுப்படுத்தவோ தோற்கடிக்கவோ முடியாததொன்று.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். **- எபேசியர் 3: 20-21**

கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது, கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது. **- யாத்திராகமம் 15: 6**

கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள், வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள், கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது, தேவரீர் எல்லாருக்கும் தலை வராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர், உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு, எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். **- 1 நாளாகமம் 29: 11-12**

அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமை யோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். **- மத்தேயு 24: 30**

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். **- லூக்கா 1: 35**

பின்பு ஒருநாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறபோது கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள், அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று. **- லூக்கா 5: 17**

வல்லமை தேவனுக்கும், தேவன் ஒருவருக்குமே உரியது. உலகத்திலே எந்த ஒரு படைப்பிற்கும் அவர் அதைக் கொடுத்தாலன்றி, ஒரு அணுவளவேனும் அசைய வைக்க அவற்றிற்கு வல்லமை இல்லை. தேவனுடை வல்லமையை நாம் சுதந்தரித்துக்கொள்ள முடியாது. எந்தவொரு உலகப் பிரசித்தமான அதிகாரமோ அதை அடைய இயலாது, அது அவருக்கே சொந்தமான சொத்து. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன், வல்லமை தேவனுடையது என்பதே. **- சங்:கீதம் 62: 11**

தொடரும்...

# கடந்தவையும் கடப்பவையும் (9)

- உமா மோகன் -

காலையில் குண்டு போட்டால்
மாலையில் எங்கும் போவதில்லை

என்று சொல்லி இருக்கேலாது
அன்று வெடித்தாலும் செல்லவேணும்

வல்வைக் கல்விமன்றக் கொள்கை அப்படி,

கல்வியிற் சிறந்த தனியார் கல்வி நிலையமது
வல்வைச் சந்திக்கு மிக அண்மையில் இருந்தது

சிலம்பு சொல்லும் மதுரை மாநகரின் அழகில்
சிலவற்றை ஏனும் பார்த்திடலாம் - முன்னாளில்

மாடிகளின் அழகு அங்கிருந்த - மணி
விளக்குகளின் அழகு என - கடல்

வர்த்தகத்தில் வசதியானோர் வீடுகள் பல
நேர்த்தியாக இருந்த இடம் - பின்னாளில்

இருந்த இடம் தெரியாமல் அழிந்ததெல்லாம் - ஒன்றாக
இருந்து கொண்டே பார்த்ததுண்டு

நல்ல பல ஆசான்கள் அங்கு வந்தார்
வல்லவராய் மாணவரை வளர்த்தெடுத்தார்

செல்லமாய் அடிக்கடி பேச்சு வாங்கும் - அந்த
நல்ல நாட்கள் மனதைவிட்டு அகலவில்லை

பருத்தித்துறைப் பாங்குகளைப் பார்த்த நாளில்
பெருவிருப்பத்தோடு இங்கும் வந்து சேர்ந்ததுண்டு - அங்கு

தெருத்தெருவாய் புதினங்களைப் பார்த்துவிட்டு- மட்டுமட்டாய்
எடுத்துக்கொண்டு வண்டியில் போய் இறங்கி

வரிசையாய் நிற்கும் வண்டிகளில் ஒன்றினைத்
தெரியாதல் முட்டிவிட்டார் போச்சு அங்கு

'கடகட' என அத்தனையும் விழும் போது
'அடஅட வந்துவிட்டாள்' என

அனைவரும் பார்த்திடுவார் , அவமானம் ஆகிவிடும்
'ஆனைவரும் பின்னே' என்று வாத்தியார்

வாய் சொல்ல கூசாமல் எல்லாரும்
நல்லாகக் கோரசாய்ப் பாடுவார்கள்

அசடு வழியச் சிரித்துவிட்டு அவசரமாய்
அருகிருக்கும் ஒருத்தியை நகரச் செய்து இருப்பதுண்டு - அந்தப்

படபடப்பு மாறுதற்குள் கணக்கு வாத்தியார் - தடியை
எடுத்துக் கையில் வைத்தபடி கேள்வியும் கேட்டிடுவார்

பதில் எப்படித்தான் வரும் உடனே
எதிலும் இப்படித்தான் என்பதுபோல் பேசிடுவார்

பொறியியலாளர் மகளாம் நீ சொல்லாதே
வெளியில் என்பார்
பொறுப்பில்லை என்றும் புறுபுறுப்பார் - அப்போ

அவர் சொல்லால் கோபம் வருவதில்லை - அங்கு
வராச் செல்லால்த்தான் பெருங்கோபம்

ஆறில் இருந்து பத்திற்குப் பிறகும் பலமாதங்கள்
ஓயாத செல்லடியும் குண்டுகளும் - படிப்பின்

இடைநடுவில் துரத்தும் போதும், நாம் ஓயோம்
கடைசிவரை தொடர்ந்திடுவோம் என்பதுபோல்

தினம் தோறும் சென்று வந்தோம்

பத்தாம் வகுப்புப் பரீட்சைப் பெறுபேற்றால் பலரும்
மெத்தப் பெரும் மிடுக்கோடு

விஞ்ஞான கணிதப் பிரிவுக்குள் புகுந்தபோது
விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்துகொண்டு - இனி

வைத்தியர்கள் நாம் என்பதுபோல் திரிந்த நாட்கள் பலவும் உண்டு
தருத்திரம் பிடித்த இரசாயனவியல் இடைநடுவில் - இனி

ஏறாது என்றுணர காலத்தை வீணாக்கா கவரி மான்கள் சில
கலைத்துறையைத் தெரிவு செய்தோம் - அதை

அறிந்த பலர் தமைத் தாண்டிப் போகவர விட்டாரா
'மருத்துவர்கள் வாறார்கள் வழிவிடுங்கோ' என்பார்கள்

கோபம் அது பொங்கி வரும் - எனினும்
காலம் வரும் பதில் கூற எனக்

காத்திருந்த வேளையிலே கனகாலம் கடக்கவில்லை

கல்வி வளாகத்துள் குண்டு மழை பொழிந்திட
நல்லவர் சிலர் அங்கு நசிந்தே செத்திட

சேர்ந்து படித்த சிலர் தேசம் எனப் புறப்பட்டார்
சோர்வின்றிப் படித்தவர் தெருவோரம் சுடப்பட்டார்

சோடியாய் திரிந்தவளோ கரிய உடையைத் தேர்ந்திட்டாள் .

(தொடரும்)

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE · TRANSMISSION · RUSTPROOFING · OILCHANGE · TYRES · AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1336 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 12, 2021

# பிரித்தானியாவில் பிரசுரமாகும் காலாண்டு சஞ்சிகை "கலசம்" 100 வது இதழ் சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தில் வெளியிடப்பெற்றது



பிரித்தானியாவில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் "சைவ முன்னேற்றக் கழகத்தினரால்" வெளியிடப்பெறும் காலாண்டு சஞ்சிகையான "கலசத்தின்" 100 வது இதழ் இன்று கனடாவின் ஸ்காபுறோ நகரில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலய மண்டபத்தில் சிறப்பாக வெளியிடப்பெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கனடா வாழ் அன்பர் டாக்டர் கதிர் துரைசிங்கம் அவர்கள் "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களோடு இணைந்து செய்திருந்தார். ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீதரக் குருக்கள் அவர்கள் ஒத்தாசை வழங்கி இந்த அற்புதமான வைபவத்தை கந்தசஸ்டி தொடக்க நாளன்று நடத்த உதவினார்.

*(தொடர்ச்சி உள்ளே 13ம் பக்கத்தில்)*

# ஒன்றாரியோவில் மூத்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்புக்கள் எமது அரசிற்கு அதிகரித்துள்ளன என்கிறார் அமைச்சர் றேமண்ட் சோ



"ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட்-19 இன் தாக்கத்திற்கு பின்னர் பல சவால்களை எமது அரசாங்கம் எதிர்கொள்கின்றது. இந்த நோய்த் தொற்றிலிருந்து ஒன்றாரியோ மக்களை காப்பாற்றும் பொறுப்புக்களுக்கு அப்பால் . மாகாணத்தில் உள்ள மூத் தோரின் நலன்களைப் பேணுதல் மற்றும் அ வர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகிய பணிகள் அதிகரித்துள்ளன. இந்த வேளை-யில் இங்கு மூத்தோரின் **(SENIORS)** எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்புக்கள் எமது அரசிற்கு அதிகரித்துள்ளன."

இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாண மூத்தோர் மற்றும் வசதிகளை பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அமைச்சர் றேமண்ட் சோ.

ரொறன்ரோ பெரும் பாகத்தில் உள்ள தமிழ் மொழி சார்ந்த ஊடகவியலாளர்களுக்ககாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த விசேட சந்திப்பின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# பொன்னாடையின் சிறப்புக்கள் பற்றி கேட்டறிந்த ஒன்றாரியோ கல்வி அமைச்சர் Stephen Lecce



கடந்த செவ்வாய்க்-கிழமையன்று 'உதயன்' பத்திரிகையின் அலுவலகத்திற்கு ஒன்றாரியோ கல்வி அமைச்சர் **Stephen Lecce** சக அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் சகிதம் வருகை தந்தபோது. பிரதம ஆசிரியரின் வேண்டுகோளிற்கு அமைய அவருக்கு வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அப்போது அமைச்சர் தனக்கு முதற் தடவையாக இவ்வாறான கௌரவம் கிடைப்பதாகக் கூறி அருகில் நின்ற உதயன் பிரதம ஆசிரியர் மற்றும் லோகன் கணபதி ஆகியோரிடம் பொன்னாடையின் சிறப்புக்கள் பற்றி கேட்டறிந்து கொள்ள விரும்பினார். (படம்: நரேன்)

# யோர்க் பல்கலைக் கழகம் வழங்கிய கல்விக் கட்டண தவிர்ப்புச் சலுகையை பயன்படுத்தி முதுகலைப் பட்டம் பெற்ற தமிழ் பேசும் 87 வயது அன்னை ஒருவர்



கனடாவில் இயங்கிவரும் தலை சிறந்த யோர்க் பல்கலைக் கழகம் வழங்கிய கல்விக் கட்டண தவிர்ப்புச் சலுகையை பயன்படுத்தி முதுகலைப் பட்டம் பெற்ற தமிழ் பேசும் 87 வயது அன்னை ஒருவரை இந்தச் செய்தியின் ஊடாக அறிமுகம் செய்வதில் 'கனடா உதயன்' மற்றும் 'நண்பன்' ஊடக நிறுவனங்கள் பெருமை கொள்கின்றன.

இலங்கையைப்பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் பேசும் அன்னை ஒருவர் கனடாவின் யோர்க் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற மூத்த மாணவி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# இலங்கை அரசின் இனப்படுகொலை தொடர்பாக தமிழர் உரிமைக் குழுவானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடும் முயற்சிகளுக்கு புலம் பெயர் தமிழர்கள் ஆதரவு தர வேண்டும்.

## ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தமிழர் உரிமைக் குழுவின் பேச்சாளர் கற்பனா நாகேந்திரா வேண்டுகோள்

"மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமா-னச் சட்டங்கள் ஆகியவற்றின் மொத்த மீறல்களுக்காக இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முதன்முதலில் முயற்சி செய்யத் தொடங்கி 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்றிலிருந்து, இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலையானது, தடையின்றித் தொடர்கிறது. இந்தப் பின்னணியில், தமி-ழர் உரிமைக் குழுவும் மற்றும் ஏனைய தரப்பினரும் உலகளாவிய அதிகார வரம்பு மற்றும் சட்டத்தின் மூலம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இடைக்கால நீதி-யை இடைவிடாமல் தேடுவதைத் தவிர, வேறு வழி இல்லை."

இவ்வாறு ரோறன்ரோ ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தமிழர் உரிமைக் குழுவி-ன் பேச்சாளர் கற்பனா நாகேந்திரா வேண்டுகோள் விடுத்தார்

*(தொடர்ச்சி உள்ளே 13ம் பக்கத்தில்)*




தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker